வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
# SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆடி திங்கள் 17-ம் நாள் (1—8—1965) ஞாயிற்றுக்கிழமை ரபி. ஆகி 3 | இதழ் 10

# தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரச்சினை பற்றி மீண்டும் பேச்சு வார்த்தைகள்

தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரச்சினை சம்பந்தமாக மேலும் உயர் கட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெறலாம் என்று செய்தி அறிந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது. அரச சேவையில் சேர்ந்த புதிய தமிழ் ஊழியர்கள் மூன்றுண்டு காலத்துள் சிங்கள மொழித் தகைமை பெற வேண்டுமென்ற நிபந்தனைக்குத் தமிழரசுக்கட்சி வட்டாரத்திலும், எழுது வினைஞர் சங்க வட்டாரத்திலும் பலத்த ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இம் முயற்சிகள் எடுக்கப்படுவதாக நம்பப்படுகிறது.

தமிழ் அரசாங்க ஊழியர்களின் எதிர்காலம் பற்றி கடந்த வாரம் அமைச்சரவை எடுத்த முடிவு தமிழ் ஊழியர் மத்தியில் இரண்டு வித அபிப்பிராயத்தை உருவாக்கியுள்ளது.

1956-ம் ஆண்டுக்கு முன்னர் சேவையிற் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் தங்கள் நிலை பற்றி அமைச்சரவை எடுத்த முடிவை வரவேற்றுள்ளார்கள். ஆனல் 1956 செப்டம்பருக்குப் பின்னர் சேவையிற் சேர்ந்த ஊழியர்கள் மூன்று வருட காலத்துள் அரச மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என்று அமைச்சரவை செய்து கொண்ட முடிவு கண்டு பலத்த ஏமாற்றமும், அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

புதிய சேவையாளர் பற்றிய அமைச்சரவையின் முடிவில் மாற்றம் ஏற்படுத்தும் வண்ணம் உயர் கட்டப் பேச்சுவார்த்தை ஒன்று விரைவில் நடைபெறலாம் என்று நம்பகமான வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இப் பேச்சுவார்த்தையின் போது புதிய சேவையாளர் பற்றிய அமைச்சரவைத் துணைக் குழுவின் முடிவும், அரசாங்க ஊழியர் நிலை பற்றி ஐ. தே. கட்சித் தேர்தல் அறிக்கையும், தமிழ் ஊழியர் நிலை பற்றிய தமிழரசுக் கட்சி முடிவும் ஆராயப்படுமென்றும்; இம் மூன்றின் பொது அடிப்படையில் ஒரு முடிவு எடுக்கப்படுவது சாத்தியம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பீலிக்ஸ்—டயஸ் உறவால் சுதந்திரக் கட்சியுள் பூசல்

### மகாநாயக்காவைச் சந்தித்தது ஏன்?

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, திரு. என். கியூ. டயசுடன் சேர்ந்து மல்வத்தை மகாநாயக தேரோவைச் சந்திக்கச் சென்றது, சுதந்திரக்கட்சியுள் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. மலைநாட்டுச் சிங்களவர்கள் மத்தியில் இவர்கள் ஆரம்பிக்க விருக்கும் வகுப்பு வாத இயக்கத்துக்கு மகாநாயக தேரோவின் ஆதரவைத் தேடவே இவர்கள் சென்றிருக்க வேண்டுமென்றும் கூறப்படுகிறது.

சுதந்திரக்கட்சி உறுப்பினரல்லாதவரான திரு. என். கியூ. டயசுடன், திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, சுதந்திரக்கட்சிக்கோ, திருமதி சிறிமாவோவுக்கோ தெரியாமல் சென்று, மகாநாயகதேரோவைப் பார்த்துத் திரும்பியசெய்தி தெரிந்ததே. இதைத் தொடர்ந்து அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ள பெரும் பூகம்பம் சுதந்திரக்கட்சி தலைமைப் பீடத்துக்குள்ளும் பெரும் புயலை உருவாக்கி விட்டதாம்.

சுதந்திரக்கட்சி தலைமைப் பீடம் உடனடியாக திரு. டயஸ் பண்டாரநாயகா மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கட்சிப் பிரமுகர்கள் வற்புறுத்த ஆரம்பித்துள்ளனராம்.

சுதந்திரக்கட்சிக் கொள்கைகளுக்கு முரணானபல நடவடிக்கைகளில் திரு. பீலிக்ஸ் ஈடுபட்டு வருகிருரென்று பல நாட்களாகவே கட்சிக்குள் தலை காட்டிக் கொண்டிருந்த வதந்தி இத்தால் உண்மையாகி விட்டதெனக் கூறப்படுகிறது.

மலைநாட்டில், தோட்டப் பகுதிகளில் தீவிரமான வகுப்பு வாத இயக்கம் ஒன்றினை நடாத்த திரு. பீலிக்ஸ், திரு. என். கியூ. டயஸ்போன்ருர் திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கு மல்வத்த மகாநாயக தேரோவின் ஆதரவைப் பெறுவதற்காகவுமே இவ்விருவரும் சென்றிருந்ததாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

மலைநாட்டிலிருந்து

## கதிர்காம யாத்திரை செல்லும் தொழிலாளர்களிடம் கொள்ளை

—————ஃ—————

### பயிற்றப்பட்ட ஒரு குழு பக்குவமாக இயங்குகிறது

பஸ் வண்டிகள் மூலமாகவும் ரயிலிலும் கதிர்காம யாத்திரை செல்லும் மலைநாட்டுத் தோட்டத்தொழிலாளர்களை மடக்கிக் கொள்ளையடிக்க ஒரு கூட்டம் திட்டமிட்டுச் செயலாற்றி வருவதாக நமது மலைநாட்டு நிருபர்கள் அறிவித்துள்ளனர். பொருட்களையும் பணத்தை யும் கொள்ளையடிப்பதுடன் மட்டுமல்லாது சூது விளையாட்டுகளின் மூலமும் தொழிலாளர்களின் பணத்தை இக்கொள்ளைக் கூட்டத்தினர் அபகரித்து விடுகின்றனராம்.

கதிர்காமக் கொடியேற்றத்தைத் தொடர்ந்து மலைநாட்டு யாத்திரிகர்கள் இம்முறை பெருந்தொகையாக கதிர்காமம் செல்லத் தொடங்கிவிட்டனர். தொடர்ந்து செல்வதற்கும் பல யாத்திரிகர்கள் ஆயத்தங்களைச் செய்து கொண்டுள்ளனர்.

ரயிலிலும் பஸ்ஸிலும் பிரயாணம் செய்யும் தோட்டத் தொழிலாள யாத்திரிகர்களின் உடமைகளையும் பொருட்களையும் அபகரித்துவிடவும், பணத்தைப் பறித்துவிடவும் நன்கு பயிற்சி பெற்ற முடிச்சுமாறிகள் கூட்டாகச் சேர்ந்து இயங்க ஆரம்பித்துள்ளனர். ரயிலில் அனேகமாக சூது விளையாட்டுகளை ஆரம்பித்து அப்பாவித் தொழிலாளர்களை ஆசைகாட்டி மோசம் செய்து வருகிறது இக்குழு. சில சந்தர்ப்பங்களில் பயமுறுத்தியும் தொழிலாளர்களின் உடமைகள் கவரப்பட்டு வருகின்றன.

கதிர்காமத்துக்கு யாத்திரை செல்லும் தமிழ்த் தொழிலாளர்களையே இக்குழு தாக்கித் துன்பம் விளைவிக்க ஆரம்பத்திருப்பதனல் பின்னணியில் ஏதாவது சில தீய சக்திகள் இயங்குகின்றனவோ என்று கருதவேண்டியிருக்கிறது.

### வேண்டுகோளும் எச்சரிக்கையும்

மஸ்கெலியாவிலுள்ள நகரவாசிகள் சங்க உறுப்பினர்கள், இலங்கைப் போக்குவரத்து சபையையும், புகையிரத அதிகாரிகளையும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி வேண்டி

(9-ம் பக்கம் பார்க்க)

### உள்ளே

★எம். ஜி. ஆர். செய்த தவறுகள்—12ம் பக்கம்
★திரைப்படப் போட்டிக் கூப்பன்—13ம் பக்கம்

## உங்களுக்குத் தேவையா?

எழில்மிகு சருமத்துடனும் வனப்பு மிகு வதனத்துடனும் காண்போர் மனதை கவரும் அழகு லாவண்யத்துடன் திகழவேண்டுமா? புராதன ஏடுகளிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட அற்புத அழகு சாதனம்!

விபரங்களுக்கு எழுதவும்



கருணவத்தி
திசாநாயக்க,
208, கண்டி ரோட்
கம்பளை. போன் : 454

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# பறவைகளின் காதல் வாழ்க்கை

'காதல்' என்ற பதம் ஒரு காந்தம் போன்றது. உயிருள்ள எப்பொருளையும் தன் வயப்படுத்தும் திறன் இக்காதலுக்குண்டு. முக்கியமாக இவ்வுணர்ச்சி எல்லா உயிரினங்களிடத்தும் காணப்படும். ஆற்றிவு பெற்று, கூர்ப்பின் உச்சியில் இருக்கும் மனிதனுக்கு மட்டும்தான் 'காதல்' செய்யத் தெரியும் என்று எண்ண வேண்டாம். உயிர்ப் பொருளனைத்திலும், குறிப்பாக விலங்குகளிடத்தில் பல வகையான காதலாடல் முறைகளைக் காணலாம். விலங்குகள் என்று கூறுமிடத்து பறவைகளையும் குறிக்கும். பறவைகளாவது காதல் புரிவதாவது என்று ஆச்சரியப்படாதீர்கள். மனிதனைக் காட்டிலும் சிறந்த முறையில், சீரிய பண்புடன் காதல் புரியும்முறை பறவைகளிடத்தில் காணப்படுகின்றது என்றதும், ஆச்சரியப்படாதீர்கள். பஸ் நிறுத்தும் இடங்களிலும், படமாளிகைகளுக்கு முன்னாலும், கடற்கரைகளிலும், கண்டோர் நாணும் வண்ணம் கேவலமான முறையில் காதல் செய்யும் பழக்கம் பறவைகளிடத்தில் கிடையாது. அதுமட்டுமல்ல அவை தன்னடக்கமும், ஒழுக்கமும் உள்ளவை என்று கூறப்படுகிறது.

பறவைகள் ஒரு குறிக்கப்பட்ட பருவ காலத்தில் மட்டுமே இனவிருத்தி செய்யும். ஆதலால் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாளத் தேவையில்லை என்பது சொல்லாமலே விளங்கும். இடை வெப்பநிலைப் பிரதேசங்களிலுள்ள பறவைகள் வசந்த காலத்தில் இனவிருத்தி செய்ய ஆரம்பிக்கும். அப்பொழுது உள்ள அதிக சூரிய வெளிச்சம் இனவ்ருத்துக்கு ஏற்றதாயிருக்கும். இத்துடன் இக்காலத்தில்தான் பறவைகளின் சனனிகளும் விருத்தியடையும். சனனிகள் முதிர்ச்சியடைய, முதிர்ச்சியடைய பறவை இனங்களின் நடத்தையிலும் மாற்றங்கள் ஏற்படும். மாரிகாலத்தில் கூட்டத்தாருடன்திரிந்த பறவைகள், தனித்தனியே வாழத் தலைப்படும். உதாரணம— பன்ரிங்குகள் (Buntings) இத்துடன் ஆண் பறவையின் மெல்லிய குரலானது, சத்த மிகுந்த, கனத்த, இனவிருத்திக்கான குரலாக மாறும். அதாவது ஆண் பறவை கீதம் பாடத் தொடங்கிவிடும். மேலும், கபச் சுரப்பி எனப்படும் ஒரு சுரப்பியிலிருந்து வரும் சுரத்திலின் காரணமான துணை இலிங்க இயல்புகளும் தோன்றும். அதாவது கொண்டைகள் முளைத்தல், சிறகுகள் கவர்ச்சியான நிறம் பெறுதல் முதலியனவாம். இனப் பெருக்கற் காலத்தின் போது ஆண் பறவைகளை, பெண் பறவைகளினின்றும் இலகுவாகக் கண்டறிந்து கொள்ளலாம்.

## காதற்கீதம்

காதலாடல் எனும் புணர்ச்சியின் ஆரம்ப நிலையில் கீதம் பாடுதல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாய் இருக்கும். அதாவது, கீதம் பாடுதல் புணர்ச்சி எனும் வீட்டுக்குச் செல்வதற்கான முதற்படி எனலாம். கீதம் பாடுதல், முதன் முதலில் ஆணையும் பெண்ணையும் ஒருங்கே சேர்ப்பதற்கு வழிவகுக்கும். இத்துடன் ஒன்றையொன்று அடையாளமறிந்து கொள்வதற்கும் இவ்வினிய கானம் உதவியாய் இருக்கும். மனிதர் இவ்வாறான கீதம் பாடும் முறையில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. ஆனல் நமது படக்காட்சிகளில் காதல் செய்ய ஆரம்பிக்கும் முன்பே கானம் பாட ஆரம்பித்து விடுவார்கள்.

இயற்கையான வாழ்க்கையில் இவ்வாறு நடப்பது அரிதிலும் அரிது. பறவைகளைப் பார்த்தபின்பு தான் இவ்வாறான காட்சிகளை திரைப்படங்களில் புகுத்தினர்களோ தெரியவில்லை. புறு, வானம்பாடி, போன்ற பறவைகளில் கீதம் பாடுவது சூல் கொள்ளலைத் தூண்டுவதற்குக் காரணமாய் இருக்கும் எனக் கூறப்படுகிறது. கீதம் பாடுதல், பெண் பறவைக்கு முன்னால் சிறகை விரித்து ஆடுதல் போன்ற காதலாடல் நிகழ்ச்சிகள் பிற ஆண் பறவைகளுக்கு எரிச்சலை உண்டாக்கக் கூடும். இதனால் ஆண் பறவைகளுக்கிடையில் சண்டையும் ஏற்படக்கூடும். இதனல் காதலாடல் நிகழ்ச்சிகள் கோபாவேச நிகழ்ச்சிகளாக மாறக்கூடும்.

ஆனல் காதலாடல் நிகழச்சிகளுக்கும், கோபாவேச நிகழச்சிகளுக்குமிடையில் பெரும் வித்தியாசங் காணப்படும். எதிர் வரும் பறவை ஆணு பெண்ணு என்று அறிய முடியாத, ஒரு ஆண் பறவை முதலில் கோபாவேசநிகழ்ச்சிகளையே வெளிப்படுத்தும். இதனைக் கண்ட மற்றையது சண்டைக்கு வராது, சாந்தமாக எதிர் நோக்கி வருமாயின் உடனே ஆண் பறவை காதலாடல் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தும். ஈற்றில் இரண்டும் ஒன்று சேர்ந்து புணர்ந்து, அடை காத்து, உணவுண்டு வாழும்.

## ஆண்களே அழகுடையவர்கள்

காதலாடல் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துவதில் ஆண் பறவைக்கும், பெண் பறவைக்கும் இடையில் வேறுபாடு காணப்படும். பறவை இனங்களில் ஆண்பறவையே அழகானதாயும், பல நிறங்களைக் கொண்டதாயும்இருக்கும். உதாரணமாக மயில், வான்கோழி முதலியபறவைகளைப் பார்ப்பீர்களாயின், இது புலப்படும். ஆண் மயிலே, பெண் மயிலை விட அழகானதாயும் நீண்ட, பல நிறங்களைக் கொண்ட தோகையை உடையதாயும் இருக்கும். ஆனல் மனித இனத்தில் இவ்வாறில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதனல் பெண்கள் அழகிற் சிறந்தவர்கள் என்று அர்த்தமாகாது. அவர்கள்பார்ப்பதற்கு அழகுபோல், தோற்றமளிக்கிருர்கள் அவ்வளவுதான். ஆனல் ஆண் பறவைகளோ இயற்கையாகவே அழகு நிறைந்தனவாயிருக்கும். ஒப்பனை எதுவுமின்றி, அலங்காரஞ் சிறிதுமின்று ஆண் பறவைகள் காணப்படும். ஆண் பறவைகளின் அலகு, கண்ணின் புருவம், இறக்கைகளின் நீளம் ஆதியன யாவும், பெண் பறவைகளைக் காட்டிலும் சிறப்பாகவும், அழகாகவும் அமைந்திருக்கும். ஏன் சாதாரணமாக நமது வீடுகளிலுள்ள கோழிக்கும், சேவலுக்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். சேவல் எவ்வளவு கம்பீரமாயும், அழகாயும் இருக்கின்றது. ஆகவே இனியாவது நமது பெண்கள் ஆண் இனத்தின் அழகை உணர்வார்களாக.

காதலாடல் நிகழ்ச்சிகளை ஒரு பறவை இன்னெரு பறவைக்கு வெளிப்படுத்தும் அல்லது இரண்டுமே ஒன்றுக்கொன்று வெளிப்படுத்தும். இவ்வாறு செய்வதனல் ஆணும் பெண்ணும் ஒருங்கு சேர்நது சில நிமிடங்களுக்கு அல்லது சில வருடங்களுக்கு வாழும். பெரிய உருவமுடைய பறவைகள் சோடி சோடியாக நீண்ட காலத்திற்கு வாழும். வாத்துக்கள் போன்ற சில பறவைகள் சனனிகள் முதிர்ச்ச அடைவதற்கு முன்னரே, சோடிகளாகச் சேர்ந்து கொள்ளும்.

பின்னர் காதலாடலில் ஈடுபடும். இதன் பின்னரே, புணர்ச்சி, சூல் கொள்ளல் முதலியன நிகழும். இவை யாவும் நடைபெறுவதற்குச் சில நாட்கள் செல்லும். பறவைகள் ஒன்று சேர்ந்து, புணர்வதற்கு பிற விலங்குகளைக் காட்டிலும் அதிக தூண்டுதல் தேவை. இவ்வாறு காணப்படுவதற்கு இரு காரணங்கள் உள.

ஒன்று, இவை எந்நேரமும் ஓய்வற்றுப் பறந்து கொண்டயிருக்கும். இரண்டாவது, ஆண பெண்ணை இறுகத் தழுவிக் கொள்ள முடியாத நிலை. இக் காரணங்களால்தான், ஆண் பறவை பல வழிகளைக் கையாண்டு, பெண் பறவைக்கு உணர்ச்சி ஏற்ற முறபடுகிறது. ஆகவேதான் காதலாடல் பறவைகளின் வாழ்வில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. இலிங்க உணர்ச்சியைத் தூண்டி, கூடு கட்டுதல், அடைகாத்தல், குஞ்சுகளைப் பாதுகாத்தல் ஆகிய முக்கிய தொழில்களைச் செய்வதற்கு வேண்டிய நிலையை ஆணிலும்,பெண்ணிலும் ஏற்படுத்துவது இக் காதலாடல் நிகழ்ச்சியேயாம். இவ்வுணாச்சி போதுமானதாயில்லாது விடின் இனப்பெருக்கல் முறைகள் எந்நேரத்திலும் தடைப்படுதல் கூடும். ஆகவே சூல் கொள்ளல், காதலாடலில் தங்கியுள்ளது எனலாம். பறவைகளுக்கு மேற்கூறிய கருமங்களில் ஏதாவது தடங்கல் ஏற்படின், அல்லது ஒன்றையொன்று தூண்டாது விடின் முட்டைகளை அடைகாக்காமலே விட்டுவிட்டுப் போய்விடும். இந்நிகழ்ச்சி பொதுவாகப் புருக்களிடையே காணப்படும்.

காதலாடல் நிகழ்ச்சியானதுபறவைக்குப் பறவை வேறுபடும். ஆணும் பெண்ணும, ஒரே நிறத்தையும் வடிவத்தையும் உடையனவாய் இருந்தால், வழக்கமாக இரணடுமே காதலாடலில் ஈடுபடும். உதாரணமாக உச்சியில் கொண்டையுடைய கிறெபெஸ் (Grebes) எனும் ஒருவகைப் பறவைகளைக் கூறலாம். ஆணும், பெண்ணும், நீரின், மேல் நீந்தியபடியே, ஒன்றையொன்று எதிர் நோக்கி வந்து, தலையை ஆட்டுதல் ஒன்றையொன்று அலகால் கொத்துதல் போன்ற பல செ E ல்களில் ஈடுபடும். இவற்றுள் ஆண்பறவையானது அதிக நிறமுடையதாயும், விசேட கொண்டைப் பூவை உடையதாயும் இருக்கும். ஆண் பல காதலாடல் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்த, இவற்றைப் பெண் பறவையானது பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கும். மனித இனமும் இதற்கு விதிவிலக்கல்ல. இவ்வாறு செய்து கொண்டிருக்கும் ஆண் திடீரென ஒரு வகைச் செயலினல் பெண்ணை ஆட்கொள்வது போல் நடந்து கொள்ளும். இவ்வாறு பலதரப்பட்ட செயல்களைச் செய்த பின்பே புணரும்.

ஆண்மயில் காதலாடலை வெளிப்படுத்துவது விநோதமாயிருக்கும். முதலில் தனது தோகையை விரித்து, நிறங்குறைந்த பகுதியாகிய தோகையின் பிற்பகுதியைப் பெண்ணுக்குக் காட்டியபடியே அதன் அருகே வரும், பின்பு திடீரென மறுபுறம் திரும்பி, புள்ளியிட்ட பகுதிகளைக் காட்டி, வாலை ஒருவகை ஓசை உண்டாகும்படி அசைத்து, ஒருவகைச் சத்தமிடும். இதைப் பார்த்த பெண் மயில் அப்படியே சொக்கிவிடும். காதலாடல் நிகழ்ச்சிகளின் போது இவ்வாறான ஒருவகை விநோதமான சத்தமும், செயலும், பொதுவாக எல்லாப்பறவைகளிடத்துங் காணப்படும். இவ்வாறான சத்தமும், செயலும், பெண் பறவையின் காம உணர்ச்சியைத் தூண்டி அதனை புணர்ச்சிக்கு விருப்பமுள்ளதாக ஆக்கக்கூடும் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இக் காதலாடல் நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை பறவைகளின் அன்றுட வாழ்க்கையில் நடைபெறும் செய்கைகளின் திரிபுகளே எனக்கருதப்படுகிறது. ஏனெனில், பல பறவைகள், காதலாடல் புணர்ச்சி ஆகியவற்றேடு, வினை முறை ஊட்டல் (Ritual feeding) எனும் ஒரு நிகழ்ச்சியும் கூடவே நடைபெறும். இந் நிகழ்ச்சியில் ஆண் பறிவையானது பெண்ணுக்கு உணவு ஊட்டும். பெண் பறவையானது குஞ்சாயிருந்த போது எவ்வாறு தாயிடமிருந்து உணவைப் பெறுவதற்காக நடந்துகொண்டதோ, அவ்வாறே ஆணிடமிருந்து உணவைப் பெறும் போதும் நடந்து கொள்ளும். உணவு உட்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல, ஆணே அவ்வுணவை ஊட்ட வேண்டும் என்பதற்காகவே பெண் பறவை இவ்வாறு நடந்துகொள்வதாகத் தெரிகிறது மனித இனமும் இதைப் பின்பற்ற வேண்டும் என்ற நியதி கிடையாது. றெபின் எனும் பறவைகளில், பெண் பறவையானது அருகில் உணவு இருந்தாலும் தானுக உணணுது, ஆண் பறவையை அவ்வுணவை ஊட்டும்படி கெஞ்சுமாம். என்னே அவர் தம் அன்பு! "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்". எரிங்கு (Herrings) எனப்படும் ஒருவகை கடற்பறவை இனங்களில் பெண் பறவையானது மீனைக் கொணர்ந்து ஆணின் முன் வைத்து விட்டு அதனை தனக்கு ஊட்டிவிடும்படி மன்ருடுமாம். இவ்வாருன பல சுவையான நிகழ்ச்சிகளை நாம் பறவைகளின் காதல் உலகின் காணக் கூடியதாய் இருக்கின்றது.

## உணவு ஊட்டல்

பெண்ணுக்கு, ஆண்உணவு ஊட்டுவதுடன், ஒன்றின் அலகை, மற்றையது கொத்துவது, முட்டுவது போன்ற நிகழ்ச்சிகளும், காதலாடல் நிகழ்ச்சிகளாகும். காதலாடலின் போது அலகுதலானது (Billing) அண்டங் காகம், கடற்பறவைகள், கிறெபஸ் ஆகிய பறவைகளிடத்தில் காணப்படுகின்றது. வாயின் உட்புறம் அதிக நிறமுடையதாய் இருக்கும். சில பறவைகளில் பச்சையாயும், இன்னும் சிலவற்றில் மஞ்சளாயும் இருக்கும். காதலாடும் போது ஆண் பறவை திடீரென வாயைத் திறந்து பெண்ணை திணறடித்து விடும். பின்னர் பெண் பறவையைத் தன் வயப்படுத்திக் கொள்ளும்.

புணர்ச்சிக்கு முன்னர் காதலாடும்போது பெண் பறவை, சிறிய குஞ்சைப் போன்று நடந்துகொள்ளும். சிட்டுக்குருவி போன்ற பறவைகள் இரு சிறகையும் தொங்கவிடடுக் கொண்டே, தன்னைக் காட்டிலும் பெரிய பறவையைக் கண்டு பயந்து குஞ்சு போன்று நடந்து கொள்ளும். இந் நடத்தை

(14-ம் பக்கம் பார்க்க)

-சின்னையா சிவநேசன்-

## கவிதை எனும் வேல் தாராய்

—'கலையரசன்'—

ஆடுகின்ற சதங்கை ஒலி சலசலக்க
அகில மெல்லாம் உன்னடியில் நிலைமறக்க
வாடுகின்ற பயிர் உயிர்க்கும் கீதம்மீட்டி
வதைக்கின்ருய் என்னுளத்தைச் சுருதிகூட்டி
தேடுகின்ற செல்வமெலாம் நீயே இன்பம்
சேர்க்கின்ற கலைத்தெய்வம் நீயே என்று
பாடிஉன்னை அழைக்கின்றேன் வா...வா...
பசிதீர்க்கும் கவிதைமொழி தா...தா...!

பண்ணிசைக்கும் குயிலுக்குக் குரலாய் நின்ருய்
பனிதோயும் மலருக்கு அழகாய் நின்ருய்,
எண்ணிரண்டு பதிஞறு எழிலாய் வந்தாய்,
எழில்காட்ட தோகையுடன் மயிலாய்வந்தாய்,
விண்ணளக்கும் தண்மதியாய் இரவியாளுய்
விரைந்துவரும் முகில் என்னும் புரவியாளுய்
கண்மயங்கும் கலைப்பொருளாய் கனிவுதந்தாய்
கவினழகே இயற்கையெனும்கவிதைத்தாயே

பொங்கிவரும் மார்பகம் போல் பூமித்தாய்க்கு
புதுமையுடன் அழகுதர மலைகளானுய்
கங்குலுடன் பகல் தந்தாய் கருமம் ஊட்ட
கடவுள் எனும் நிலை கொண்டாய்
காலம் வென்ருய்
தென்றல் எனும் சுகம்தந்து இன்பம் சேர்க்கும்
திருவாகி கலையாகி ஒளிரும் மாதா...
வென்றிடவே கவிதை எனும் வேலைத் தந்து
வித்தைபல காட்டிவர அனுப்புவாயே!




சாவித்திரி, களுத்துறை

கே: நான் ஓர் அழகி. வாலிபர்கள் சிலர் என்னை வட்டமிட்டுவருகின்றனர். ஆனால் என்னால் யாரையும் காதலிக்க முடியவில்லையே!

ப: உங்களுக்குள்ள ஒரே வழி உங்களை நீங்களே காதலித்துக்கொள்வதுதான் நார்ஷிசஸ் என்ற கிரேக்கத் தெய்வத்தைப் போல.

ஃ

எஸ். பாண்டியராஜன், கண்டி

கே: எனது நண்பன் ஒரு பயந்தாங்கொள்ளி. அழகில் சிறந்தவள் என்பதற்காக தன் மாமன் மகளை மணக்க பயப்படுகிறான். அவனுடைய பயத்தை நீக்க என்ன செய்யலாம்?

ப: ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் பயந்தாங்கொள்ளியல்ல மாமன் மகள், பகட்டாகவும் பளபளப்பாகவும் காட்சியளிக்கும் மோசமான எஞ்சினுள்ள காரைப் போன்றவள் என்பதை நண்பர் எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிறார்.

ஃ

பத்மா, காலி.

கே: எனக்கு அடுத்த மாதக் கடைசியில் திருமணம் நடைபெறவிருக்கிறது. குயுக்தியாரே நீங்கள் எனக்குக் கூறும் புத்திமதி என்ன?

ப: உங்களின் கணவர் என்றென்றும் உங்களிடம் அன்பாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். அதற்கான வழி, எதையும் மலிவாகாமற் பார்த்துக்கொள்வதே!

ஃ

நந்தினி, கொழும்பு-7

கே: என்னைத் திருமணம் செய்த பிறகு என் கணவர் இலட்சாதிபதியாகி விட்டாரென்பது உங்களுக்குத் தெரியுமா?

ப: தெரியுமே! உங்களை மணக்கு முன்பு அவர் கோடீஸ்வரராக இருந்தாரென்பதும் எனக்குத் தெரியுமே!

ஃ

வி. சி. குமாரவேல், பேராதனை சந்தி

கே: அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இப்பொழுதே அரசியலில் தலையிடலாமென்று நினைக்கிறேன். அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?

ப: உங்களுக்கு உடனடியாக ஒரு தலைமைக் காரியாலயம் வேண்டும். பேராதனை சந்தியிலுள்ள வெற்றிலை பாக்குக்கடைகளில் ஒன்றுதான் அதற்கு தகுதியான இடம்.

ஃ

டி எம். சின்னதுரை, திருமலை

கே: என் நண்பர் ஒருவர் 60 வயதை எட்டிப் பிடிக்கும் "வாலிபர்". அவர் ஓர் இளம் பெண்ணைக் காதலிக்கிறார். இது கொடுமையல்லவா? காதலுக்குக் கண் இல்லையா வயதைத் தெரிந்துகொள்ள?

ப: காதல் வாதை பொல்லாதது—அது
கண்ணும் காதும் இல்லாதது.

ஃ

வி. ஆர். கிருஷ்ணன், புத்தளம்

கே: சில துறவிகளும் கூட சில சமயத்தில் காதல் வலையிற் சிக்கி விடுகிறார்களே, ஏன்?

ப: காதல் தெய்வீகமானதால்.

ஃ

எஸ். வேலும்மயிலும், கொழும்பு-15

கே: நான் காதல் திருமணம் செய்து கொண்டு 4 ஆண்டுகளாகிவிட்டன. இன்னும் என் மனைவியின் மன ஆழத்தை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லையே!

ப: உங்கள் காதல் கடற்கரையில் மலர்ந்ததாக்கும்.

ஃ

ஆர். ஆர். சுப்பிரமணியம், நீர்கொழும்பு

கே: எனக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. கட்டை பிரமசாரியாகவே சாகும்வரை காலத்தைத் தள்ளிவிடலாமென்று தீர்மானித்திருக்கிறேன்.

ப: காலத்தைத் தள்ளுவதும் ஒரு வாழ்க்கையா? மனைவி ஒருத்தி இல்லாமல் எந்த ஆணும் தூய்மையாக வாழவோ நிம்மதியாகச் சாகவோ முடியாது.

ஃ

சரோஜா சோமசுந்தரம், மட்டக்களப்பு

கே: இதற்கு முன்பு இரு பெண்களைக் காதலித்துக் கைகழுவிய ஒரு நபர் மூன்றாவதாக என் சிநேகிதி ஒருத்தியை காதலிக்கிறான். இம்முறையாவது அவன் காதலை நம்பலாமா?

ப: காதலை எப்படி நம்புவது? அது மின்னலைப் போன்றதாச்சே! அது மின்ன வேண்டிய இடம் இன்னதுதான் என்று நீங்களோ நானோ எப்படித் தீர்மானிக்க முடியும்?

ஃ

சி. ரி. பி. ராஜா, பரந்தன்-3

கே: உம்மிடம் கேள்வி கேட்பதனால் ஏதாவது நன்மை உண்டா?

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: உண்டு...உண்டு! சிரிக்கலாம், சிந்திக்கலாம். அல்லது சிந்தித்துவிட்டு சிரிக்கலாம். இதைவிட வேறு என்ன நன்மை உங்களுக்கு வேண்டும்?

கே: நான் வேலையில்லாமல் சோம்பேறியாயிருக்கின்றேன். என்ன செய்யலாம்?

ப: காதல் புரியுங்கள்! சோம்பேறிகளைச் சுறுசுறுப்பாக்கும் வலிமை காதலுக்கு உண்டு.

ஃ

"புலோலியூர்கேக்கே", கேகாலை

கே: நான் இதுவரையில் அதிகமான சிங்களவர்களுடன் பழகிவிட்டேன். இதனால் நான் கண்ட முடிவு... தமிழர்களைப் போல சிங்களவர்களிலும் நல்ல இதயம் படைத்தவர்கள இருக்கிறார்கள் என்பதே! இந்த முடிவு சரியா? தப்பா?

ப: எல்லாரும் நல்லவர்களே!

ஃ

அ. சின்னத்தம்பி, நுவரெலியா

கே: இ. தொ. க. தலைவர் இங்கிலாந்துக்குப் போயிருந்தாரே, இலங்கைக்குத் திரும்பிவிட்டாரா?

ப: இல்லை. ஆனால் அவர் பூரணமாகச் சுகமடைந்துள்ளார் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

ஃ

இலங்கை மகன், எட்டியாந்தோட்டை

கே: நான் ஒரு சிங்களப் பெண்ணைக் காதலிக்கிறேன். நானோ முஸ்லிம். அவளும் என்னை மனதார விரும்புகின்றாள் இருவரும் திருமணம் செய்துகொள்ளலாமா?

ப: இருவருக்கும் போதிய வயதிருக்குமென்றால், இன வித்தியாசம் சட்டபடி திருமணத்துக்குத் தடையாக இருக்காது.

ஃ

புவனேஸ்வரி, யாழ்ப்பாணம்

கே: மந்திரிகள் வட பகுதிக்கு விஜயம் செய்வது தமிழரசின் வலிமையைக் குன்றச் செய்யவும், காங்கிரசின் வலிமையை வளர்ப்பதற்கும் என்று கடந்த வாரம் ஒரு பத்திரிகையிலே படித்தேன். இதையிட்டு உமது அபிப்பிராயம் என்ன?

ப: முற்றிலும் தவறான கருத்து. ஒவ்வொருவரும் தத்தம் கட்சியை வளர்க்க வேண்டுமென பதிலேயே அக்கறை கொண்டிருப்பார்கள். பிற கட்சிகளை வளர்க்க வேண்டுமென்பதில் அவர்களுக்கு என்ன அக்கறை?

கே: ஒரு பெண் ஒருவனை மனமார விரும்புகிறாள்; அவளுடைய பெற்றோரோ வேறொருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க முற்படுகின்றனர். அந்தப் பெண் தான் விரும்புவனை பெற்றோரிடம் கூற முடியாத நிலையில் உள்ளாள். இந் நிலையில் அவள் என்ன செய்ய வேண்டும்? வாழ்வதா? இன்றேல் சாவதா?

ப: சாவதைவிட பெற்றோரிடம் மனதைத் திறந்து உண்மையைக் கூறிவிடுவது எவ்வளவோ மேல். இதற்குச் சிறிது துணிச்சல் மட்டுந்தான் தேவை.

ஃ

எஸ். எம். கந்தசாமி, வேம்பிராய்ச்சந்தி

கே: இரு நண்பர்கள் ஒரு பெண்ணை காதலிக்கிறார்கள். பெண்ணின் சம்மதத்தை ஒருவருமே பெறவில்லை. இருவருக்கும் சண்டை மூண்டு விடும்போல் இருக்கிறது இந் நிலையில் யார் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்வது?

ப: இருவரில் ஒருவரும் பெண்ணின் சம்மதத்தைப் பெறாததால், மூன்றும் நபர் ஒருவர்தான் அவளை மணம் முடிப்பார். காத்திருந்தவர்களின் பெண்ணை நேற்று வந்தவன் கொண்டுபோனால் அதில் என்ன தவறு இருக்க முடியும்?

ஃ

வ. சந்திரசேகரம், கொழும்பு-12

கே: 20 வருடத்துக்கு முன் எனது உறவினர் ஒருவர் காணாமற் போய்விட்டார். ஆனால் இப்பொழுது இருவர் வந்து போட்டி போடுகின்றார்கள். இவர்களில் யார் எனது உறவினர் என்பது தெரியவில்லை. இதை எப்படி அறிய முடியும்?

ப: சில குடும்ப இரகசியங்களைப் பற்றி தனித் தனியாக இருவரிடமும் கேட்டால் குட்டு வெளியாகிவிடும். இருவருமே காணாமல் போன உறவினராக இல்லாதிருக்கலாம்.

ஃ

சு. பாலகிருஷ்ணன், வெள்ளவத்தை.

கே: உங்கள் வாழ்க்கையில் தாங்கமுடியாத பசி ஏதாவது ஏற்பட்டதுண்டா?

ப: உண்டு-அறிவுப் பசி. அது இன்னும் அடங்கவில்லை.

---

### காரணம்?

**1963ம்** ஆண்டைவிட 1964ம் ஆண்டுக்கான வத்தல் மிளகாய் இறக்குமதி மிகவும் அதிகரித்திருக்கிறது. இதற்கான காரணம் என்னவென்று தெரியாமல் உணவு இலாகா திண்டாடுகிறது.

—செய்தி

மிளகாய்த் தூளைக் கண்களில் வீசி வழிப்பறிக் கொள்ளைத் தொழிலை விருத்தி செய்ய முடிச்சுமாறிகள் சங்கம் தீர்மானித்திருக்கலாமல்லவா?

### எது சிறை?

நீண்டகால மறியலில் இருக்கும் கைதிகளை அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பி சில நாட்கள் தங்கி மீண்டும் சிறைக்கு எடுக்க ஏற்ற வசதி செய்து கொடுபடவிருக்கிறது.

—செய்தி

வீடென்னும் சிறையிலிருந்து விடுபட்டு மறியற் சாலையைச் சரணடைந்தவர்களை மறுபடியும் வீட்டுச் சிறைக்கு அனுப்ப முனைவதை எதிர்த்து கைதிகள் ஒரு பெரும் கிளர்ச்சி நடத்தப் போகிறார்களாம்.



### குரங்கிலிருந்து...

வெலிகமை பொலீசாருக்கு டிமிக்கி கொடுத்த கைதி பற்றிய பத்திரிகைச் செய்திகள் தவறானது. காவலிலிருந்து தப்பி ஓடியது மனிதக் கைதி அல்ல. அது ஒரு குரங்கு.

—பொலீஸ் தகவல்

'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்ற டார்வின் தத்துவம் வெலிகமையில்தான் நிரூபிக்கப்பட்டது போலும்.

### நல்ல செய்தி!

இலங்கையில் பிறக்கும் குழந்தைகளின் தொகை குறைந்து வருகிறது. ஆனால் இறப்புத் தொகை கூடிக்கொண்டு வருகிறது.

—செய்தி

நல்ல செய்தியாச்சே! சனப் பெருக்கம் கூடி வதுகிறதே என்று சதா பயந்து சாவோர் தொகையாவது இனிக் குறைந்துவிடுமல்லவா?

### நீரோடோடாதே...?

வடமாகாணத்தில் பல ஊர்களுக்கு சுத்தமான தண்ணீர் வழங்குவதற்கான திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

—செய்தி

தண்ணீர் வினியோகத்துக்காக வழங்கப்படும் பணம் தண்ணீரில் கரைந்துவிடாமலும், தண்ணீருடன் சேர்த்து வழங்கப்பட்டு விடாமலும், தொட்டிகளிலுள்ள ஓட்டைகளுக்கூடாக ஒழுகிவிடாமலும் பார்த்துக் கொள்ள காங்கேசன்துறை சிமேந்துத் தொழிற்சாலை விசேட ரகமான சிமேந்து உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளதாம்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

**நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.**

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

மருத்துவ மனையில் மருந்துத் தட்டுப்பாடா? தேசிய அரசாங்கத்திலும் இராணுவ அட்டகாசம் நீடிக்க வேண்டுமா? முற்போக்கு வாதிகளின் வாதம் வகுப்புவாதமா?

# சவால்

# 'வகுப்புவாத தினசரிகளுடன் உள்ள தொடர்பை மறுப்பீர்களா?'

## இடதுசாரிகளிடம் இரத்தினம் கேள்வி

கள்ளக்குடியேற்றத்தடுப்பு என்ற போர்வையில் இந்நாட்டில் பிறந்து வளர்ந்த தமிழ் பேசும் மக்களை இராணுவத்தினர் கைதுசெய்வதை உடன் நிறுத்தவேண்டும் என்று பிரதம அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன் என்று யூலை 27ம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணைமீது பேசிய கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் கூறினர்.

யாழ்ப்பாண அரசாங்க மருத்துவ மனையில் நடைபெறும் சீர்கேட்டை சுகாதார அமைச்சர் உடன் கவனித்து நடவடிக்கைஎடுக்கவேண்டுமென்றும் அண்மையில் இம் மருத்துவமனையில் உள்ள பொறுப்பற்ற ஊழியர்களின் நடத்தையால் ஒரு இளம் பெண் உயிரிழந்த சம்பவத்தையும் எடுத்துக்காட்டிய திரு. இரத்தினம் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெருது இருக்க வழிவகுக்கும் வண்ணம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.



பாராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணைமீது திரு.இரத்தினம் பேசிய பேச்சின் விபரம் வருமாறு:-

பிரதம அமைச்சர் அவர்கள் இச்சபையிலே சமுகமாக இருந்த சமயத்தில் சில விடயங்களை அவரது கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணினேன். அதற்குத் தகுந்த விதத்தில் எனக்கு நேரம் கிடைக்கவில்லை. இப்பொழுது எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அவ் விடயங்களை எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

எனது தொகுதியிலுள்ள பல இந்தியத் தமிழர்களை கள்ளக்குடியேற்றக்காரர்கள் என்று குற்றஞ்சாட்டிப் பொலிசார் கைதுசெய்து அவர்களுக்குப் பலவிதமான துன்பங்களை விளைவிக்கின்றார்கள். இதை நான் கௌரவ பிரதமருடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

### இடர் தொடருகிறதா?

அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களுடன் இருப்பவர்களை, இங்கேயே பிறந்து வளர்ந்தவர்களை, அவர்கள் நாடற்றவர்கள் என்ற காரணத்தைக் காட்டி, கள்ளக்குடியேற்றக்காரர்கள் என்று சொல்லி, அவர்களுடைய மனைவி, மக்கள், சுற்றத்தார் வருத்தமடையத்தக்க முறையில் நீதியில்லாமல் அவர்களைக்கைதாக்கி தலைமன்னரிலோ அல்லது கொம்பனித் தெருவிலோ அடைத்துவைக்கிறார்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்க விடயம்.

சென்றஅரசாங்கம் வகுப்பு வெறிபிடித்த சிலரைத்திருப்திப்படுத்துவதற்காக, கள்ளக் குடியேற்றக்காரர்கள் என்று பலரையாழ்ப்பாணத்திலும் மற்றும் பல இடங்களிலும் கைதுசெய்து அவர்களுக்குப் பல இடர்களைவிளைவித்தது. அவர்கள் செய்த மனிதத்தன்மையற்ற அச்செயலை இப்பொழுது ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றிருக்கும் தேசிய அரசாங்கமும் செய்யக் கூடாது.

பரம்பரை பரம்பரையாக இந் நாட்டினையே தாயகமாகக்கொண்டு வாழ்பவர்களையும், அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை வைத்திருப்பவர்களையும் அனுவசியமாகக் கைதுசெய்து துன்புறுத்துவது கூடாது. அநீதியாகக் கைதுசெய்யப்பட்டவர்களது மனைவி மக்கள் சிந்தும் கண்ணீரையும், படும்வேதனையையும் பார்க்க மிகவும் வருத்தமாக இருக்கின்றது. இந்தியத் தமிழர்களை இந்த நாட்டிலே வாழ்வதற்கே அனுமதியளிக்கக் கூடாது. அவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளிவிட வேண்டும் என்று கருதும் தம்பதெனியாப் பிரதிநிதி போன்றவர்கள் கூட, அவர்களது மனைவி மக்கள் படும் கஷ்டங்களைக் கண்டால் மிகவும் வேதனைப்படுவார்கள் என்று நான் திடமாக நம்புகின்றேன்.

### தலைமன்னர் சம்பவம்

அடுத்ததாகஇன்னுமொரு விடயத்தை எடுத்துக்கூற விரும்புகின்றேன். தலைமன்னர் முகாமிலே 16 பேர்கள் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருக்கின்றார்கள்.சென்ற அரசாங்கம்,கடந்த யூலை மாதத்தில் இவர்களைத் தடுப்புக்காவலில் இட்டது. இது வரை அவர்கள் சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் நிலையை விளக்கி எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந் நாட்டில் கள்ளத்தனமாகக் குடியேறியவர்களை கைதுசெய்து அனுப்பவேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமை. அதற்கு நானும் எனது கட்சியும் மனப்பூர்வமான ஆதரவை அளிக்கின்றோம்.

ஆனால், கள்ளத்தோணிகள் என்ற பெயரில் நாடற்றவர்கள் என்ற சாட்டில், இந் நாட்டில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும்மக்களை சொந்தத்தில் காணி வைத்திருப்பவர்களை வருத்துகிறார்கள் என்ற உண்மையை கௌரவ பிரதமஅமைச்சருடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

கிளிநொச்சித் தொகுதியில் வரட்சியினாலும் சமீபத்தில் நடைபெற்ற சூருவளியினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் தாம் இவர்கள். அல்லற்படும் இக் குடும்பங்களின் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு விட்டதால், தலைவனையிழந்த அக் குடும்பங்கள் வாழ வழியின்றி தவித்துக் கொண்டிருக்கின்றன.கருணை அன்பு, சமத்துவம் பற்றிப் போதித்த புத்த சமயம் வாழும் இந் நாட்டில் எந்த விதமான காரணமுமில்லாமல் மக்களைக் கைது செய்து அவர்களது குடும்பத்தை வாட்டி வதைப்பது நியாயமாகாது.

பதினறு பேர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள விடயத்தைச் சற்று முன் எடுத்துக் கூறினேன். அவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு ஆறுமாதங்களாகியும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை வைத்திருக்கிறாகள். ஒருவரைப் பற்றி வேறு ஒருவர் எக்காரணம்பற்றியோ மொட்டைக் கடிதம் ஒன்றை எழுதிவிட்டால் போதும். அவர்களை எவ்வித விசாரணையுமில்லாமல் உடனடியாகக் கைது செய்து விடுகிறார்கள். கைது செய்ய வருகிறவர்கள் ஊரிலுள்ள பொலிஸ்காரர்களையோ, கிராம சேவகர்களையோ எதுவும் விசாரிப்பதில்லை. தங்கள் எண்ணப்படி விலங்குகளைப் பிடிப்பது போலப் பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அவர்களை எங்கே கொண்டு செல்கிறார்கள் என்று எவருக்கும் தெரியாது. எனவே, இப்படியாக நீதியற்ற முறையில் நடப்பதைக் கட்டுப்படுத்தி மனிதத் தன்மையுடன் நடப்பதற்கான நடவடிக்கையைத் தாமதமின்றி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

### யாழ்ப்பாண மருத்துவமனை

அடுத்ததாக நான் இங்கே யாழ்ப்பாணஅரசாங்கவைத்தியசாலையைப்பற்றிய விடயமொன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். இவ்விடயத்தைக் கௌரவ சுகாதார அமைச்சரது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். நேற்று வெளியாகிய நாள் இதழொன்றில் மருந்து கிடைக்காததால் இளம்பெண் மாண்டாள்' என்று ஒரு செய்தி வெளியாகியிருந்தது. உண்மையில் இந்த யாழ்ப்பாண வைத்தியசாலை நல்ல முறையில் நடைபெறவில்லைஎன்பதைப் பலமுறை பத்திரிகைகள் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

சென்றஅரசாங்கம் செய்த அநியாயங்களிலொன்று வைத்தியசாலை ஊழியர்கள் மேலதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்யாமல் விட்டதுதான். கீழ்தர ஊழியர்கள் இந்த ஆசுப்பத்திரியில் மேலதிகாரிக்கு அடங்கி நடக்காததனுல் ஒரு இளம்பெண்ணின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்பதை நாம் இந்தச் செய்தியிலிருந்து அறிகிறோம். ஒரு இளம்பெண். அவளின் உயிரைக் காப்பாற்றுவதற்கு மருந்துவாங்கவேண்டியிருந்தது. ஆசுப்பத்திரியில் அம்மருந்து இருக்கவில்லை. வெளியில் மருந்துவாங்கச் சென்ற ஊழியர் மூன்று வில்லைகள்தான் கிடைத்தன என்று கொண்டுவந்திருக்கிறார். ஆனுல் பெண்ணின்கணவன் வேண்டிய வில்லைகளையெல்லாம் வெளியில் வாங்கக்கூடியதாக இருந்தது. இந்த மருந்துகளைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதனுல் அந்த இளம் பெண்ணின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது. இவற்றைக் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கௌரவ சுகாதார அமைச்சரை நான்கேட்டுக்கொள்ளுகிறேன்.

### 'அத்த', 'ஜனதின'

மூன்ருவதாக நான் கேட்டுக்கொள்ளும்விடயம்ஒன்றிருக்கிறது. எனக்கு முன் பேசிய சிலநண்பர்களும் இவ்விடயத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 'ஜனதின', 'அத்த' முதலியசிங்களப்பத்திரிகைகள் பச்சை வகுப்புவாதத்தை நாடெங்கும் பரப்பி வருகின்றன. இத்தகைய பத்திரிகைகளுடன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வைத்திருக்கும் நெருங்கிய தொடர்பை அவர்கள் மறுப்பார்கள் என்று நான் எண்ணவில்லை. அப்படி அவர்கள் மறுத்தால் நான் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

இப்பத்திரிகைகள் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் கொண்டுசெல்லப்படுவதைஅரசாங்கம் தடுத்த போது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கடுமையாகக் கண்டித்தார்கள். அவர்களுக்கு இப்பத்திரிகைகளுடன் தொடர்பு இருக்கின்றது—அனுதாபம் இருக்கின்றது. ஆகையால்தான் இவ்வாறுகண்டித்தார்கள் என்று எண்ண இடமிருக்கிறது. ஆகையால் நான் கேட்கிறேன், நீங்கள் உங்களுடைய உள்ளத்தைத் தொட்டுச் சொல்லுங்கள், இப்பத்திரிகைகள் உண்மையை எழுதுகின்றனவா என்று. நூற்றுக்குத் தொன்னூறு வீதம் வடிகட்டிய பொய்களைத்தான்—வகுப்புவாதப் பொய்ப்பிரச்சாரத்தைத்தான்—இவை எழுதிவருகின்றன.

இப்பத்திரிகைகளை நீங்கள் ஆதரிப்பதன் மூலம் இப் பொய்ப்பிரச்சாரங்களையும் வகுப்புவாதப் பொய்களையுந்தான் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள். எதிர்க்கட்சியிலுள்ள முற்போக்கு கொள்கையுடையவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களுக்கும் இப் பொய்ப்பிரச்சாரப் பத்திரிகைகளுக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)



மங்கையர் விரும்பும் மகோன்னத

'மினேர்வா'

சிறப்பும் வனப்பும் மிக்க சிறந்த

தையல் மெஷின்

இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



Minerva 126

நுண்ணிய தயாரிப்பு, நாசுக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும், அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.

புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.

சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னர்ஸ் ரோடு, தெற்கு,
கொழும்பு-10.
டெலிபோன் : 4261-2, 3.

# "தேக்க மர வியாபாரம்: நூற்றுக்கு நூறு தமிழர், முஸ்லிம் கையில்"

"வெளிநாடுகளிலிருந்து தேக்க மரம் இறக்குமதி செய்யும் வரப்பிரசாதம் நூறு சதவிகிதம் அன்னியர் வசமாக்கப்பட்டு, சிங்கள வர்த்தகர்களின் தேக்க மர இறக்குமதியை 40 சதவிகிதம் குறைக்கப்பட்டுவிட்டது.

கூட்டுறவு மொத்த விற்பனவுக் கடைகளை மூடி உணவுப் பொருள் உட்பட அத்தியாவசியமான பொருட்களை இறக்குமதி செய்வதையும் விற்பனையையும் தனிப்பட்ட வியாபாரிகளிடம் ஒப்படைத்த யு. என். பி.-தமிழரசு அரசாங்கம் இப்பொழுது மரம் இறக்குமதிசெய்வதைத் தமிழ், முஸ்லிம் முதலிய பணக்கார வர்த்தகர்களிடம் ஒப்படைத்துவிட்டது.

சிங்கள வியாபாரிகளுக்குச் செய்துள்ள அநீதியைப்பற்றி தேக்க மரம் இறக்குமதி செய்யும் இலங்கையர் சங்கம் தனது கவலையைத் தெரிவித்துள்ளது".

—ஜனதின (26-7-65)

## சிங்கள இதழ்களில்...

### வெடி மருந்து கிடங்கு காலியாகிறது?

'கடந்த அரசாங்கத்தை விழ்த்துவதற்காக செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட சதி முயற்சி வெற்றியடைந்திருந்தால் இடதுசாரித் தலைவர்களை சிறையிடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட முகத்துவாரம் வெடிமருந்துக் கிடங்கி (மெகளின் ரூம்) லிருந்து வெடிமருந்துகளும் குண்டுகளும் அவசர அவசரமாக அப்புறப்படுத்தப்படுவதாகத் தெரிகிறது' என ஜனதின (26-7-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

'இந்த அறையைச் சுத்தம் செய்து மின்சாரக் கம்பிகளை இணைத்து மின்வெளிச்சம் போடுவதற்கான ஏற்பாடுகள் அநேகமாகப் பூர்த்தியடைந்துள்ளன. இந்த வெடிமருந்துக் கிடங்கு பூமிக்கடியிலுள்ள ஓர் அறை என்பது சதிவழக்கு விசாரணையின் போது கூறப்பட்டது."

### மலைநாட்டில் வகுப்புவாத பிரசாரம்

—————o—————

#### சுதந்திரக் கட்சி நடத்தும் கூட்டங்கள்

சிங்கள பௌத்த உரிமைகளைப் பற்றி பேசுபவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க அரசாங்கம் கருதுகிறது என்று ஜனசத்திய (25-7-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:—

'யு. என். பி.—தமிழரசு அரசாங்கம் பின்பற்றும் நான்கு போய விடுமுறை. இலங்கை—இந்தியப் பிரச்சினை பற்றிய விஷயங்களைத் தோணடியெடுக்க முயற்சி செய்யும் சிங்கள பௌத்தர்கள் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளப்படலாம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அண்மையில் மலைநாட்டுப் பகுதிகளில் 'சிங்கள பௌத்த உரிமைகளைப்' பற்றிக் கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்திருப்பதால், அதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான சட்டதிட்டங்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் மந்திரிகளும் சில எம். பிகளும் சுறு சுறுப்பாக இருக்கின்றனர்.

இலங்கை—இந்திய பிரச்சினை சம்பந்தமாக மலைநாட்டு மக்களுக்கு விசேடமாகத் தெளிவுபடுத்தும் பொருட்டு சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்துள்ள இக்கூட்டங்கள் வகுப்புவாதத்தை கிளறிவிடும் முயற்சியாக அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மலைநாட்டுப் பிரசாரத்தின் பொறுப்பு திருவாளர்கள் டி. பி. இலங்கரத்தின, ஆர். ஜி. சேனநாயக்கா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கை—இந்தியப் பிரச்சினையையும், அதனைத் தீர்க்க அரசாங்கம் எண்ணியுள்ள திட்டத்தையும் விளக்கி இக்கூட்டங்களில் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்காவும், திரு. என். கியூ. டயசும் பேசுவார்கள்'.

### அவர்கள் மீண்டும் வருவார்கள்

'சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியின் போது இந்நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட கன்னியாஸ்திரிகளை மீண்டும் இங்கு கொண்டு வருவதற்கு யு. என். பி.—தமிழரசு அரசாங்கம் தீவிரமாக முயற்சி செய்கிறது' என்று ஜனசத்திய (25-7-65) எழுதியுள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் வேண்டுகோளின் மீது மீண்டும் இங்கு வரவிருக்கும் இந்தக் கன்னியாஸ்திரிகள் முக்கிய ஆஸ்பத்திரிகளில் தாதிகளாகப் பணிபுரிய மீண்டும் நியமிக்கப்படுவர்.

அவர்களை இங்கு அழைப்பது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் முக்கிய கன்னியாஸ்திரியான சகோதரி ஒருவர் சமீபத்தில் இலங்கைக்கு வருவார் என்று அறியப்படுகிறது' என்றுஜனசத்தியஎழுதியுள்ளது.

### 'தெய்வமகன்' வெளியீட்டு விழா

கடந்த ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றவரும், இலங்கை இலக்கிய இரசிகர் சங்கத்தலைவருமான திரு. நாவேந்தன் எழுதிய, 'தெய்வ மகன்' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா, 1-8-65 ஞாயிறு பிற்பகல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் வெகு விமரிசையாக நிகழவுள்ளது.

யாழ்.நகர முதல்வர் திரு. எஸ். சி. மகாதேவா, மங்கல விளக்கேற்றி விழாவினைத் தொடக்கி வைத்துப் பேசுவார். உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் நூலின் முதற் பிரதியினைப் பெறுவார். பண்டிதர் க. சச்சிதானந்தன் விமர்சன உரை நிகழ்த்துவார்.

மற்றும் பிரபல எழுத்தாளர்களும், திருவாளர்கள்:- எஸ்.கதிரவேற்பிள்ளைஎம்.பி. ஏ. அமிர்தலிங்கம்எம். பி. ஆகியோரும் பாராட்டுரை வழங்குவார்கள்.

———

### சிங்களத் தமிழ்

இலங்கை மத்திய வங்கியின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிக்கு இடங் கொடுக்கா்ததை தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, தமிழில் எழுதுவதற்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றதாம். ஆனால், தமிழில் எழுதப்படும் பலகை ஏனைய அரசாங்கத் திணைக்களங்களில் உள்ளது போலன்றி, புதிய பாணியில் எழுதப்படலாம் என்று தெரிகிறது.

'சிறி லங்கா மத்ய மகா பாங்குவ' என்றுஎழுதுவதற்கு சில சிங்கள தீவிர வாதிகள் முயற்சிக்கிறார்களாம். ஆனால் தமிழ் ஊழியர்கள் பழைய கட்டிடத்தில் இருந்த பெயர் பலகையில் எப்படி எழுதப்பட்டிருந்ததோ, அதேபோல் 'இலங்கை மத்திய வங்கி' என்றே எழுதப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்களாம்.

சிங்கள தீவிர வாதிகளின் முயற்சிக்கு உயர் அதிகாரிகள் சிலரும் ஆதரவாக இருப்பதால் மத்திய வங்கியின் பெயர் எழுத்தளவில் மட்டுமே தமிழில் இருக்குமென நம்ப முடிகிறது.

## யாழ். இலங்கா ஆயுர்வேதக்கல்லூரி அரசினர் உதவியின்றி ஆற்றிய அரும் பணி

யாழ்ப்பாணத்திலே இன்று இயங்கிவரும் இலங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரி 1925-ம் ஆண்டு ஆரம்பமானது. அரசாங்கத்தின் உதவி எதையுமே அன்று எதிர்பாராமல், அமரர் யே. வஸ்தியாம்பிள்ளை அவர்கள் ஆரம்பித்த இக் கல்லூரி வட மாகாணத்தில் மட்டுமல்லாமல் இலங்கையின் பல பாகங்களிலும் பணி புரியும் பெருமை வாய்ந்த பல வைத்தியர்களை உருவாக்கியுள்ளது.

இக் கல்லூரியில் பயின்று வெளியேறிய வைத்தியர்கள் வெறும் பொருள் திரட்டுவதையே நோக்காகக் கொண்டு உழைக்கவில்லை. உண்மை உழைப்பாளிகளாகவும், தன்னலமற்ற சேவகர்களாகவும், உயர்ந்த தொண்டர்களாகவும் விளங்கிவருகின்றனர் என்பதை நாம் கூற வேண்டியதில்லை. நாடே அறியும்.

1925-ம் ஆண்டு இக் கல்லூரி தொடங்கப்பட்டது. அதன் பின்னர் நான்கு வருடங்கள் கழித்தே கொழும்பில் ஆயுர்வேதக் கல்லூரி நிறுவப்பட்டது. இதன் பின்னரே தான் கம்பகாவிலும் ஆயுர்வேதக் கல்லூரி ஒன்று திறக்கப்பட்டது.

#### மூதூர் அன்ரனி

ஏறத்தாழ 26 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் இக் கல்லூரி வெற்றிகரமாகப் பணி புரிந்த பின்னர், 1951-ம் ஆண்டு ஜுலை 13-ம் திகதி இக் கல்லூரியை அரசாங்கம் பதிவு செய்து அதே தினத்தில், வெளியான வர்த்தமானியில் பிரசுரித்திருந்தது.

#### பாராட்டுகள்

1944-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி, காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இக் கல்லூரியைப் புகழ்ந்துள்ளார். இக் கல்லூரி விரிவுரையாளர்களின் தன்னலமற்ற பணியினை, காலத்துக்குக் காலம் இங்கு வருகை தந்த சுதேச வைத்திய சங்கத் தலைவர் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன, சுகாதார அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசியாகவிருந்த திரு. ஜே. பி. ஒபயசேகரா, சுகாதார அமைச்சராகவிருந்த செனட்டர் ஏ. பி. ஜெயசூரியா முதலானோர் பாராட்டிப் புகழ்ந்துள்ளனர்.

அரசாங்கம் எவ்வித உதவியும் அளிக்காதிருந்தும் கூட இக் கல்லூரி தழைத்தோங்கி வருவதை அனைவரும் போற்றவே செய்தனர்.

24-7-62 ல் சுகாதார அமைச்சராகவிருந்த திரு. ஏ. பி. ஜெயசூரியா இக்கல்லூரிக்கு வருகை தந்து பாராட்டினார் எனினும், அதே வருடத்தில் தனது விசாரணை முடிவுகளை வெளியிட்ட ஆயுர்வேதக் கமிஷனின் சிபார்சின் பேரில் இக்கல்லூரியின் பதிவு நீக்கப்பட்டுவிட்டது. இதனை தமிழ் பேசும் மக்களின் துர்ப்பாக்கியம் என்றே கொள்ள வேண்டும்.

திருமதி சிறிமாவோவின் அரசாங்கத்திடம் தூதுக்கு மேல் தூது சென்றும் பலன் கிடைக்கவேயில்லை. இன்று படித்து முடித்துவிட்டு வெளியேறியுள்ள மாணவர்கள் பதிவு செய்யப்படாமல்

(9-ம் பக்கம் பார்க்க)



# ரிஷி லேகியம்

## ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷிபடம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச் சிக்கலுச்கும், மூல வியாதிக்கும், மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சு வலி, புற்றுகள், கண் கை கால் திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினுப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்த்தனி எண்ணையும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைககளும் கிடைக்கும்.

விபரம்டங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூபா 3-50**

**30 நாள் டின் ரூபா 6-50**

தபால் செலவு -/95

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# கந்தப்பரின் கலகலப்பு....?

கந்தப்பர் கலகலப்பாக விருப்பது ஒருமாதத்தில் ஒரேஒருநாள் மட்டும் தான். இந்த ஒரேஒருநாளைத் தவிர ஏனைய நாட்களிலெல்லாம் சதா எரிந்து விழுந்து கொண்டேயிருப்பார்.

காலாகாலத்தில் கலியாணம் முடித்து கடந்த நாற்பது வருடங்களையும் எப்படியோ முடித்துவிட்டவர் தான். இப்பொழுது, அறுபத்துநான்கு வயதாகியும் இவருடையதேகப் பொலிவு வாடவில்லை. ஆனால் சிடுமூஞ்சித்தனம் வளர்ந்து கொண்டே வருகிறது.

கந்தப்பருக்கு ஒரே ஒரு மகனும் ஒரே ஒரு மகளும்தான் பிள்ளைகள். சின்னத்துரை வயது இருபத்தெட்டாகிறது. அரசாங்கத்தில் உத்தியோகம் பார்க்கத் தலைப்பட்டு ஏழுவருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. அவன் பிறந்து பன்னிரண்டு வயதுக்குப்பிறகுதான் கமலம் பிறந்தாள்-அவள் பள்ளியில் படிக்கிருள்.

கந்தப்பரை 'கந்தப்பர்' என்று யாரும் கூப்பிடுவதில்லை. அப்படிச் சொன்னால் ஊரில் யாருக்கும்தெரியாது. 'வாத்தியார்' என்ற பெயர் தான் கந்தப்பருக்கு அப்பா அம்மா இட்ட பெயரைப் போல் மருவிப்போய் விட்டது.

நிமிடக் கதை

அவரிடம் படித்த எத்தனையோ மாணவர்கள் இன்று ஆசிரியத் தொழிலில் புகுந்து விட்டனரெனினும் 'வாத்தியார்என்றவர்னைக்கு இலக்கானவர் அந்த ஊரில் கந்தப்பர் மட்டுமே தான்.

சின்னத்துரை அதேஊரில் தான் 'கிளாக்க'ராக விருக்கிருன். வயதுக்கேற்ற வாழ்க்கை வாழ அவனால் முடியவில்லை. காரணம் அவனுடைய அப்பர் வாத்தியாரின் கண்டிப்புத்தான். தமது பதி

[12ம் பக்கம் பார்க்க]

# நடனக் கலை —குடும்பக் கலைக்கு உதவுமா?

நடனக்கலைப் பயிற்சியிலீடுபட்ட ஒரு பெண்ணின் உடல் உறுதியடைகிறது. அவளுக்கு ஊக்கம் பிறக்கிறது—உணர்ச்சி ததும்புகின்றது. அழகு அதிகரித்து இளமை பொலிகிறது. ஆகவே நடனக்கலை குடும்பக்கலைக்கு அத்தியாவசியமாகும்.

பெண்கள் இக்காலத்தில் நாட்டியம் பயிலுவதும் ஆடுவதும் ஒரு பழக்கமாகிவிட்டது. தமிழ் நாட்டில் பண்டு தொட்டு இருந்து வந்த இவ்வழக்கம் இடைக் காலத்தில் மாந்திப் போனாலும், மீண்டும் இக்கலை தளிர்க்க ஆரம்பித்திருக்கிறது.

ஆதிமனிதன் ஒருவனுடன் ஒருவன் தொடர்பு கொள்ளுவதற்கு அபினயத்தையும் பாவத்தையுமே கைக்கொண்டான். காலப் போக்கில் மொழி உருவானதும் அபிநயமும், பாவமும் தன் பழைய கால நினைவை ஞாபகத்திற் கொணரும் ஓர் கருவியாகக் கருதப்பட்டது. இன்று இக் கருவியே உன்னதமானதோர் கலையாகப் பரிணமித்துவிட்டது.

நடனக்கலையை விவரிக்கும் வித்தகர்கள் பிரபஞ்ச இசையின் கருத்து வெளிபாடே (Universal Rythm)இக் கலை என விளக்குகின்றனர். இந்த ஆழ்ந்த கருத்தை உள்ளடக்கிக் காட்டுவதே சைவர்கள் போற்றும் சிவனின் நடராஜ தாண்டவம்.

நடனக்கலையை கலா வல்லுனர்களும், அறிவாளிகளும் பக்தர்களும் பாமரர்களும் எப்படிக் கூறினாலும் சரி. இக்கலை பெண்களுக்கோ ஆண்களுக்கோ உடற்கூற்றையும் மனவளத்தையும் மாற்றி அமைக்கிறது என்ற கருத்தினை மட்டும் மறுக்க முடியாது.

### பண்புக்கு உரைகல்

தமிழ் நாட்டிலே பண்டையப் பெருமையுடன் பல்கிப் பெருகிவளர்ந்து வரும் இக் கலை தமிழ் மக்களின் பண்புக்கு ஒரு உரைகல்லாகத் திகழுகிறது எனலாம். முறைப்படி பரதக்கலையைப்

### 'கமலமலர்'

பயின்ற பெண், அக்கலையை அளவோடு அனுசரித்து வருவாளானால் அவளுடைய குடும்பம் தலை சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. (இக்கலையையே தொழிலாகக் கொண்டவர்களை விதிவிலக்காக்கிவிடுவோம்.)

உடலுக்கு உறுதியையும் வலிமையையும் அளிப்பதுடன், ஊக்கத்தையும் உணர்ச்சி வெளிப்பாட்டையும் இக்கலை வழங்குகிறது. அத்துடன் மட்டுமல்லாது அங்கங்களுக்கான அளவுப் பரிமாணத்தையும் அளவோடு கொடுக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அழகையும், பொலிவையும், கவர்ச்சியையும், மாருத இளமையையும் நடனக்கலை தருகிறது.

### குடும்பத்தில் இன்பம்

இளமையிலிருந்தே தனது உடலை வளைத்து ஆடப்பழகிய ஒரு பெண் பருவமடைந்து, பின்னர் குடும்பத்திலீடுபடும் பொழுது நடனக்கலையால் அவளுடைய உள்ளமும் உடலும் அடைந்த 'மாற்றங்கள் அவள் குடும்பத்துக்கு உற்ற துணை புரிகின்றன என்பதனை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். நடனம் பழகிய ஒருவளுக்கு கலாரசிகனை ஒரு கணவனும் வாய்த்து விட்டால் அக்குடும்பத்தில் இன்பத்துக்குப் பஞ்சமேது?

வீட்டு வேலைகளைக் கவனிப்பதே ஒரு பெண்ணுக்குத் தேகப்பயிற்சியாகும். ஆனால், வீட்டு வேலைகளுடன் மட்டும் எல்லாப் பெண்களின் தேகங்களுக்கும் போதிய பயிற்சி கிட்டிவிடுவதில்லை. அத்தகையவர்களுக்கு பரதக்கலையேபோதுமானது.

ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் நடனக்கலை பொருத்தமானதாகும். இக்கலையை முறைப்படி கற்க ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்

ஒவ்வொரு பாடசாலையிலும் நடனக்கலை ஒரு பாடமாகப்புகட்டப்பட வேண்டிய ஒழுங்குகளை அரசாங்கம் செய்யுமானால் வருங்கால சமுதாயம் செழிப்புடன் வளர்ச்சியடைய உறுதுணைபுரிவதாகும்.



## 5 கேள்விகள் ?

## இல்லாளுக்குச் சில யோசனைகள்

—செல்வி நளினி நாதன்—

(சென்ற வாரத்தொடர்ச்சி)

(21) தேனீக்கடி ஏற்பட்டால், உடனே ஒரு துண்டு மாங்காய் ஊறுகாயை அல்லது வெங்காயத் தோலை எடுத்துக் கடியுண்ட இடத்தில் தேய்த்தால் வலி உடனே நின்று விடும்.

(22) நீங்கள் ஏதாவது கைவேலையாயிருக்கும் போது குழந்தையை நிலத்தில் தவழவிட நினைத்தால், அடிக்கடி குழந்தையைக் கண்காணிப்பதற்கு ஏதுவாகக் குழந்தையின் காலணியில் ஒரு சிறு மணியைக் கட்டி விடலாம்—மணியின் ஒலி குழந்தையின் நடமாட்டத்தைக் கண்காணிக்க மிகவும் உதவியாயிருக்கும்.

(23) மரச்சாமான்களுக்குப் 'பொலிஷ்' செய்கையில் மிகச் சிறிய அளவு பொலிஷ் பூசி, அதே சமயம் அழுத்தமாகத் தேய்த்துப் பொலிஷை அகற்ற வேண்டும் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்—முடிவு திருப்திகரமானதாக உள்ளதா என்பதைப் பரிசீலிக்கப் பொலிஷ் செய்த பாகத்தின் மீது விரலால் வருடினால், அப்போது ஏதாவது விரலடையாளம் பதியாது வழுவழுப்பாக அப்பகுதியிருந்தால் முயற்சி வெற்றிகரமானது என்பதையுணர்த்தும்.

(24) கறிவகைகளுக்குச் சற்று உப்பு அல்லது புளி அதிகம் என்று தோன்றினால் சிறிது சோற்றைத் திரட்டி கறியினுள் போட்டால், சற்று நேரத்தில் அதிகப்படியான புளி உறிஞ்சப்பட்டு விடும்.

(25) இஸ்திரிப் பெட்டியைக் கஞ்சி போன்ற கறைகளினின்றும் நீக்கி, பளபளப்பாக்குவதற்கு, (Bees Wax) தேன்மெழுகு அல்லது செங்கற் தூள் கொண்ட ஒரு சிறு துணி மூட்டையால் பெட்டியின் அடிப்பாகத்தைச் சற்றுச் சூடாயிருக்கும் போது தேய்த்து விடலாம்.

## கருத்துமேடை

# உடல் நிலை மாற்றம் உறவுக்கு ஊறு தேடலாகாது

திருமதி மார்கிரட் செல்லையா

அசந்தர்ப்பங்களினால் ஏற்படும் சில அசௌகரியங்களை ஆதாரம்காட்டி கூட்டுக்கல்வி முறைக்கு உலை வைக்க முயலும் பத்தாம் பசலிக் கொள்கையை வன்மையாகக் கண்டிக்கிறேன். பண்பட்ட மனவளர்ச்சிக்கு கூட்டுக்கல்வியே ஓர் அரிய சாதனமாகும்.

கள்ளங் கபடு புகமுடியாத பிஞ்சுப் பருவத்திலிருந்தே ஆண் பெண் இருபாலாரை நெருங்கிப் பழகவிடுவதில் எதுவிதமான அபத்தும் ஏற்படப்போவதில்லை. பருவமடைந்ததும் சில கட்டுப்பாடுகளை—பொதுவாகப் பெண்ணைப் பெற்றவர்களே-விதிக்கத் தலைப்படுகின்றனர். இக்காலத்தில் பெண்களின் எண்ணங்களில் சிற்சில மாற்றங்கள் ஏற்படுமேயானாலும், அவற்றுக்கு பெற்ருர் இடும் போலியானவேலி விகாரமான கற்பனைகளை உருவாக்கச் செய்கிறது. நமது நாட்டில் இத்தன்மையிலே தான் குழந்தை உள்ளங்கள் கீழ்த்தரமான சிந்தனைகளுக்கு இடம்கொடுத்து விடுகின்றன.

### சூழலில் மாற்றமாகாது

சிறிய காலத்தில் எத்தகைய சூழ்நிலையில் ஒரு பெண்குழந்தைவளர்ந்துவருகிறதோ, அதே சூழ்நிலையில் தொடர்ந்து வளர்க்கப்பட வேண்டும். பெண் பருவமடைந்தவுடன் பழைய சூழ்நிலையை மாற்றி அமைத்து விட்டால், இம்மாற்றம் அக்

## கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா? [4]

குழந்தையின் மனத்தில் விசித்திரமான எண்ண அலைகளை உருவாக்கிவிட ஏதுவாகிறது. பழைய் சூழ்நிலையிலேயே, தான் முன்பு பழகியவர்களுடனேயே பழக முடியுமானால் எந்தவிதமான விசித்திரக் கற்பனைகளும் புகுத்துவிட நியாயமில்லை.

பருவமடைந்ததும் நமது பெற்றோர் பெண் குழந்தைக்கு பல கட்டளைகளைப் பிறப்பிக்க முனைகின்றனர். வாயினாலல்லா விட்டாலும் சைகைகளினாலும், அன்றாட நடைமுறைகளினாலும் இவை போதிக்கப்படுகின்றன. இதுவரை பாடசாலைக்குத் தனித்தே சென்றுவந்த பிள்ளைக்கு தக்க பாதுகாப்புத் துணையையும் சேர்த்து அனுப்ப ஆரம்பிக்கின்றனர். இத்தகைய செய்கைகளினால் மனத்தில் இனம் தெரியாத கூச்சமும் கோழைத்தனமும் குடிகொண்டு விடுகிறது. உள வளர்ச்சியும் உடல்வளர்ச்சியும் கட்டுப்பட்டுவிடுவதனால் பெண்குழந்தையின் அறிவும் பேதலிக்கத் தலைப்படுகிறது.

### விகாரம் பெருகக் காரணம்

பழைய சகமாணவர்களிடம் பழகவே இப்போதைக்கு நாளெழு

(14-ம் பக்கம் பார்க்க)

## மங்கையர் சங்கம்

**7-8-65●**

# உலகம் புகழும் தாகூர்

**●நினைவு தினம்**

## கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை

தமிழ் விரிவுரையாளர்
பல்கலைக் கழகம், பேராதனை.

கடந்த நூற்றாண்டின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், நீண்ட காலம் துயின்றுவிட்ட பாரதமாதாவைத் துயிலெழுப்பத் தோன்றிய ஒளிவிளக்குகள் என மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர், விவேகானந்தர் என்பவர்களைக் குறிப்பிடலாம். அரசியலும் சமுதாய சீர் திருத்தமும் காந்தியின் கவனத்தை விசேடமாகக் கவர்ந்த துறைகளெனலாம். விவேகானந்தர் சமயத் துறையில் தன் கவனத்தைச் செலுத்தினார். தாகூர் முதல்தரக் கவிஞராகவும் முதல்தரச் சிந்தனையாளராகவும் விளங்கினார். வங்காளியாகப் பிறந்த தாகூரின் புகழ் வங்காளத்துடன் அடங்கிவிடவில்லை; பாரதத்தின் எல்லைகளில் முடங்கிவிடவில்லை; கீழைத் தேயங்களின் பரப்போடு நின்றுவிடவில்லை. தாகூரின் புகழ் உலகமெங்கும் செறிந்து விளங்கியது.

### நோக்கம்

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், மேலைத் தேய நாடுகள் சில, உலகிலுள்ள மிகுதிப் பகுதியைப் பங்கிட்டு ஆதிக்கம் செலுத்தின. சுமார் நானூறு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் மேனாடுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக, அந்நாடுகள் பல துறைகளிலும் வேகமாக முன்னேறின. அங்கு தோன்றிய கைத்தொழிற் புரட்சியும் அறிவியல் வளர்ச்சியும் அந்த நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் பெரிய வேறுபாட்டை ஏற்படுத்தின. அரசியல் ஆதிக்கம், அறிவியல் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றில் பின் தங்கிவிட்ட கீழைத் தேய மக்கள் மேலைத் தேயத்தார் பலரால் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். ஓரளவு அங்கிலம் கற்ற கீழைத் தேயத்தவர்,மேலைத் தேயத்தவரின் கண்ணோட்டத்தால் கீழைத்தேய மக்களை நோக்கினர்; தாமும் சுய மரியாதை இழந்தவராகக் காட்சியளித்தனர். இந்நிலை மாறுவதற்குக் காரணமாக இருந்த முக்கிய மானவர்களில் ஒருவர் தாகூர்.

### இளமை

கருவிலே திருவுடைய பெரியோர் பலரைப் போல, தாகூர் பள்ளிப்படிப்பில் சிறந்து விளங்கவில்லை. இயற்கையில் ஈடுபாடு மிக்கவராக விளங்கிய தாகூர், பள்ளிப் பாடங்களிலேயே தன்னைப் பறிகொடுத்து விட விரும்பவில்லை. வங்காள மொழியிலிருந்த வைணவ பக்திப் பாடல்கள் தாகூரைப் பெரிதும் கவர்ந்தன. அவற்றின் மெட்டிலேயே பாடத் தொடங்கிய தாகூர் ஆக்க இலக்கிய உலகில் அடியெடுத்து வைதார். வயதில் சிறியவர் வங்காள மொழியை முறையாகக் கற்கவுமில்லை; ஆங்கில அறிவுமில்லை. வங்காள மொழியைப் பழைய முறையில் கற்றவர்களும் ஆங்கில இலக்கியங்களை அரைகுறையாக அறிந்தவர்களும் தடியெடுத்து வந்தனர். தாகூருக்குப் படித்தவர்களிடையில் ஆரம்பத்தில் நல்ல எதிர்ப்பு இருந்தது. படித்தவர்களின் பாராட்டைப் பெற்றவர்கள் பாமரமக்களிடம் செல்வாக்குப் பெறவில்லை; தாகூர் பாமரர்களின் செல்வாக்கை முதலில் பெற்றார். படித்தவர்களின் பாராட்டு தாகூருக்குக் காலப் போக்கில் தான் கிடைத்தது. இந்த வகையில், தாகூரின் வரலாற்றுக்கும் தமிழ் நாட்டுச் சுப்பிரமணிய பாரதியாரின் வரலாற்றுக்கும் மிகுந்த ஒற்றுமையுண்டு.

### வங்க மொழி வளர்ச்சிக்கு......

தாகூர் கவிஞராக மட்டும் விளங்கவில்லை; பல்வேறு ஆக்க இலக்கியத் துறைகளிலும் முயற்சி செய்தார்; முயற்சிகளில் சுமாரான வெற்றியும் பெற்றார். ஆனால்,



கட்டுரை ஆசிரியர்

கவிதைத் துறை, அவருக்குக் கொடுத்த புகழை வேறு எத்துறையும் நல்கவில்லை. அவரின் பலதுறை முயற்சிகளால், வங்காள மொழி பல்வகை இலக்கியத்துறைகளிலும் வளம் பெற்றது. பாரத நாட்டில் இன்று வழங்கும் மொழிகளில், வங்காளி போல வேறு எதுவும் வளர்ச்சியடையவில்லை என்று இன்று பொதுவாகக் கருதப்படுவதற்கு, தாகூர் அளவு காரணகர்த்தா வேறெவருமில்லை. வங்காள மொழியைத் தற்காலத்துக்கேற்ற மொழியாக்கிய தாகூர், வங்காள மொழியின் மறுமலர்ச்சியில் சிறந்த இடம் வகிக்கும் இக் கவிஞர் இந்த அம்சத்திலும் தமிழ் நாட்டுப் பாரதியாரை ஒத்திருக்கிறார்.

### கவியும் இசையும்

சிறந்த கவித்துவம் வாய்க்கப் பெற்ற தாகூர் இசை வல்லுநராகவும் இருந்தார். ஓசை நயம் கனிந்த பாடல்களை இவர் வங்காள மொழியில் இயற்றினார். இவர் கவிதைகள் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட பொழுது, வங்காள மொழிப் பாடல்களில் இவர் அமைத்த ஓசை நயம் முதலியன பிறமொழி மொழி பெயர்ப்புகளில் அமையவில்லை. உயர்ந்த கவிதையை, வேற்று மொழிகளில் அதன் பெருமைகள் யாவும் அமைய மொழி பெயர்த்துவிட முடியாது. இவர் கவிதைகள் பிரபலமாகி, இவருக்குச் சர்வதேசப் புகழ் கிடைத்த பொழுது, இவர் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் அழைக்கப்பட்டார். மேலைத் தேயங்களிலும், சீனா, யப்பான் முதலிய கீழை நாடுகளிலும், இவர் தன்னுடைய பாடல்களை வங்காள மொழியில் பாடினார். மொழியின் தலை கால் புரியாதவர்கள் பலரும் கவிதையின் ஓசையில் மெய்ம்மறந்து தம்மைப் பறிகொடுத்தனர்.

### கீதாஞ்சலி

தாகூர் தன் ஐம்பதாவது வயது கழிந்த பின்னரே ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினார். தான் முன்பு எழுதிய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். வெளியுலகத்தவர்கள் புதையலொன்றைக் கண்டெடுத்தவர்கள் போலப் பெரு மகிழ்ச்சியுற்றுத் தாகூரைப் பாராட்டத் தொடங்கினர். தாகூர் கீதாஞ்சலியென்ற தன்னுடைய நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டார். உலகில் தோன்றும் சிறந்த இலக்கியத்துக்கு சுவீடனில் வழங்கப்படும் நோபெல் பரிசு 1913-ம் ஆண்டு தாகூருக்கு வழங்கப்பட்டது. அப்பரிசை அவருக்கு பெற்றுக்கொடுத்த இலக்கியம் கீதாஞ்சலியே. கீழைத் தேயத்தவர் ஒருவரின் இலக்கிய முயற்சிக்கு நோபெல் பரிசு கிடைத்தது, அதுவே முதன்முறை. பாரத நாட்டில் வங்காளத்துக்கு வெளியிலுள்ளவர்களும் தாகூரின் பெருமையை அப்பொழுது தான் அறிந்து கொண்டார்கள். மேனாட்டார் தாகூரைப் போற்றுவதைக் கண்ட ஆங்கிலங் கற்ற வங்காளிகளும் புகழை அவருக்கு வாரி வழங்கினார்கள். பொதுவாகப் பாரத நாட்டினரும், சிறப்பாக வங்காளிகளும் ஓரளவு தன் மதிப்பு உணர்ச்சி பெற்றார்கள். தங்களில் ஒருவர் உலகக் கவிஞர் வரிசையில் இடம் பெற்று விட்டது, அவர்களுக்குப் பெருமித உணர்வைத் தந்தது.

### தோற்றப் பொலிவு

தாகூரைத் தரிசிக்கவும், தாகூரின் வாயாலேயே அவர் கவிதைகளைக் கேட்டு மகிழவும் மேனாடுகள் முயன்றன. மேனாடுகளில் தாகூர் கேழ் பெறுவதற்கு அவர் புதாற்றப் பொலிவும் பெருமளவு காரணமாக இருந்தது. இயேசுகிறீஸ்து எப்படியானதோற்றமுடையவராக இருப்பாரென்று தாங்கள் கற்பனை செய்தார்களோ, அத் தோற்றத்தைத் தாகூரின் தோற்றம் ஒத்திருப்பதாகப் பலர் கூறினர். அவரின் தோற்றப் பொலிவு மேனாட்டார் பலருக்கு அவர் மேல் விசேட கவர்ச்சியை ஏற்படுத்திற்று.

### கவிஞரின் ஓவியம்

தாகூர் தனது வாழ்நாளின் இறுதிப் பகுதியில் ஓவியக் கலைஞராகவும் விளங்கினார். அவர் வரைந்த ஓவியங்கள் இந்தியமரபில் ஊறினவை என்று கூறமுடியாது; மேனாட்டுத் தற்கால ஓவியங்களைப் பின் பற்றியவை என்றும் கூறஇயலாது. கற்பனை வளமுள்ள அவர் உள்ளம் கண்ட கனவுகள் ஓவியங்களாக உருப்பெற்றன. அவர் ஓவியங்கள் சோவியத் உருசிய நாட்டில் சிறப்பாகப் போற்றப்பட்டன.

### வள்ளுவர் வழியில்........

இந்தியச் சிந்தனை வரலாற்றிலும் தாகூர் மிக முக்கிய

(14-ம் பக்கம் பார்க்க)

---

## இலக்கிய உலகு

**-"வேதாளம்"-**

## புதினம்

'வரதர்' என்ற தி. ச. வரதராசன் இருக்கிறாரே அவரொரு புதுமையான மனிதர். உயர்ந்த குறிக்கோள்களும், இலட்சிய வெண்ணங்களுமுடையவர் ஏதாவது புதுமையாகச் செய்து கொண்டிருக்க விரும்புபவர்.

இவர் முதலில் 'மறுமலர்ச்சி' என்றொரு தரமான இலக்கியப் பத்திரிகையைப் பல எழுத்தாளர்களுடன் சேர்ந்து நடத்தினார். ஈராண்டு வெளி வந்ததுபோலும். பின் 'ஆனந்தன்' என்றொரு பத்திரிகையை வெளியிட்டார். அதுவும் சிலகாலம் வெளிவந்து, ஐந்தாறாயிரத்தை ஏப்பம் விட்டுவிட்டு ஓய்ந்தது. அதன் பிறகு சிறிது கால ஓய்விற்குப்பின் 'மகாகவி'யைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு 'தேன் மொழி' என்றொரு கவிதைத் திங்களிதழை வெளியிட்டார். முன்னவற்றின் நிலைதான். ஓய்ந்தாரா?...

'புதுமை லோலனை' இணையாசிரியராகக் கொண்டு திரும்பவும் 'ஆனந்தனை' வெளியிட்டார், பலவிதழ்கள் நன்கு வெளிவந்தன. சிலகாலத்தின் பின் அதுவும் மறைந்தது.

ஈழத்து வாசகர் கூட்டத்தை, தரமான இலக்கியப் பத்திரிகைகளால் கவரவே முடியவில்லை என்பதை 'வரதர்' உணர்ந்து கொண்டார் போலும், அதனால்தான் 'புதினம்' என்ற 'சுவையான விடயங்களைத் தரும் வாரப்பத்திரிகையை நடாத்தினார். அதனாற்கூட நிலைக்கமுடியவில்லை. எனவே. தான் வரதரின் கவனம் 'பலகுறிப்பு' வெளியிடுவதில் திரும்பியது. இதுவரை ஈராண்டுப் பலகுறிப்புகள் வெளிவந்து விட்டன.

'வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறி விட்டது' என்பார்கள். அது போல 'வரதர்' பழையபடி பத்திரிகையொன்றை வெளியிட்டுள்ளார். 'புதினம்' பழையபடி வெளிவரத் தொடங்கியுள்ளது.

வரதருக்கு வேதாளம் ஒன்றைக்கூற விரும்புகின்றது: 'நீங்கள் ஒரு பத்திரிகையை இதுவரை தொடர்ந்து நடத்தியிருந்தால், ஈழத்தில் நிச்சயமாக அப்பத்திரிகை இன்று நிலைத்து விளங்கியிருக்கும். இடையிலேற்படுகின்ற மனச்சோர்வினால் பத்திரிகையைத்திடீரெனநிறுத்திவிட்டு, பின் சில காலஞ் செல்ல மனத்தெம்பு வரப் பழையபடி நடாத்த முயல்வதனால்,கீழிருந்துமேலேற வேண்டிய நிலை யேற்படுகின்றது. 'புதினமாவது தொடர்ந்து மலரட்டும்.'

### தொகுதிகள்

'நிலவும், நினைப்பும்'-

'தெய்வ மகன்'-

'கன்னிப் பெண'-

'சாலையின் திருப்பம்'-

'கோடை மழை'-

'கொழும்புப் பெண்'-

இவ்வாண்டு ஈழத்திலக்கியவுலகில் நூலுருப் பெற்று வெளிவந்த, வெளிவரவிருக்கும் சிறுகதைத் தொகுதிகளும், நகைச் சுவைத் தொகுதியுமாகும்.

இவ்வாண்டுதான் அதிக சிறுகதைத் தொகுதிகள் வெளிவரவிருக்கின்றன. 'நிலவும் நினைப்பும்' என்ற சிறுகதைத் தொகுதி 'சிற்பி'யினது. அது பாரி நிலையத்தினரால் வெளியிடப்பட்டும், இன்னும் விற்பனைக்கு வரவில்லை.

'நாவேந்தனி'ன் சிறுகதைத் தொகுதி 'தெய்வ மகன்!' விரைவில் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இளம் எழுத்தாளர் 'நகுலனி'ன் சிறுகதைத் தொகுதி 'கன்னிப்பெண்!' அண்மையில் வட்டுக்கோட்டையில் வெளியீட்டு விழா நடந்தது.

டொமினிக் ஜீவாவினுடைய சிறுகதைத் தொகுதிதான் 'சாலையின் திருப்பம்!'

செம்பியன் செல்வன் வெளியிட விருக்கும் சிறுகதைத் தொகுதியின் பெயர்: கோடைமழை!

பொ. சண்முகநாதனின் நகைச்சுவைத் தொகுதி 'கொழும்புப் பெண்.'

இவற்றைவிட இன்னும் பெயரிடப்படாத சிறுகதைத் தொகுதிகள் சிலவும் அச்சிலுள்ளன. கே.வி. நடராஜாவின் ஒரு சிறுகதைத் தொகுதியும்,யாழ்வாணனின் ஒருசிறுகதைத் தொகுதியும் அச்சிலுள்ளவை.

நல்லதோ, கெட்டதோ நூல்கள் பல வெளி வர வேண்டியது அவசியந்தான். ஆனால், ஈழத்து வாசகர் கூட்டம் இவற்றைப் பணம் கொடுத்து வாங்குமா? விற்பனையாளர்கள் கூடியவூக்கத்துடன் விற்பனை செய்து கொடுப்பார்களா?

அவ்வளவு தூரம் நாம் முன்னேறவில்லை.

இவ்வளவு தொகுதிகளும் அவரவர் சொந்தச் செலவிலே தான் வெளிவருகின்றன. ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு அச்சிடுவித்து வெளியிட்டு என்ன பயன்? அடுக்கி வைத்து அழகு பார்த்து தூசுறைய விடுவதா?

எல்லாருக்கும் சாகித்திய மண்டலப்பரிசா கிடைத்துவிடப்போகிறது, அச்சிட்ட செலவைப் பெற?

சொந்தக் குழந்தைக்குப் பால் கொடுக்க விரும்பாதவர்கள் நம்வாசகர்கள்.

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஆகஸ்ட் மாதம் 1-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183


## பேச்சு வார்த்தை நடத்துக!

அரசாங்க ஊழியர்கள் சிங்களத்திற் தேர்ச்சி பெறுவது பற்றி புதிய சிக்கலொன்று தோன்றியுள்ளது. இது பற்றி அரசாங்கம் அண்மையில் சில முடிவுகளைச் செய்துள்ளது.

1956 செப்டம்பர் மாதத்துக்கு முன்னர் அரசாங்க சேவையிற் சேர்ந்த பழைய சேவையாளர் சிங்களத் தேர்ச்சி பெறுவதினின்று விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். முன்னுள் அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பள உயர்வும், பதவி உயர்வும் அவர்களுக்கு மீண்டும் வழங்கப்படும் என்று தெரிகிறது. இந்த முடிவு பெரிதும் வரவேற்கத் தக்கதாகும்.

சிங்களத் தேர்ச்சி பெருததை ஒரு குற்றமாகவே முன்னுள் அரசாங்கம் கருதியது. எனவே தமிழ் ஊழியர்கள் கட்டாய ஒய்வு போன்றஅநியாய அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டனர். சம்பள உயர்வு நிறுத்தப்பட்டு அவர்கள் மீது பொருளாதார நிர்ப்பந்தமும் பிரயோகிக்கப்பட்டது. அலுவலகங்களில் அவர்களுக்கெதிராகப் பல கெடுபிடிகளும் நடைபெற்றன.

இந்த நிலை பழைய சேவையாளர்களைப்பொறுத்தளவில் இப்பொழுது முற்ருக மாறியுள்ளதென்றேதெரிகிறது. இனிமேல் அவர்கள் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு உட்பட்டவர்களல்ல. அவர்களுக்கு அதினின்று விடுதலை (பூரண விடுதலை இல்லையெனினும்) கிடைத்துள்ளது.

பழைய சேவையாளர்களுக்கு இது ஒரு மாபெரும் வெற்றியென்றே கூறவேண்டும். ஏனெனில் அரச கருமமொழியிற் தேர்ச்சி பெறவேண்டுமென்ற கட்டாயம் இனி அவர்களுக்குக்கிடையாதல்லவா? எனவே அவர்களின் பிரச்சினை தேசிய அரசாங்கத்தின் இந்த முடிவால் பெருமளவு தீர்ந்து விட்டது.

ஆனால் அதில் மற்ருெரு சிக்கலும் ஏற்பட்டுள்ளது. 55 வயதில் ஓய்வு பெருமல், தொடர்ந்து பணியாற்ற விரும்பும் பழைய சேவையாளர்கள் சிங்களத்திற்தேர்ச்சி பெறவேண்டுமென்பதே அந்தச் சிக்கல். இஃது எவ்வகையிலும் தேவையற்ற ஒரு நிபந்தனையாகும். 55 வயதுக்குப் பின்னர் ஓர் அரசாங்க ஊழியர் சிங்களம் கற்று தேர்வுப் பரீட்சைகளில் சித்தி பெறமுடியுமென்று அரசாங்கம் எப்படிக்கூறமுடியும்? பல மொழிகளைக் கற்பதில் ஆர்வம் கொண்ட பன்மொழிப் புலவர் ஒருவர் வேண்டுமானுல் வயதைக்கவனியாது வயோதிகத்திலும் ஒரு மொழியைக்கற்றுக்கொள்ள முன்வரலாம், சாதாரண அரசாங்க ஊழியர்களிடம் இத்தகைய சாதனையை எதிர்பார்க்க முடியுமா?

பழைய சேவையாளர்களுக்குச் சிங்களத் தேர்ச்சியில் இருந்து விதிவிலக்கு அளித்தபின்னரும் இந்த "வயோதிக கால நிபந்தனை'' எதற்கு? இதனையும் அகற்றி அவர்களுக்குச் சிங்களச் சட்டக் கெடுபிடிகளிலிருந்து பூரண விடுதலை வழங்க வேண்டியதே அரசாங்கத்தின் கடமை.

1956க்குப் பின்னர் சேவையிற் சேர்ந்த புதிய ஊழியர்களைப் பற்றிய அரசாங்கத்தின் முடிவு தமிழ் எழுதுவினைஞர்கள் வட்டாரத்திலே அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது.

புதிய சேவையாளர்களுக்குச் சிங்களத்தில் தேர்ச்சி பெற மூன்று வருடங்கள் அவசாசம் அளிக்கப்பட்டுள்ளது. சிங்களத் தகுதி பெறும்வரை அவர்களுக்கு பதவி உயர்வோ சம்பள உயர்வோ, பதவி ஊர்ஜிதமோ கிடையாதாம்! இனிமேல் அரசாங்க சேவையில் சேரும் ஊழியருக்கும் இதே கதிதான்.

முன்னுள் அரசாங்கத்துக்கும் தேசிய அரசாங்கத்துக்குமிடையே மொழிக்கொள்கையில் வித்தியாசம் கிடையாதென்பதையல்லவா இந்த முடிவு எடுத்துக் காட்டுகிறது? இது தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு நியாயம் வழங்குவதாகாதே!

முன்னுள் அரசாங்கம் சென்ற வழியில் தேசிய அரசாங்கம் செல்ல முயற்சி செய்வது முற்றிலும் தவருகும். புதிய அரசாங்கம் பழைய முறையை மாற்றியமைக்க வேண்டுமேயன்றி அதனை அப்படியே பின்பற்றக் கூடாது. அப்படிச் செய்வது தேசிய அரசாங்கத்தின் அடிப்படை இலட்சியத்துக்கே மாருனதாகும். தேசிய ஐக்கியம் ஏற்படுவதற்கும் இதனுல் குந்தகம்விளையலாம்.

இந்த முடிவு ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கண்டுள்ள மொழிக்கொள்கைக்கும் முரண்பட்டதாகும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் கண்டுள்ள கொள்கையை அமுல் நடத்த வேண்டுமேயன்றி அதனை நழுவ விடுவது ஐ. தே. கட்சிக்கும், தேசிய அரசாங்கத்துக்கும் பாதகமானது என்பதை நாம் விளக்கிக் கூறவேண்டியதில்லை.

கட்டாய ஓய்வு பெற்றவர்கள் மீண்டும் பணியாற்ற அனுமதிக்கப்படமாட்டார்களென்றே தெரிகிறது. கட்டாய ஓய்வு அந்த ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட ஒருமா பெரும் அநீதியாகும். அது அநீதியெனத் தேசிய அரசாங்கம் ஏற்றுக் கொண்டால், அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதே நியாயம். இல்லையேல் அநீதியை மறைமுகமாக ஏற்றுக் கொண்டதாகக் கருத இடமேற்படுமே!

சுருங்கக் கூறின், அரசாங்க ஊழியர்கள் விடயத்தில் அரசாங்கத்தின் மொழிக் கொள்கை புனராலோசனை செய்யப்பட வேண்டியதாகும். அவர்களுக்கு இழைக்கப்

# ஆசியாவில் யுத்த மேகங்கள் ஆபத்துக்கே அறிகுறியாகும்

## சமாதானம் பேசுவோரே சமருக்கு முந்துகின்றனர்

வட வியட்நாம் கொம்யூனிஸ்ட் கட்சி கொரில்லாக்களுக்கும் தென் வியட்நாம் துருப்புகளுக்கும் நடைபெறும் போராட்டங்களுக்கு சீன, ருஷ்யா-ஒரு புறமும், மறுபுறம் அமெரிக்காவும் தூபமிடுகின்றன. இந்நிலமை நீடித்துக் கொண்டே போகுமானுல் இவ்விரு நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல-உலகனைத்துமே பேரபாயம் ஏற்படப்போகிறது. சமாதானம் விரும்பிகள் என்று தம்பட்டமடிக்கும் வல்லரசுகள் தங்கள் ஆயுதத் தயாரிப்புகளைப் பரீட்சிக்கச்சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டுள்ளன.

தென்கிழக்காசிய நாடுகளுக்கு மேலாக யுத்த மேகங்கள் சூழ்ந்து கொண்டு வருகின்றன. மாதக்கணக்காக நீடிக்கும் இந்த மப்பான நிலை மாற்றமடைவதற்கேற்ற சூழ்நிலை எதையுமே காணக்கூடியதாகவில்லை. மாதங்கள் வருடங்களாக மாறிப்போகுமானுல் நிலைமை மோசமாகி பேய்மழையடிக்க ஆரம்பித்துவிடும்.

தென்வியட்நாம் தேசிய அரசாங்கத்துக்கும் வடவியட்நாம் கொம்யூனிஸ்ட் கொரில்லாப் படையினருக்கும் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வருகிறது. குண்டுவிச்சு சம்பவங்களும் விமானங்களும் சுட்டுவீழ்த்தப்படும் செய்திகளும் நாளொன்ருக அதிகரித்துக்கொண்டே வருகிறதேயன்றி குறைவதாயில்லை.

அருகருகே யிருக்கும் இருநாடுகள் ஒன்ருேடொன்று மோதிக்கொண்டால் ஏற்படக்கூடிய நட்டம் சிறிதாகவேயிருக்கும். தென்வியட்நாம்—வடவியட்நாம் நாடுகளின் பாய்ச்சல்களுக்கு தூண்டுகோலாக வேறு பல நாடுகள் தலையிட்டிருப்பதனுல்தான் சில ஆயிரம்மைல்களுக்கு அப்பாலுள்ளநாமும் கவலைப்பட வேண்டியுள்ளது.

### வல்லரசுகள் மோதல்

தென்வியட்நாமில் அமெரிக்கப்படைகள் அணிவகுத்துக்கொண்டு போர் முரசறைந்துகொண்டுள்ளன. வடவியட்நாமுக்கு கொம்யூனிஸ்ட் சீனுவும் ருஷ்யா

சுதந்திரன் அரசியல் நிருபர்

வும் ஆயுதபலமளித்துத் தங்கள் துருப்புகளையும் குவித்துக்கொண்டுள்ளன. தங்களுக்குச் சம்பந்தமில்லாத அந்நியப் பிரதேசங்களில் புகுந்துகொண்டு இரு சக்திகள் தங்கள் பலப்பரீட்சையை நடத்தத் தலைப்பட்டிருப்பதால்எந்தவகையான பாபமுமறியாத அப்பாவிமக்கள் அனுதினமும் அல்லலுற்று அழிந்து போகின்றனர்.

ஏவுகணைகளையும் கண்டம் விட்டுக் கண்டம்பாயும் குண்டுகளையும், மெகட்டோன் குண்டுகள்போன்ற அபாயகரமான—மனித இனத்தையே பூண்டோடொழித்துக்கட்டக்கூடிய—ஆயுதங்களையும் அமெரிக்காவும், ருஷ்யாவும், சீனுவும் தயாரித்து வைத்துக்கொண்டு பரீட்சித்துப் பார்க்கத் தக்க சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. வியட்நாம் பிரதேசத்தில் நிலைமையைக் கட்டுப்படுத்துவதில் தாமதம் ஏற்

### வீரனாக விருப்பமில்லையா ?

தன்னைத்தானே கொல்லுபவன்—முட்டாள்.

வேருெருவனைக் கொலை செய்பவன்—கொலைக் குற்றவாளி.

'பலரைக் கொன்று குவிப்பேன்' என்று கூறுபவன்—சமாதானப் பிரியன்.

ஒரே தடவையில் பல்லாயிரக் கணக்காகேனரைக் கொன்றவன்—வீரன்.

வீரனுவதற்கு யாருக்குத்தான் ஆசை இருக்காது?

படுமானுல்,மேற்குறிப்பிட்ட ஏவுகணை, கண்டம் விட்டுக் கண்டம் பறக்கும் குண்டு, அணுக்குண்டு, சலவாயுக் குண்டு, மெகட்டான்குண்டு முதலான சகலஆயுதங்களும் பரீட்சிக்கப்பட வியட்நாமே கேந்திர ஸ்தானமாகிவிடக்கூடும்.

### சமாதான மாநாடுகள்

பயங்கரமான ஆயுதங்களை உற்பத்திசெய்வதைத் தடைசெய்யவேண்டுமென்று வல்லரசுகளனைத்தும் மாநாடுகள் பல கூட்டி முடிவுக

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழுக்கு இடம் எங்கே ?

இந்நாட்டில்வாழும் சகல இன மக்களையும் சரிசமமாக நடாத்துவதாக தேசிய அரசாங்கம் வாக்களித்துள்ளது. பல துறைகளில் இதனை நிரூபித்தும் வருகிறது. ஆனுல் சில அத்தியாவசிய துறைகளில் பழைய வகுப்புவாத நெடி தொடர்ந்து வீசிக்கொண்டேயிருப்பதைக் காண்கிருேம்.

அரசாங்கப் பணிமனைகள் சில இன்னும் சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு அளிக்கும் இடத்தை தமிழுக்குக்கொடுக்கமறுத்து வருகின்றன. பொது மக்களோடு தொடர்பு கொள்ளும் இத்துறைகளில் தமிழ் பேசும் மக்கள் எப்பொழுதும் நெருங்கி உறவாடி வருகின்றனர். ஆனுல் அவர்களுடைய மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படுவதாகத் தெரியவில்லை.

## இ. போ. ச.

இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டிகளை தமிழ் பேசும் மக்கள் புறக்கணிப்பதில்லையே? சிங்கள மக்கள் கொடுத்துப் பிரயாணம் செய்து வரும் அதே கட்டணத்தைத்தானே ஏனையோரும் கொடுத்து வருகின்றனர். இருந்தும் கொழும்பிலும்,வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுமுள்ள பஸ் வண்டி நிலையங்களில்—குறிப்பிட்ட பஸ் வண்டியின் இலக்கினைக்குறிக்கும் பெயர்ப்பலகைகள் இன்னும் சிங்களத்தில் மட்டும் இருக்கின்றனவே. நிலயங்களிலுள்ள அறிவிப்பாளர்களின் குரலை ஒலிபரப்பும் ஒலிபெருக்கி தனிச் சிங்களத்தையே ஒலிக்கிறது. சிங்களம் தெரியாதவர்கள் எத்தனையோ பேர் இத்தகைய இடங்களுக்குச் செல்லுகின்றனர். அவர்கள் பிரயாண விபரங்களை அறிவது எங்ஙனம்?

பட்ட அநீதிகள் அகற்றப்படுவதுடன், இனிமேல் புதிதாக அநீதி இழைக்கப்படவும் கூடாது. மாற்ற முடியாத எந்த முடிவும் உலகிற் கிடையாது. ஆகவே அரசாங்கத்தின் இந்த முடிவுகளையும் மாற்றி அமைப்பது கடினமன்று. அதற்கு மற்ருெரு முயற்சிதான் தேவை.

நாட்டிலே ஒரு தேசிய அரசாங்கம் ஏற்பட்டுள்ளது. மக்களிடையே ஐக்கிய உணர்ச்சியும் காணப்படுகிறது. மொழி பிரச்சினை உட்பட எல்லாப் பிரச்சினைகளையும் இந்த அரசாங்கம் தீர்த்து வைக்குமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். தமிழ் பேசும் மக்களும் இந்த பொன்னுன வாய்ப்பையும், சிறந்த சூழ் நிலையையும் இராஜதந்திர முறையிற் சரிவரப் பயன்படுத்திக் கொள்வதே அறிவுடமை.

பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் நல்ல சூழ் நிலையை எக்காரணத்தை முன்னிட்டும் கெடுத்துவிடக் கூடாது. சூழ் நிலைபாதகமாக மாறினுல், அஃது எதிர்கட்சிக்குச் சாதகமாக முடியும் என்பதில் ஐயமில்லை. தேசிய அரசாங்கம் தமிழுக்குச் சம அந்தஸ்து வழங்கி விட்டதாக எதிர்க் கட்சியினர் ஏற்கனவே சிங்களப் பகுதிகளிற் சூருவளிப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் நிதானத்துடன் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முற்பட வேண்டும். பேச்சு வார்த்தைகள் மூலம்எத்தனையோ சிக்கல்களை தீர்த்துக்கொள்ளக் கூடிய ஒரு சூழ் நிலைதான் இன்று நிலவுகிறது. ஆதலின், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு நியாயம் வழங்க தமிழரசுத் தலைவர்கள் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும். இதனுல் நிச்சயம் பயன் கிடைக்கும். பேச்சு வார்த்தைகளை நடத்தக் கூடிய சூழ் நிலையும் வாய்ப்பும் இருக்கும் போது, அவற்றைப் பயன்படுத்த வேண்டியது தலைவர்களின் கடமையாகும்.

வாதாடிப் பெறும் திடசித்தம் என்றும் தமிழ் மக்களுக்கு உண்டு என்பதை இங்கு நினைவுட்டுகின்ருேம்.

## மறையும் தமிழ்

குடிவரவு வெளியகல்வுத் திணைக்களம்

(9-ம் பக்கம் பார்க்க)

# புதுமுறையில் இயங்கும் தமிழ் ஒழிப்பு இயக்கம்

## குடிவரவு—குடியகல்வு இலாகாவில் அதிகாரி ஒருவரின் கெடுபிடி

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் திடீரென தமிழ் ஒழிப்பு இயக்கம் ஒன்று தலையெடுத்து விட்டதோ என்ற ஐயம் எழக்கூடிய வகையில் சில சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இதுவரை காலமும் தமிழில் சில அலுவல்கள் இங்கு கவனிக்கப்பட்டு வந்ததாகவும் திடீரென தமிழில் எவ்வித வேலையும் ஒப்புக்கொள்ளப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டதென்றும் தெரிகிறது.

பல வருடங்களாக தமிழ் விண்ணப்பப் படிவங்களை ஏற்று வந்த குடிவரவு-குடியல்வுத் திணைக்களம் திடீரென தமிழ்ப்படிவங்களை ஏற்க மறுத்துவருவதாகத் தெரியவருகிறது. இந்தியாவுக்கு உல்லாசப்பயணம் புறப்பட்டுள்ள மட்டக்களப்பு தமிழாசிரிய கலாசாலை மாணவர்கள் தங்கள் அவசரகாலச் சாட்சிப்பத்திரத்தைப் பெறுதற்கான விண்ணப்பங்களை தமிழில் நிரப்பிக் கொடுத்தபோது அவற்றை ஏற்க அதிகாரிகள் மறுத்துவிட்டனராம். சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில்மட்டுமே எழுதப்பட வேண்டும் என்றும் அவ்வதிகாரிகள் சொன்னார்களாம்.

குடிவரவு — குடியகல்வுத் திணைக்களத்தில் விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் பகுதியில் கடமையாற்றும் அதிகாரிகள் அனைவரும் சிங்களவர்களாக மாற்றப்பட்டதே இதற்குக் காரணம் என்று தெரியவருகிறது.

பெரும்பான்மையான தமிழில் எழுதப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பலகாலமாகப் பரிசீலிக்கப்படாமல் ஒரு மூலையில் கிடப்பதாகவும் கூறப்படுகிறது. கடந்த அரசாங்கத்துக்கு ஆதரவாகவிருந்த ஒரு மேலதிகாரி இத்திணைக்களத்திலிருந்து கொண்டு தேசிய அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டைபோடுவதேஇதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

இத்திணைக்களத்தில், பொதுமக்களுக்கு அறிவித்தல் கொடுப்பதற்காகப் பொருத்தப்பட்டுள்ள அறிவித்தல் பலகையில் சிங்களமும் ஆங்கிலமும் மட்டுமே தென்படுகிறது. குறிப்பிட்ட கருமங்களையாற்றும் கருமபீடங்களின் பெயர்களும் அதிகாரிகளின் பெயர்களும் கூட சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே உள்ளன. சிங்களம்—ஆங்கிலம் தெரியாதவர்கள் இங்கு சென்று கருமம் முடிப்பது பெரிதும் கடினமாகிவிட்டது.

இவ்விலாகாவின் திடீர் மாற்றத்தையிட்டு தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு புகார் செய்தபோது அவர் உடன் நடவடிக்கை எடுப்பதாக வாக்களித்துள்ளார். எனத் தெரிகிறது.

## முந்திரிகை செய்கைக்கு முடிக்குரிய காணி

வவுனியா மாவட்டத்தில் உள்ள 10000எக்கருக்குமேற்பட்ட காணி முந்திரிகைச் செய்கைக்காக விநியோகிக்கப்படவிருக்கிறது. மரிரைம்பத்து காரியாதிகாரிப் பகுதியைச்சேர்ந்த சாளை, கொக்குத்துடுவில், புதுக்குடியிருப்பு வெண்கலச்செட்டிகுளம் காரியாதிகாரி பகுதியைச் சேர்ந்த பூவரசங்குளத்திற்கும், பறயனாளன் குளத்திற்கும் இடைப்பட்ட பகுதி, வவுனியா வடக்கு காரியாதிகாரிப் பிரிவைச் சேர்ந்த மாங்குளம் கிராம சேவகர் பகுதிகளிலிருந்தே மேற்படி நிலங்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன.

காணி பெறுவதற்கான விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் 21ம் நாளாகும். இக் காணிக்கான காணிச் கச்சேரி ஆகஸ்ட் 30, 31, செப.1 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

(மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கும் ஏனைய விபரங்களுக்கும் யூலை 23ம் திகதி அரசாங்கவர்த்தமானியின் 352-53.ம் பக்கங்களைப் பார்க்க)

## ஆசியாவில்..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ளொடுத்தன. ஆனுல் அதே வல்லரசுகள் இன்று அதே ஆயுதங்களைக் காண்பித்து உலகைப் பயமுறுத்த ஆரம்பித்துவிட்டன. சமாதானம் விரும்பிகள் என்று தம்பட்டமடிக்கும் வேளையில் சமாதானத்துக்கு சவக்குழி தோண்டுவதில் இவை முன் நிற்கின்றன.

இந்தோனேஷியா

தவழும் பருவத்திலேயிருக்கும் இந்தோனேஷியாவும் எப்படியாவது தன் தலையை ஏனைய வல்லரசு நாடுகளுடன் சரிசமமாக்கிவிடலாமா என்று துடிக்க ஆரம்பித்திருக்கிறது. 'ஏவு கணைகளை வைத்திருக்கிறேன். சிலவிசைகளைஅமுக்கியவுடனே பாய்ந்தெழுந்து மலேசியாவையே தகர்த்தெறியும் இக்கணைகள்,என்று இந்தோனேஷிய அதிபர் கூறுகிருர். அடுத்த வருடத்தில் அணுக்குண்டையும் தயாரிக்கப் போவதாக அவர் சவால் விடுத்திருக்கிருர்.

—

## கதிர்காம...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளனர். அத்துடன் மலையகத் தமிழ் தொழிலாளர்கள் யாத்திரை செல்லும் போது தங்கள் உடமைகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், சூது விளையாட்டுக்காரர்களிடம் கவனமாக விருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

மலைநாட்டுத் தொழிலாளர் சமூகத்துக்கு இத்துறையில் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கவும், அவர்களுக்கு எச்சரிக்கை செய்யவும் இலங்கைத் தொழிலாளர் சமூகம் போன்ற நிறுவனங்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஒரு பிரமுகர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

## உணுப்பிட்டியில் சுந்தரர் குருபூசை

உணுப்பிட்டி இந்து சன் மார்க்க சங்க ஆதரவின் கீழ், உணுப்பிட்டி தமிழ் கலவன் பாடசாலையில் எதிர் வரும் புதன்கிழமை(4.8.65) சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை நடைபெறும்.

மேற்படி விழாவில், திரு, ஆ. கந்தையா எம். ஏ., பேச்சும், திருமதி ஜெயம் கந்தையா, செல்வி யோகா சிவசுப்பிரமணியம் சகோதரிகளின் இன்னிசை விருந்தும் நடைபெறும்.

—

## தமிழுக்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல இனமக்களும் சந்திக்கும் ஒரு பகுதி. இப்பகுதியிலும் தமிழ் மறைந்து வர ஆரம்பித்திருப்பதாகவும் ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. தமிழ் பேசும் மக்களுக்கு உரிமை வழங்கப்படும் என்று காத்திருக்கும் எமக்கு இத்தகைய செய்தி பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது.

இந்தியாவுக்குச் செல்ல பயண உத்தரவுச் சீட்டுகள் பெறுதற்காக இக்காரியாலயத்துக்குச் சென்ற, தமிழ் மட்டும் தெரிந்த சில தமிழாசிரியர்கள் இத்திணைக்களத்தில் தங்களுடைய பிரச்சினையைக் கவனிக்க ஒரு தமிழ் ஊழியரும் இல்லையென்பதைக் கண்டு திகைத்தனராம். அங்கிருந்த ஒரே ஒரு தமிழ் தெரிந்த ஊழியரும் திடீரென அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டு விட்டாராம்.

இத்துடன் மட்டுமல்லாமல் சகலரும் பார்த்து வாசித்தறிய வேண்டிய அறிவித்தல்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே இடம் பெற்றுள்ளனவாம். சில வாரங்களுக்குள்ளேயே இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதனுல், அரசாங்கத்தின் போக்குக்கே முற்றிலும் மாருகச் செயலாற்றும் சில உயர்தர அதிகாரிகள் இத்தகைய நடவடிக்கையிலிறங்கியிருக்கலாம் என்று கருத வேண்டியிருக்கிறது.

—

## புரட்சி நடிகர்..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பதை எனக்கு விபத்து ஏற்பட்டிருந்தபோதுதான் உணரத் தலைப்பட்டேன். படுக்கையிலிருக்கும்போது என்னைப் பார்க்கவரும் தயாரிப்பாளர்களின் பரிதாபமான முகங்களைப் பார்க்கும்போதுதான் எனது தவறுகளை நான் உணரத் தலைப்பட்டேன். எத்தனையெத்தனை உள்ளக்கிடக்கைகளை வெளிப்பூச்சிட்டு மறைத்துக்கொண்டு இத் தயாரிப்பாளர்கள் இங்கு வருகிருர்களோஎன்று எனது உள்ளம் என்னைக்குத்திக்காட்டி வதைக்கத் தொடங்கியது. நம்மைநம்பி பல இலட்சங்களை தொழிலில் முடக்கியவர்களுக்கு நான் புரிந்து வந்த துரோகச்செயலை எண்ணிப் பொருமினேன்.

தற்செயலாக இவ் விபத்தில் என் உயிருக்குஏதாவது நேர்ந்திருந்தால் இவர்களின் கதி என்னவாகும்என்பதை எண்ணினேன். இந்த எண்ணத்தின் பயன்தான் இன்று எனக்கு வெற்றி ஏற்படக் காரணமாகவிருக்கிறது.

## லண்டனில் வாழ்க்கைப் படகு

லண்டன் மாநகரில் ஜெமினி தயாரிப்பான 'வாழ்க்கைப் படகு' இம் மாதம் 31ம் திகதி சனிக்கிழமை திரையிடப்படுகிறது. லண்டனிலுள்ள தமிழ்க் கலாச்சார சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

தமிழ்க் கலாச்சாரத்தின் தன்மையை இங்கிலாந்து மக்களுக்கு திரைப்படங்கள் மூலமாகவும் விவாத அரங்குகள் மூலமாகவும் எடுத்துக்கூற இச்சங்கம் முயற்சி எடுத்து வருகிறது. இவர்கள் திரையிடும் முதல் திரைப்படம் இதுவாகும். ஜெமினி கணேசன், சாவித்திரி, தேவிகா நடித்த இப்படம் கொமன்வெலத் இன்ஸ்டிட்டியூட் தியேட்டரில் காண்பிக்கப்படுகிறது.

## வகுப்புவாத...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு தொடர்பிருக்க முடியும்?எனவே முற்போக்கு வாதிகள் என்று கூறுகின்ற நீங்க 'எங்களுக்கும் தொடர்பு இல்லை' என்று முடிந்தால் துணிந்து கூறுங்கள்.

எதிர்க்கட்சிகளுக்கு.......

இந்நாட்டிலுள்ள சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்குமிடையே கடந்த எட்டு, ஒன்பதுஆண்டுகளாக வகுப்புவாதத்தைஏற்படுத்திநாட்டு மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து ஆட்சிப்பீடத்திலிருந்தீர்கள். இப்பொழுதும்—ஆட்சிபீடத்தை இழந்தபின்பும் நிலை தவறி, தட்டுக்கெட்டு வேறு வழியில்லாமல் வகுப்புவாதத்தை நீங்கள் கக்குவது இந் நாட்டுக்கே அவமானமாகும். இப்படிப்பட்ட பொய்களைக் கொஞ்சமும் கூசாமல், சிறிதும்வெட்கமடையாமல் நீங்கள் பரப்பினுல் இந்த வகுப்புவாதப் பூதம் உங்களையே அழித்துவிடும். இதைத் தடுக்க பிரதம அமைச்சர் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## யாழ். இலங்கா...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்குமுக்காடித் தவிக்கின்றனர்.

பல வருடங்கள் பதிவுடன் இயங்கிய கல்லூரிக்கு திடீரென பதிவு நீக்கம் செய்யப்பட்டமைக்கு அரசாங்கம் எதுவித காரணமும் காட்டவில்லை.

சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் கடந்த 1-7-65ல் வந்து மாணவர்களால் அமைக்கப்பட்ட கூட்டத்திலும் பேசினுர். இக்கூட்டத்திற்கு திரு. கோமஸ் டபிள்யு. டி. அல்விஸ் தலைமைதாங்கினுர்.

திரு. நவரத்தினம் பேசுகையில் 'இக்கல்லூரியில் பயின்று வெளியேறிய மாணவர்கள் எவரும் எந்த ஆங்கில வைத்தியருக்கும் பின்போனவர்களல்லர். ஆங்கில வைத்தியர்களை விடத் திறமைசாலிகளே,' என்று கூறினுர். முன்பிருந்த ஆட்சியாளர்கள் இக்கல்லூரியின் பதிவினை நீக்கியமை பெரும் அநீதியானதாகும் என்று சொன்னுர். மீண்டும் இக்கல்லூரியை அரசாங்கம் இருமாதங்களில் அங்கீகரிக்க தம்மாலான முழுமுயற்சிகளையும், தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் செய்துதருவதாக வாக்களித்தார். பயின்று வெளியேறி பதிவின்றியிருக்கும் வைத்தியர்களுக்கும் பதிவு பெற்றுத் தருவதாகவும் கூறினுர்.


களிப்புற்ற வாழ்க்கை சலிப்புற்றதா?

அதற்குக் காரணம்...?

கல்யாண விஷயமா?
காதல் விவகாரமா?
கிரக தோஷமா?
கீர்த்தி கேடா?
குடும்பத் தகராறு?
கூடுதல் கடனு?
கெடுதல் வருகையா?
கேடுகள் சேர்க்கையா?
கை நஷ்ட வியாபாரமா?
கொடிய எதிரியா?
கோணல் வாழ்வா?
கௌரவ தாழ்வா?

எதுவாறுலென்ன!

நிவாரணம் பெற
என் உதவியை நாடுங்கள்!
இலவச ஆலோசனைக்கு
எனக்கொரு கடிதமெழுதுங்கள்!

பி. எம். திசாநாயக்க,



நான்கு கோயில்களின் தர்மகர்த்தா
கண்டி ரோட், கம்பளை.
போன் : 454

இவ்வாரச் சிறுகதை

# கண்ணீர்

பொ. சண்முகநாதன்

அதோ அந்தப் பிரதான வீதியின் ஓரத்தில் இருக்கிறதே ஒரு கொட்டில்--பலகைகளால் ஆக்கப்பட்டது-'வணக்கம் வருக' என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. சுற்றியுள்ள வேலிகளில் பிளாக்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. வேலியை ஒட்டி இருப்பதாகப் படுக்கை வாட்டத்தில் பனைமரத் துண்டு ஒன்று போடப்பட்டிருக்கிறது.

இங்கே போவதென்றால் சிலருக்குக் கடவுளைக் காணப் போவதுபோல் இருக்கும். இன்னும் சிலருக்கோ இந்தப் பக்கமாகப் போவதென்றால் கூட வேம்பாகக் கசக்கும்.

அதோ இந்தக் கொட்டிலில் இருந்து சுமார் நூறு யார்களுக்கப்பால் ஒரு கையில் இரண்டு போத்தல்கள் அடங்கிய பையுடனும் மறுகையில் சில்லறைகளுடனும் தயங்கித் தயங்கி கொட்டிலை வெறித்தபடி நிற்கிறானே மணி என்ற சிறுவன்-அவனும் கொட்டில் பக்கமே போவதென்றால்கூட வேம்பாகக் கசக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவன்தான். இருந்தாலும் அங்குபோய் கள்ளு வாங்க வேண்டுமே என்பதை நினைக்கும்போது அவனது நெஞ்சம் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

'கொட்டிலுக்குப் போவதா அல்லது திரும்பி வீட்டுக்குப் போவதா? திரும்பிப் போனால் மாமாவுக்கு என்ன பதில் சொல்லுவது? கள்ளு இல்லை என்று சொல்லுவதா? சீச்சி அது பொய்யல்லவா? பொய் சொல்லுவதுகூட மிகவும் பாவமானதல்லவா? பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாதே! அப்படியானால் போய்த்தான் ஆகவேண்டுமா?'

ஓர் அடி எட்டி நடந்த மணி மீண்டும் நின்றான்.

'ஐயோ ஐயோ யாராவது அறிந்தவர்கள் கண்டால்...? சீச்சி கள்ளுக் கொட்டிலுக்குப் போய்... குடிகாரக் குடும்பத்தில் பிறந்தவன் என்று என்னை நினைத்தால்...? நேற்று ஆறுமுக வாத்தியார் கண்டதுபோல இன்றும் யாராவது கண்டால்...? ஆறுமுக வாத்தியார் இதைப் பற்றி என்னிடம் ஒன்றும் கேட்காவிட்டாலும் ஒருவருக்குமே இதைப்பற்றி சொல்லாவிட்டாலும் கூட இதைப்பற்றியெல்லாம் என்னென்ன நினைத்திருப்பாரோ...!'

திடீரென்று யாரோ பின்னால் வந்து மணியின் தோளைத் தட்டியதும் அவன் திடுக்கிட்டே போனான்; திகைத்துத் திரும்பினான். தட்டியவன் அவனுடன் ஒன்றாகப் பயிலும் அடுத்த வீட்டுக் கணேசனே!

'என்ன மணி போத்தலுடன்......ஓகோ கள்ளு வாங்கவா? என்னடா உங்கள் வீட்டிலேதான் ஒருவரும் குடிப்பதில்லையே! ஓகோ நேற்றுக் காலை வந்தாரே உன் மாமா, அவருக்கா?' என்றான் கணேசன்.

'உஸ்...பிலத்துப் பேசாதேடா' என்றான் மணி கெஞ்சும் பாவனையில்.

'என்னடா நீ பயந்து சாகிறாய்? நானும் பார்த்தன் அப்போதை தொடக்கம் இதிலேயே நிக்கிறாய்'

'வெட்கமாய் இருக்கடா'

'வெட்கமா? அப்ப ஏன் வந்தாய்? மாமாவிடம் சொல்லுவதுதானே! அவர் என்ன அடித்தா போடுவார்?'

'அடிக்க மாட்டாரடா அப்படியென்றால் பேசுவாரே ஒழிய ஒருக்காலும் அடிக்கமாட்டார். ஆனால் எனக்கு மாட்டன் எண்டு சொல்ல மனம் வருவதில்லை. எப்படியெண்டாலும் அவர் வயதுக்கு மூத்தவர்தானே! கள்ளு வாங்கிக் கொண்டு வாறதுக்காக எனக்கும் ஐஸ்கிறீமுக்கெண்டு இருபத்தைஞ்சு சதம் தருவாரடா. அதைக்கூட எனக்கு வாங்க விருப்பமில்லை. கள்ளு வாங்கிக் குடுத்து காசு வாங்கிறதோ என்று அருவருப்பாயிருக்கு. ஆனால் அந்தக் காசை வேண்டாமெண்டு சொல்லவும் பயமாயிருக்கு.'

'கள்ளு வாங்கிக் குடுக்கிறதிலை என்னடா வெட்கம். நீ குடித்தாற்தான் வெட்கம். பாவமும் கிடைக்கும். உதிலை எட்டிப்போய் வாங்கி வாறதுக்கு இருபத்தைஞ்சுசதம் உனக்குத் தாறாரே! பயப்பிடாமல் வாங்கிக் கொண்டு போடா.'

'எனக்கென்னவோடா பெரிய குற்றம் செய்யிறது போலத்தான் இருக்கு. நேற்றைக்கும் வாங்கினது தானே! நேற்று இரா முழுதும் நித்திரை வரவில்லை. நெடுக இதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டு கிடந்தன்', என்றவன், மாமா இரண்டு கிழமை லீவிலை வந்திருக்கிறாராம் என்பதைச் சொல்லும்போது அழுதே விட்டான்.

மணி! மணி! என்று மணியின் தோளைத் தட்டி ஆறுதல் கூறிய கணேசன், 'நீ பயந்து சாகாதேடா. நான் வாங்கிக் கொண்டந்து தாறன். நீ போய் வயிரவர் கோவிலடியிலை நின்று கொள். ஒவ்வொருநாளும் நீ போத்தலையும் காசையும் கோவிலடியிலை கொண்டந்து தா. நான் கள்ளு வாங்கிக் கொண்டந்து தாறன். கோவில் வீட்டுக்குப் பக்கத்திலை தானே இருக்கு. ஒருத்தரும் காணாமல் நீ கொண்டு போகலாம். உனக்கு விருப்பமெண்டால் உந்த இருவத்திஐந்து சதத்திலை பத்துச் சதத்தை எனக்குத் தா' என்றான்.

'வேண்டாம் கணேசு! எனக்காக நீ வீணாகக் கஷ்டப்படவேண்டாம். உன்னையும் யாரும் காணுவினம்தானே! உனக்கும் வெட்கமாயிருக்கும் தானே! நான் ஒருவரும் காணாமல் போறன்' என்றவாறு நடுங்கிய வண்ணம் நகர்ந்தான் மணி.

'போடா போ' என்றவாறு மணியின் கையில் இருந்த பையையும் காசையும் பறித்துக்கொண்டு கள்ளுக் கொட்டில் இருந்த திசையை நோக்கி ஓடிய கணேசன்இடையில் நின்று 'நான் பத்துச் சதம் எடுக்கிறேண்டா' என்றான்.

ஆச்சரியம் மேலிட கணேசையே நோக்கியவாறிருந்த மணி 'இருவத்தைஞ்சு சதத்தையும் நீயே எடுடா. எனக்கு ஒன்றும் வேண்டாம்' என்றான்.

## (2)

மணி போத்தலையும் பணத்தையும் கொண்டு வயிரவர் கோவிலடியில் வரவும் அங்கு தயாராக நின்று கொண்டிருப்பான், கணேசன். கணேசன் திரும்பி வரும் வரை கோவிலடியிலேயே அமைதியாக யார் கண்ணிலும் படாமல் படபடக்கும் நெஞ்சத்துடன் நின்று கொண்டிருப்பான் மணி.

அன்று ஆரம்பமான இந் நாடகம் தொடர்ந்து திட்டமிட்ட படி நடந்து கொண்டிருந்தது.

'இந்தப் பெரிய பயங்கர வேலையை இருபத்தைந்து சதத்துடன் முடித்துக் கொள்கிறேனே' என்று வியந்து கொள்வான் மணி. 'இந்த சிறிய வேலைக்கு இருபத்தைத்து சதம் கிடைக்கிறதே' என்று மகிழ்வான் கணேசன்.

இவ்வாரச் சிறுகதை

அரம்பத்தில் மணி ஒரு பெரிய சுமை இறங்கியது போன்று ஆறுதலடைந்தாலும் நாளாக நாளாக அவனுக்கு வேறு பல குழப்பங்கள் ஏற்படத் தொடங்கின.

'தான் தவறு என்றும் அவமானம் என்றும் கருதிய ஒரு செயலை வேறு ஒருவனைக் கொண்டு செய்விப்பது மட்டும் எப்படி நீதியாகும்?' என்று எண்ணத் தொடங்கினான்.

'கணேசன் கள்ளுக் கொட்டிலுக்குப் போவதையும் கள்ளு வாங்குவதையும் காணுபவர்கள் அவனைப் பற்றியும் அவன் குடும்பத்தைப் பற்றியும் என்ன நினைப்பார்களோ நான் எது எதற்குப் பயந்தேனோ அது அதெல்லாம் அவனுக்கும் உண்டு தானே!' என்று கவலைப்பட்டான்.

கணேசன்செய்யும் இந்த வேலையைப் பெற்றோர் கண்டால் அல்லது அறிந்தால் என்ன நேருமோ என்பதை நினைக்க நினைக்க மணிக்குப் பயமே வந்துவிட்டது. 'எனது மாமா என்ற படியால் தான் எங்கடை அம்மா, அப்பா ஆக்கள் நான் கள்ளு வாங்கப்போவதைத்தடுக்கவில்லை. பிறத்தியாருக்கு வாங்கப் போனேனோ எனது தோலையே உரித்து விடுவார்கள். இப்படித் தானே இதையெல்லாம் அறிந்தால் கணேசனுக்கும் நடக்கும்.

இதையெல்லாம் உத்தேசித்து ஒரு நாள் 'இனி நீ எனக்காகக் கஷ்டப் படாதேடா. நான் எதற்கும் யோசிக்காமல் மனதைத்திடமாகிக் கொண்டு போய் வாங்கி வரப்போறன்' என்று மணி கண்டிப்பாகச் சொன்னான். ஆனால் கணேசனோ அதை உறுதியுடன் மறுத்து விட்டான்

## (3)

'இனி நேரம் சரி போலை கிடக்கு' என்று கனகசபை சொன்னதும் அறையில் இருந்து ஏதோ ஒரு படப் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மணியின் நெஞ்சு படபடக்க ஆரம்பித்தது. படத்திலே கவனம் செல்லவல்லை ஏதோ சிந்தித்தபடியே ஒற்றை கனைப் புரட்டினார்.

யாரோ அடுத்த அறையிலிருந்த கள்ளுப் பையை உதறிவிட்டு வெளியே கொண்டுவந்து போடும் சத்தமும் அதைத் தொடர்ந்து கள்ளுப் போத்தல் இரண்டையும் கழுவுவதற்காக வாளியண்டை கொண்டு போகும் அரவமும் கேட்டது.

போருக்குப் போகுமாறு கட்டாயப் படுத்தப்பட்டுள்ள கோழையின் நிலையில் மணி!

'எங்கை அவன் மணியைக் காணல்லை.'

கனகசபையின் குரலையடுத்து பலிபீடத்தை நோக்கித் தள்ளப்பட்ட ஆடுபோல் ஏதோ ஒன்று அவனைத் தள்ளிக்கொண்டு போனது.

'இந்தா!'

நெருப்புத் தணலை வாங்குவதுபோல் நடுங்கியபடி நீண்டது மணியின் கைகள். பணம் கை மாறியது. அப்பொழுது—

'டேய்! எங்கேடா போறாய்? எத்தனை நாளாயடா இந்த வேலை?'

அடுத்த வீட்டிலிருந்து கணேசன் வெளியே கிளம்பவும் அப்பொழுதுதான் அவனது தகப்பன் கோபாவேசத்தோடு வீட்டுக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

'என்னதான் அவன் அப்படிச் செய்திட்டான்?' என்றவாறு சமையலறையிலிருந்து ஓடிவந்தாள் கணேசனின் தாயார்.

'என்னவா? இந்த நாசமாப் போவான் ஒவ்வரு நாளும் கள்ளு வாங்க கொட்டிலுக்குப் போறானாம். எங்கடை மானமே போச்சு. ஊரெல்லாம் இதே கதைதான்' என்றவாறு கணேசனுக்குப் பளார் பளார் என்று தாறுமாறாக அடி விழுந்தது.

கணேசன் 'ஐயோ ஐயோ' என்றுகதறினானே தவிர கேட்டதற்கு ஒரு மூச்சும் விடவில்லை. தகப்பனார் அடி அடி என்று அடித்துக் கொண்டிருந்தார். கணேசன் 'ஐயோ ஐயோ' என்று அழுதுகொண்டிருந்தான்.

அடுத்த வீட்டில் நடப்பதெல்லாம் மணிக்குத் தெளிவாக விளங்கியது. கனகசபைக்கும் அங்குள்ள மற்றவர்களுக்கும் ஓரளவு விளங்கியது. மணியின் கண்களிலிருந்து பொலபொலவென்று வடிந்த கண்ணீரைக் கண்டதும் கனகசபைக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. 'இவன் ஏன் அழுகிறான்' என்பது அவருக்குப் புரியவில்லை.

மின்வெட்டும் நேரத்தில் மணியின் சிந்தனையில் அன்றொரு நாள் பாடசாலையில் ஆறுமுக வாத்தியாருக்கும் அவனுக்கும் நடைபெற்ற உரையாடலில் ஒரு சிறு பகுதி தோன்றியது.

'வாத்தியார்! பெரியவர்களைப் பின்பற்ற வேணும். அவர்கள் சொற்படி நடக்கவேணும் என்கிறீர்களே! அப்படியானால் அப்பா அண்ணை போல ஆக்கள் களவு பொய் கொலைபோன்ற குற்றங்கள் செய்யிற ஆக்களாயிருந்தால் என்ன செய்யிறது? அவர்களையும் நம்பலாமா? அவர்கள் சொல்லுறபடி நடக்கலாமா?' என்றான் மணி.

'யார்டா அப்படிச் சொன்னது? குற்றத்தைக் கடவுள் செய்தாலும் கூட அது குற்றம் குற்றந்தான். பெரியவர்கள் குற்றமான காரியங்கள் செய்தால் அதை சிறியவர்களும் தட்டிக் கேட்கலாம்—திருத்தலாம். இதில் வயதுக்குமூத்தவர்கள் என்றெல்லாம் பார்க்கக்கூடாது' என்றார் ஆறுமுக வாத்தியார்.

'சின்னாக்கள் சொல்லி எங்கேயெண்டாலும் பெரியவர்கள் கேட்பார்களா வாத்தியார்?'

'கேட்டால் சரி. கேட்காவிட்டால் போகட்டும். அதற்காக நீ மட்டும் அதைப் பின்பற்றாமலும் அதற்கு உடந்தையாகவும் இராமல் இருந்தால் அதுவே போதும்.'

மணிக்கு இந்த நினைவு வந்ததும் 'கள்ளுக் குடிப்பது கூட களவெடுப்பது போலவும் பொய்சொல்லுவது போலவும் கொலை செய்வதுபோலவுமான ஒரு குற்றந்தான். அதுவும் பஞ்சமா பாதகங்களல் ஒன்றுதானே! மாமா செய்யும் பாதகத்துக்கு நானும் உடந்தையாக இருப்பதா?' என்று மனத்திற்குள் எண்ணிக்கொண்டான். பக்கத்து வீட்டிலே கணேசனுக்கு விழும் அடியும் அவனை பரிதாபமாக 'ஐயோ ஐயோ' என்று

(11-ம் பக்கம் பார்க்க)

**'இந்தப் பெரிய பயங்கர வேலையை இருபத்தைந்து சதத்துடன் முடித்துக்கொள்கின்றேனே' என வியந்து கொள்வான், மணி! 'இந்தச் சிறிய வேலைக்கு இருபத்தைந்து சதம் கிடைக்கிறதே' என மகிழ்வான், கணேசன்.**

**'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்ற நக்கீரன் வாரிசு, மணி.**




கணேசன்மீது குமரனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இதுவரை தாமர குமாரியைப்பற்றி அவன் சொன்னதெல்லாம், வர்ணித்ததெல்லாம் மிக மிகக் குறைவானவையாகவே அவனுக்குத் தோற்றியது. குளிர்ந்த கங்கைநீரில் தாமர குமாரி என்ற பொற்கலசம், நெடிது வளர்ந்த தன் கற்றைக் குழலை ஒதுக்கி ஒதுக்கிக்கொண்டு குளித்து நின்ற காட்சி அமுத விருந்தை யூட்டியது குமரன் நெஞ்சில். கங்கை நீர் அவள் அழுக்கைப் போக்கவில்லை என்றும் அவளால்கங்கையின் அழுக்கு நீங்கிப் புனிதமுறுகின்றதென்றும் அவன் கவியுள்ளம் ஆர்ப்பரித்தது. முத்து நீர் அவள் முகமலரில் திவலைகளாய்ப் பூத்திருந்தகோலம், அன்றே அப்பொழுதே மலர்ந்த செந்தாமரைப் பூவில் தேன்பனி ததும்பும் காட்சியாகப்பட்டது அவனுக்கு! நீர்ச்சுழிப்புடன் போட்டிபோடும் அவள் விழிச்சுழிப்பின் வேகம் அவனைத் தட்டாமாலை சுற்றியது. நதி தீரத்தின் இருமருங்கிலும்மதமதப்போடுவளர்ந்திருந்த மூங்கிற் கம்புகள் போன்று வளுவளுப்பாக இருந்த அவளுடைய கழுத்தின் செழுமை அவன் உள்ளத்தில் தீச்சுடரை மூட்டியது. 'மூங்கில்கள் ஒன்றுடன் ஒன்று உராய்வதால் மட்டும் தான் தீ பிறக்கின்றதா? அதோ கங்கையில் குளிக்கும் தாமரகுமாரியின் கழுத்து அசைப்பிலிருந்தும் கொடிய தீ பிறக்கின்றதே!' என்று புலம்பியது அவனுடைய புலமை உள்ளம்! குங்குமச் சிவப்பில் ஒளிர்ந்த அவள் பவள இதழ்களைக் குவித்து வாயினுள் புகுந்த நீர்த் திவலைகளை அவள் ஊதி வெளிப்படுத்தியபோது, அந்தப் புனித தீர்த்தத்தை அப்படியே விழுங்கிவிடவேண்டும் என்று துறுதுறுத்தது அவன் உள்ளம்! பொங்கி வரும் பெருநிலவைப் போன்ற அவள் தன் முகத்தில், தண்ணீரால் அலைபுரண்ட அவள் கருங்கூந்தல் அடிக்கொருதரம் வந்து விழுவது, மேகம் மறைக்கும் சந்திரனை நினைப்பூட்டியது அவனுக்கு. அகன்றுபரந்தோடிய அந்தப் பெரு நதியில், ஆயிரம் இதழ்த் தாமரை மலராய் அவள் ஒளிந்தாள்; அன்னமாய் அவள் நீச்சலிட்டாள்; கலாபமாய் அவள் களிநடம் புரிந்தாள்.

கணேசனும், குமரனும் கங்கை நதி தீரத்தையடைந்ததும், குளித்துக்கொண்டிருந்த தாமரகுமாரி கணேசனைப்பார்த்துத் தன் முக மலரால் சிரித்தபோது, மலருள் மலர்கள் மலர்வது போன்று, அவள் கண் மலரும், இதழ்மலரும் தனித் தனியே மலர்ந்து ஓர் அபூர்வ சௌந்தரியத்தை ஏற்படுத்தின. தண்ணீருள் அவள் அமுங்கி அமுங்கிக் குளித்து, வெளியே தலையை நீட்டிய ஒவ்வொரு தடவையும் அவளுடைய அழகில் புதுமெருகு கூடிக்கொண்டே சென்றது.

கரையில் நின்று அந்தக் கங்கை அரசியின் இனிய எழிலைப் பருகி நின்ற குமரன், எதையோ நினைத்துக்கொண்டவன்போல் திடீரென கணேசனுடைய முகத்தை உற்று நோக்கினான். அவன் பார்வையில் இருந்த தீட்சண்யத்தைக் கண்ட கணேசன், 'என்னடா குமரா! என்னையே இப்படி மொய்த்து மொய்த்துப் பார்க்கின்றாய்; என் முகத்தில் பார்க்கும்படியாக அப்படி என்ன தான் இருக்கின்றது?' என்று கேட்டான்.

'உண்மை இருக்கின்றதடா கணேசா!' என்றான் குமரன்.

'கவிஞர் திலகத்துக்கு அப்படி என்ன உண்மை புலப்பட்டதோ?'

"காப்பவிழ்ந்த தாமரையோ
கருநீர் மலர்த்தொடையோ
மாப்பிளீலயாய் வந்தவர்க்கு
வாய்த்த மலரேதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல
கருநீர்த் தொடையுமல்ல
கூப்பிய கைக் காந்தளடி
கோமகனுர் வேண்டுவது!"

—விபுலாநந்த அடிகள்.

'உளவியலின் உண்மையடா உலுத்தனே!'

'சற்றுமுன்னம் நான் உளவியலைப்பற்றிப் பேசியதற்குப் போட்டியாக நீ இப்போ உளவியற் கல்வியை எடுத்து என் உயிரைப் பிய்க்கப் போகின்றாயா? பிய்! பிய்!'

'நான் பிய்க்கவில்லை அப்பனே! உன் முகம் பிய்க்கின்றது!' என்று சொல்லிவிட்டு விஷயத்தை விளக்கினான் குமரன்:

'கணேசா! நீயும், நானும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இருக்கும்போது, நம்முடைய நெருங்கிய பிணைப்பையே உதாரணம் சொல்லி ஒரு சிக்கலான உளவியல் சித்தாந்தத்தை நம் அதிபர் விளக்கியதை அதற்கு ள்நீ மறந்துவிட்டாயா?'

'மறக்கவில்லை. அதற்கும், நீ இப்போ என் முகத்தை ஊடுருவதற்கும் என்ன சம்பந்தம்?'

'அதிபர் அன்று விளக்கிய அந்த உளவியல் தத்துவம் இப்போ நன்கு வலுப்படுவதை நான் நன்கு காண்கின்றேன். ஒத்த நாட்டமும் சுவையுமுள்ள இருவர், ஒருவரால் ஒருவர் கொள்ளை கொள்ளப்பட்டு, ஒருவரில் ஒருவர் வசியமாகி விடும்போது ஒருவருடைய தோற்றச் சாயல் மற்றவரிடத்தும்; மற்றவருடைய தோற்றச் சாயல் அந்த ஒருவரிடத்தும் சங்கமித்து இருவருடைய தோற்றங்களிலும் அமானுஷியமான ஓர் ஒற்றுமை கலந்துவிடுகின்றது!'

'ஆமாம்; அதற்கு என்ன இப்போ?'

'இந்த உளவியல் சித்தாந்தத்தை அதிபர் அன்று விளக்கிவிட்டு, உன்னையும், என்னையும் வகுப்பில் நிறுதட்டமாக எழுந்து நிற்கப் பண்ணி, அப்பொழுது நம்மிருவருக்குமிடையில் இருந்த உருவ ஒற்றுமையைத் தம் விளக்கத்துக்கு உதாரணம் சொல்லி நம்மை வெட்கப்படுத்தினார் அல்லவா?'

'ஆமாம்.'

'இன்று பலநாட்களுக்குப் பிறகு உன்னைக் கண்டதும், உன் உருவில் கலந்திருந்த ஒரு புதியசாயலை அப்பொழுதிருந்தே நான் கவனித்துக் கொண்டு வருகின்றேன். இப்பொழுது இந்தக் கங்கைக்

## 28 சணேசனில் தெரிந்த தாமரகுமாரி!

கரைக்கு வந்தவுடன், அந்தப் புதிய சாயலை நீ எங்கிருந்து பெற்றாய் என்ற இரகசியம் எனக்குப் புரிந்துவிட்டது!'

'எனக்கும் புரிந்துவிட்டது நீ யாரோடுஎன்னைப்பொருத்திப் பேசுகின்றாய் என்று. டேய் குமரா! அதோ கங்கையில் நீராடும் தாமர குமாரியின் உளத்தோடு நான் எப்படி ஐக்கியமாகியிருக்கின்றேன் என்பதைச் சொல்வதற்கு, பாவம்; நீ இத்தனை கஷ்டப்பட்டிருக்க வேண்டாம்! அந்த உளவியல் சித்தாந்தமும் உன்னிடத்தில் அகப்பட்டுக்கொண்டு 'திரு திரு' வென்று விழித்திருக்கவேண்டாம்!'

'உண்மைதான் கணேசா! அந்தப் பெண் உன்னைக்கண்டதும் அப்படி ஒரு சுந்தரப் புன்னகையை நெளியவிட்டதும் நான் அப்படியே அசந்து போனேன். அந்த மலர்ப் பெண்ணின் சாயல் உன் முகத்தில் வந்து படிந்திருக்கும் அதிசயத்தைப் பார்த்ததும்தான், நீ எத்தனை தூரத்துக்கு அவளை உன் உள்ளத்தில் வைத்துப் பூஷித்திருக்க வேண்டும் என்ற உண்மை புலப்பட்டது. சணேசா! நீ மிகவும் பாக்கியசாலி என்றே நான் கருதுகின்றேன். கவிதையுள்ளம் வாய்த்திருப்பதற்காக என்னை நீ அன்று 'பாக்கிய சாலி' என்று எழுதியிருந்தாய். கவியுள்ளம் பெற்றவர்கள்மட்டும்தான்பாக்கியசாலிகள் என்பதில்லை. இப்படியானதோர் அழகு நிதியத்தைத் தினமும் பார்க்கக் கொடுத்துவைத்தவர்களும்பாக்கியசாலிகள்தாம்! உண்மையில் உன்னுடைய தாமரகுமாரியின் புனிதமான அழகு என்னை ஒரு பூரண மனிதனுக்குகின்றதடா கணேசா!'—மூச்சுவிடவும் அவகாசம் தராமல் கூறி முடித்தான் குமரன்.

குமரன்கூறியவற்றையெல்லாம் செவிமடுத்த கணேசன் உள்ளத்தில் தன்னெடுப்பு மிகுந்தது. நண்பனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு அவன் கேட்டான். 'குமரா! எல்லாம் சரிதான்; அவளைக் கண்ட மாத்திரத்தில்அவள் தான் தாமரகுமாரி என்பதை நீ எங்ஙனம் புரிந்துகொண்டாய்?'

'அதுவா? உன் அகராதியின் படி நான்தான் கவிஞர் திலகமாயிற்றே!' கவிஞர்கள் காலம் உணர்ந்தவர்கள்; தன்மை உணர்ந்தவர்கள்; வாழ்வின் மர்மம் புரிந்தவர்கள்' என்றெல்லாம் நீ தான் அடிக்கடி கூறுவாயே! ஆனால் ஒன்று; என் கவிதை உள்ளத்தால் மட்டும் உன் தாமர குமாரியை நான் துப்புக் கண்டு பிடித்துவிடவில்லை.

(14-ம் பக்கம் பார்க்க)

## கண்ணீர்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அலறுவதும் இந்த எண்ணத்தின்படி செயல்பட எரியும் விளக்கில் எண்ணெய் வார்த்ததுபோல் பயன்பட்டது.

மணி துணிந்துவிட்டான்!

எத்தனையோ தடவைகள் ஒத்திகை பார்த்த ஒரு வசனத்தை துணிந்து சொல்வதுபோல் 'மாமா! எனக்கு கள்ளு வாங்க வெக்கமாயிருக்கு' என்று சொல்லிவிட்டுப் பணத்தையும் கனகசபைக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு குடல் தெறிக்கும் வேகத்தில் அடுத்த வீட்டுக்கு ஓடினன் மணி.

கனகசபைக்கு மணியின் செய்கை ஆச்சரியமாயிருந்தது. ஒன்றுமே அவருக்குப் புரியவில்லை. கூர்மையாக அடுத்த வீட்டில் நடப்பதை வேலியோரத்தில் நின்று கவனித்தார்.

மணி ஓடிவருவதைக் கண்ட கணேசன் அழுவதை நிறுத்தினான்; தகப்பன் அடிப்பதை நிறுத்தினார். இத்தனை நாளும் நடைபெற்ற விவரங்களை ஆதியோடந்தமாகச் சொல்லிய மணி 'தயவு செய்து அவனை அடிக்காதையுங்கோ. எல்லாம் என்னால்தான் வந்தது. இனி மேல் ஒரு நாளும் அப்படிச் செய்யமாட்டேன்' என்று கணேசனின் தகப்பனரது காலில் விழுந்து மன்றாடினான்.

கனகசபையின் கண்களில் கண்ணீர் துளிர்த்து நின்றன. 'நல்ல ஒரு பையனை இவ்வளவு போராட்டத்திற்குள் மாட்டிவிட்டேனே' என்று தனது மருமகனைப்பற்றி அவரது வாய் முணுமுணுத்தது.

## சங்கப் பலகை

### இன முழக்கம்

ஆசிரியர்கள்: செல்வம், செழியன்.

வெளியீடு: தமிழரசிப் பதிப்பகம், 2ஏ, கச்சேரி வீதி. யாழ்ப்பாணம்.

விலை: சதம் 15.

திங்கள் ளியீடான இன முழக்கத்தின் திருக்குறள் மாநாட்டுச்சிறப்பிதழ் கிடைக்கப் பெற்றோம். நாவலர் இரா. நெடுஞ்செழியன், செ. இராசதுரை, இரா. சிவலிங்கம், வேலணை வீரசிங்கம், யாழ்வாணன் ஆகியோரின் சிறு கட்டுரைகள் மலரை அலங்கரிக்கின்றன. தேசிய ஒருமைபாடு என்றதலைப்பில் உள்ள ஆசிரியத்தலையங்கம் பாராட்டக் கூடியதாகவுள்ளது.

---

### இலங்கையில் இனமுழக்கம்

ஆசிரியர்: கே. எஸ். ஏ. கபூர்.

வெளியீடு: புங்குடுதீவு இளந் தமிழர் கழகம், 300, ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு-13.

விலை: சதம் 75.

இரத்தச்சுவடு, சிங்களமே சிறப்பாரர், ஒழிக ஒற்றை ஆட்சி ஆகிய நூல்களை எழுதி, தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நீங்காதஇடத்தைப் பெற்ற இளைஞர் கே. எஸ். ஏ. கபூர் இப்பொழுது இலங்கையில் இனமுழக்கம் என்ற நூலை வெளியிட்டுள்ளார்,

முஸ்லிம்கள் இந்நாட்டின் பழம் பெரும் குடியினர் என்றும்,அவர்களின் தாய்மொழி தமிழே என்பதையும் பல தரப்பட்ட ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி, சிறுபான்மையினரின் விடுதலைப் போராட்டத்தின் முன்னணியில் நிற்கவேண்டியவர்கள் முஸ்லிம்கள் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

உலகநாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாறுகளில் இருந்து பல சம்பவங்களை ஈழத்தமிழரின் வாழ்வோடு பிணைத்து எழுதியிப்பது பாராட்டக்கூடியது.

---

### அவமானம்

ஆசிரியர்: கொ. சுப்பர்.

வெளியீடு: முக்கூடற்பதிப்பகம், சிங்களவாடி, மட்டக்களப்பு. விலை: 20 சதம்.

மட்டக்களப்புத் தமிழகம் என்ற நூலைப் பற்றி எழுதப்பட்ட ஒருகண்டன விமர்சன நூலாகும். ஒரு நூலுக்கு விமர்சனம் எழுதி நூலாக வெளியிடும் முதல் முயற்சி இதுவாகும்.

-பூ

# புரட்சி நடிகர் விட்ட பொல்லாத தவறுகள்

## 'லவகுசா' 'நீதிக்குப்பின் பாசம்' இலவச குறுக்கெழுத்துப் போட்டி

சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினர் அளிக்கும் திரைவிருந்துகளான 'லவகுசா' என்ற வர்ணப் படத்தையோ—அல்லது 'நீதிக்குப்பின் பாசம்' என்ற படத்தையோ இலவசமாகப் பார்ப்பதற்கு இப்போட்டி மூலம் திரைப்பட இரசிகர்களுக்கு ஓர் வாய்ப்பு ஏற்படுகிறது. இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு எதுவிதமான கட்டணமும் செலுத்தப்படவேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்ினதும், சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும் ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப்போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகளை வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

**விதிகள்:**

1. சுதந்திரனில் விசேடமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'கூப்பன்'களிலேதான் விடைகள் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.
2. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும், சினிமாஸ் லிமிட்டெட்டாரின் படங்களைத் திரையிடும் படமாளிகைகளில் படம் பார்த்த நுழைவுச்சீட்டின்அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உறையின் மேல் போதுமான தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருத்தல் அவசியம்.
3. முழுக்கட்டங்களும் நிரப்பப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனோ சினிமாஸ் நிறுவனத்தாரிடமோ எதுவித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**பரிசுகள்**

முற்றிலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விடைக் கூப்பன்களிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்கு முதல்பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்.

**1 வது பரிசு—6 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

**2 வது பரிசு—4 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

**3 வது பரிசு—3 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள்—ஒவ்வொன்றும் 2 மேல்வகுப்பு டிக்கட்டுகள்விதம் வழங்கப்படும்.**

**முடிவுத் திகதி 20-8-65**

**29-8-65 சுதந்திரன் இதழில் முடிவுகள் வெளியாகும்.**

விடைக்கான கூப்பன் 13ம் பக்கத்தில் உள்ளது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல் மூலையில் 'லவகுசா' 'நீதிக்குப்பின் பாசம்' இலவசப்போட்டி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

## பல இலட்ச ரூபாய்கள் பெருநட்டமாயினவாம்

### விபத்து பற்றிய கருத்துரையில் விரிவான விளக்கம்

விபத்து ஒரு மனிதனுக்கு ஒரு திருப்பு முனையாகவே முடிகிறது. 1959ம் ஆண்டில் எனது கால் முறிந்திருக்காவிட்டால் நான் இன்றுள்ள புகழைச் சம்பாதித்திருக்கவே மாட்டேன். பல தவறுகளைத் தொடர்ந்து செய்துகொண்டேயிருப்பேன். நான் செய்த தவறுகளால் பல முதலாளிகள் பல இலட்சங்களை இழந்தார்கள்.

இவ்வாறு ஜூலை 11ம் திகதி விஜயாத்தோட்டத்தில் நடைபெற்ற 'எங்க வீட்டுப் பிள்ளை' வெற்றி விழாவில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

உயிருக்கே உலைவைக்கக் கூடியதான ஒரு விபத்து ஒருவனுக்கு ஏற்படுகிறது. பயங்கரமான விழைவுகளை இவ்விபத்து ஏற்படுத்தக் கூடுமானாலும், சில சந்தர்ப்பங்களில் இத்தகைய விபத்துக்களே மனிதனையும் அவன் சுபாவங்களையும் மாற்றியமைத்துவிடுகிறது.

1959ம் வருடம் ஜூன் மாதம் 15ம் திகதி சீர்காழியில் வைத்து ஓர் நாடகத்



தின்போது எனது கால் முறிந்தது. அந்தவிபத்திற்குப் பிறகு எனது குணமும் சுபாவமும் வெகுவாக மாறிப் போய்விட்டது. கால்முறிந்து கட்டிலிலே படுத்துக்கொண்டிருந்த வேளையில் நான் முன்பு செய்த தவறுகளையிட்டு எண்ணத் தொடங்கினேன்.

நான் கலைஞனாகவிருந்தும் இக்கலைத் துறைக்கே பல துரோகங்களைச் செய்திருக்கிறேன். எத்தனையோ படமுதலாளிகள் என்னை நம்பி பல இலட்சக்கணக்கான ரூபாய்களைத் தயாரிப்புகளில் முடக்கியிருந்தனர். அவர்களுக்கெல்லாம் தகுந்த வகையில் உதவிபுரியாமல் ஏதாவது சாக்குகளைக்காட்டி ஏமாற்றியும் வந்தேன். என்னுடைய போக்கினால் பல முதலாளிகளுக்கு பல இலட்சங்கள் நட்டம் ஏற்பட்டன. இவற்றையெல்லாம் உணரமுடியாதவனாக நான் அன்று வாழ்ந்தேன்.

#### தயாரிப்பாளரின் சிரமங்கள்

படத்தயாரிப்பாளர்களின் பலதரப்பட்ட சிரமங்களையும் நான் பொருட்படுத்துவதே கிடையாது. அவர்களையிட்டுக்கவலைப்பட்டதும் இல்லை.

படப்பிடிப்புக்காக, பல்லாயிரக்கணக்கான பணத்தைக் கொட்டி 'செட்'போட்டு வைத்திருப்பார்கள். குறிப்பிட்ட தினத்தில் படப்பிடிப்புக்கு என்னையும் அழைத்திருப்பார்கள். படப்பிடிப்புக்கான சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டிருக்கும். இதர சக நடிகர் நடிகைகளும் வந்து வேஷம் போட்டுக்கொண்டு எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். நானோ குறிப்பிட்ட வேளைக்குப் போகாமல் பல மணிநேரம் தாமதித்தே செல்வேன். போனாலும் அன்று படப்பிடிப்பில் கலந்துகொள்ள எனக்கு மனம் இருக்காது. ஆகவே ஏதாவது 'செட்'டில் குறை கண்டுபிடித்துக்கூறி அதை அடுத்த ஒரு நாளைக்குத் திரும்பி வைக்கும்படி கூறி விட்டுப்புறப்பட்டுவிடுவேன்.

பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை அன்று தயாரிப்பாளர் என்னுடைய அசட்டையினால் இழந்திருப்பார். சக நடிக நடிகைகளும் இதனால் மனம்நொந்து போயிருப்பர். ஆனால் இவற்றைச் சிறிதும் எண்ணிக்கூடப் பாராமல் நான் தொடர்ந்து இதேபோன்றுநடக்கத்தலைப் பட்டேன்.

#### உண்மையை உணர்ந்தேன்

இத்தகைய செயல்கள் சரியல்ல—தவறானவை—என்

(9-ம் பக்கம் பார்க்க)

## கலைப்பூஞ்சோலை



ஒ. எல். எஸ். தயாரிப்பான 'சாந்தி' தமிழகத் திரைவானில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்திவிட்டது. ஒரு குருட்டுப் பெண்ணின் ஆசாபாசங்களை மையமாக வைத்துப் பின்னப்பட்ட கதை அமைப்பைக் கொண்ட இப்படம் என்டர்டெயின் மென்ட்ஸ் அளிக்கும் அடுத்த திரைவிருந்தாகும். தேவிகாவும், விஜயகுமாரியும் தோன்றும் நெஞ்சுருக்கும் கட்டமிது.

## கந்தப்பரின்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

னெட்டாவது வயதிலேயே பிள்ளைகளை அடித்து அடக்கிப்பழகிய வாத்தியார், 'பென்ஷன்'எடுத்து வீட்டிலிருக்கத் தொடங்கியும் கூட அதிகரத்தையும் அட்டகாசத்தையும் விட்டுவிடவில்லை.

அன்று திகதி 26. மாலை வேளை. குட்டிபோட்ட பூனை மாதிரி வீட்டு விறாந்தைக்கும் தெருவாயில் கடப்புக்குமாக இதுவரை ஆயிரம் தடவைகளுக்குமேல் நடைபயின்றுவிட்டார். சின்னத்துரையின் வரவை நோக்கித்தான் அவர் அப்படி இருக்கிறார்என்பது மனைவி பொன்னம்மாவுக்கும் மகள் கமலத்துக்கும் தெரியும். ஒவ்வொரு மாதமும் இதே தினத்தில் இவர் இப்படியே இருந்து பழகிவிட்டார்.

வீட்டு விளக்கு மங்கலாக எரியத்தலைப் பட்ட போது தான் சின்னத்துரையின் தலைக்கறுப்புத் தென்பட்டது.

தனையனின் கையிலிருந்து தந்தையின் கைக்கு ஒரு சிறு காகித உறைமாறியது. ஒரே தாவாகத்தாவி ஓடிச்சென்று தன் அறையுள் தஞ்சமடைந்தார் வாத்தியார்.

பொழுது விடிந்தது. திகதி 27. காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வெகு கலகலப்பாகக் காணப்பட்டார் கந்தப்பர். தமது பழைய கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு சிரித்துப் பேசி மகிழ்ந்துவிட்டு காலை 9 மணிக்கே புறப்பட்டு விட்டார். அதே கலகலப்புக் குறையாமல், பகல் 11மணிக்கு வீடு திரும்பினார். உடனே தமது அறையைத் திறந்து உள்ளோடினார்.

இவ்வளவுதானும் இதற்கான காரணத்தை விளங்க முடியாத பதினாறு வயதுப் பருவமங்கையான கமலத்துக்கு, தனது தந்தையை ஒரேஒருநாள் மட்டும் கலகலக்க வைக்கும் சக்தி,பென்ஷன் காசுக்கும், அண்ணனின் சம்பளக்காசுக்கும் இருக்கிறது என்பதைதெரியநியாயமில்லை. இனிமேல் தானே அவளுக்குப் பணத்தின் பண்பு தெரியவரும்!

—விஜயா.

## உதயசூரியன் கலா மன்றம்

இரத்தினபுரியைச் சேர்ந்த இரம்புக்கந்தைத் தோட்டத்தில் உதயசூரியன் கலா மன்றத் தேர்தல் கூட்டம் தலைவர் திரு. மா. இரங்கசாமி தலைமையில் நடைபெற்றது.

திரு. ஆ. கேசவன் தலைவராகவும், திரு. சு. கு. வேலு பொதுச் செயலாளராகவும் திரு. பெ. ஆறுமுகம் கலைப்பிரிவு செயலாளராகவும், திரு. கா. பழனியாண்டி, கல்விப் பிரிவு செயலாளராகவும், திரு. எஸ். பெரியசாமி விளையாட்டுப்பிரிவு செயலாளராகவும், திரு. மு. நாகப்பன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பதினொரு பேரைக்கொண்டதொரு செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

# இரத்தம் குடிக்கும் காட்டேறியின் இரத்தத்தை உறிஞ்ச ஓட்டம்

“நான்தான் இரத்தம் குடிக்கும் காட்டேறிப் பேய்! உன்னுடைய இரத்தத்தைக் குடிக்க வந்திருக்கிறேன்'' என்று கூறியபடி காட்டேறி வருகிறது. வாயிலே இரத்தம் சொட்ட, சடை சடையாக மயிர் தொங்க, கன்னங்கரேலென்ற அந்த உருவம் மெதுவாக வந்துகொண்டிருந்தது

பிரசித்தி பெற்ற மந்திரவாதியான கால பைரவனின் பிரதம சீடனை கார்த்திகேயனுக்கே இரத்தக் காட்டேறியைக் கண்டு பயம் ஏற்பட்டு விட்டதானல் நாம் எம்மாத்திரம்? கார்த்திகேயன் எடுத்தான் ஓட்டம். காட்டேறியும் விடவில்லை. அவனும் ஓடினன்.

ஓடிக்கொண்டேயிருந்த கார்த்திகேயனின் கால்களில் ஏதோ தடுக்கவே திடீரென விழுந்து விட்டான். காட்டேறி வந்த திசையைத் திரும்பிப் பார்த்தான். மிகவும் நெருங்கி வந்து விட்டது அப்பேய். பளீர் என்றெரு யோசனை தோன்றியது கார்த்திகேயனுக்கு. எழுந்து நின்றான். காட்டேறியோ அவனை நெருங்கி விட்டது.

அசட்டையும் ஏழனமும் சேர்ந்த ஒரு பார்வையை காட்டேறி மேல் வீசினன் கார்த்திகேயன். காட்டேறி திகைத்து நின்றது.

“ஏய் காட்டேறியே! ஓடி ஓடி நான் நன்ருகக் களைப்படைந்து விட்டேன். களை தீர உனது இரத்தத்தைக் குடிக்கப்போகிறேன். அப்படியே நில் அசையாமல் நில்'' என்றான். காட்டேறி தான் வந்த வழியே ஓடத் தொடங்கியது. கார்த்திகேயனும் விடவில்லை. தொடர்ந்து துரத்தினன். முடிவில் காட்டேறியைப் பிடித்தே விட்டான். பிடித்ததோடல்லாமல் தன் கால்களாலும் கைகளாலும் நையப்புடைத்தான். வலி தாங்காமல் காட்டேறி கத்தத் தொடங்கியது.

“ஐயையோ என்னை விட்டிடுடா—நான் காட்டேறியல்ல மனிசன்டா'' என்று காட்டேறி உருவம் எத்தனை கத்தியும் கார்த்திகேயன் விட்டுவிடவில்லை. ‘இல்லை நீ காட்டேறியேதான்' என்று அடித்துக்கொண்டேயிருந்தான். வேதனையைப் பொறுக்க மாட்டாமல், கார்த்திகேயனின் சகாவான அர்த்தநாரி தன் வேடத்தைக் கலைத்தான்.

பயந்து போய் ஓடின கார்த்திகேயன் கீழே விழுந்ததும் காட்டேறியைத் திரும்பிப் பார்த்தபோது, காட்டேறியின் கால்கள் நிலத்தில் பதிந்திருப்பதைக் கண்டுவிட்டான். பேய்களுக்கு நிலத்தில் கால்படாதென்பது அவனுக்குத் தெரியுமாதலால் இது ஏதோ சூழ்ச்சி என்பதை அறிந்துகொண்டு விட்டதை காட்டேறி அறியவில்லை.

மதருஸ் சினிக்கம்பைன்ஸ் தயாரித்து வரும் ‘தாய் மேல் ஆணை' படத்துக்கான இந்தத் தமாஷான காட்சி அண்மையில் சிட்டாடல் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. கார்த்திகேயனக நாகேஷும், காட்டேறி வேடதாரியாக சிவசூரியனும் தோன்றுகின்றனர். இப்படத்தின் கதை வசனத்தை பாசுமணி எழுதியிருக்கிறார். ஜி. ஆர். நாதன் ஒளிப்பதிவையும் டைரக்‌ஷனையும் ஏற்றுள்ளார்.



நிதியை நிலை நாட்டப் புறப்பட்டுள்ள என்னை எந்த நேரிழையாலும் மயக்க முடியாது, என்று அடித்துக் கூறும் எம். ஜி. ஆர். தோன்றுவது சினிமாஸ் அளிக்கும் ‘நீதிக்குப் பின் பாசம்' படத்திற்காகத்தான்.



ஓரவிழிப் பார்வையிலே உலகை மயக்க எண்ணும் சரோஜாதேவி, எதிரே கடமையே உருவாக நிற்கும் எம். ஜி. ஆரைக் கவர்ந்திழுக்கத்தான் இப்பார்வை வீசுகிறார் போலும்—படம்: ‘நீதிக்குப் பின் பாசம்'.



கொடிய வனவிலங்குகளை உயிருடன் வேட்டையாடப் புறப்பட்டுள்ள இக்கோஷ்டியை கொழும்பு லிபர்ட்டி திரையில் ஓடிக்கொண்டிருக்கும் ‘ஹடாரி' (HATARI) வர்ணப் படத்தில் காணலாம். இப்படத்தில் ஜோன்வைன், ஹார்டிகுருகர், எல்ஸாமாட்டினெலி, றெட்பட்டன்ஸ் முதலானோர் தோன்றுகின்றனர்.

## மல்யுத்தம் மலிந்த “மகாபாரதம்”

பிரபல மல்யுத்த வீரரான தாராசிங்கிற்கு இப்பொழுது வட இந்தியப் படங்களில் நடிக்க ஏராளமான சந்தர்ப்பம் கொடுக்கிறார்கள். ‘மகா பாரதம்' என்ற படத்தில் வீமனக தாராசிங் காட்சி அளிக்கிறார். தமிழாக்கப்பட்டு இப்படம் தமிழகத் திரைகளுக்கு வந்துள்ளது.

பீமன்-இடும்பன், பகாசுரன், கடோற்கஜன் ஆகியோர்களுடன் பாரதக் கதைகளில் போர் புரிகிறானல்லவா. இக்கட்டங்களை இப்படத்தில் மல்யுத்த களமாகவே ஆக்கிவிட்டுள்ளனர். பிரபல மல்யுத்த வீரர்கள் பலருக்கும் வேடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மல்யுத்தக் கலையில் எத்தனையெத்தனை வகைகளுண்டோ அவை அத்தனையையும் இக்கட்டங்களில் சேர்த்திருக்கிறார்கள்.

கிருஷ்ணனும் இராமனும் ஒன்றே என்ற தத்துவத்தை விளக்க, அர்ச்சுனன் ‘கிருஷ்ணா' என்று அழைக்க அது ‘இராமா' என்று எதிரொலிக்கவும், ஹனுமன் ‘இராமா' என்று அழைக்க, அது ‘கிருஷ்ணா' என்று ஒலியை எழுப்பவும் செய்து காட்டியுள்ளமை பாராட்டும் படியாக அமைந்திருக்கின்றது.

மகாபாரதத்தில் திரெளபதியாக சுமித்திராவும், சுபத்திரையாக அனிதாகுகாவும் தோன்றுகின்றனர். பிரமாண்டமான காட்சி அமைப்புக்களுடன் கூடிய இப்படம் சகல இரசிகர்களையும் கவரத்தக்க வகையில் படமாக்கப்பட்டுள்ளது.

# லவகுசா
# நீதிக்குப் பின் பாசம்
## இலவச குறுக்கெழுத்துப் போட்டி
## விடைக் ‘கூப்பன்'

—இவ்விடத்தில் கத்தரிக்கவும்—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ரா | 2 ம | ச் | 3 ச | ந் | தி | 4 ர | 5 ன் |
| 6 க | | ■ | | ■ | ■ | 7 | ண |
| 8 வா | | ■ | 9 | ன | 10 | ■ | |
| ■ | பி | ■ | தே | ■ | 11 மி | 12 | கு |
| 13 வ | ஷே | ■ | | ■ | | ரு | |
| | | 14 | ■ | ■ | வா | மு | ல |
| 15 க | | | ன் | ■ | ■ | | |
| | ■ | 16 அ | ற் | | த | | ■ |

முழுப் பெயர்..........................................

முகவரி..........................................

..........................................

..........................................

லவகுசா அல்லது நீதிக்குப் பின் பாசம் திரையிடப்பட்டுள்ள நீங்கள் படம் பார்க்க வசதியாக உள்ள.........

..........................................
தியேட்டரின் பெயர்

..........................................
ஊர்

..........................................
கையொப்பம்

..........................இவ்விடத்தில் கத்தரிக்கவும்..........................

### இடமிருந்து வலம்

1. லவ, குசன் இருவருக்கும் தந்தையாகியவருடைய பெயரைத் தாங்கியவரே ‘நீதிக்குப்பின் பாசம்' படத்தின் கதாநாயகனுகத் தோன்றுகிறார்.

6. இராமருடைய மிகச் சிறந்த நண்பர்களுள் ஒருவரான குகன் உருமாறி, சிதைந்து நிற்கிறார்.

7. இராமனுடைய நல்ல—குறைந்து விட்டது.

8. தன் அருமை நண்பனைப் படம் பார்க்கச் செல்வதற்கு இப்படியும் ஒருவன் அழைப்பான்.

9. சீதைக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

11 மேலதிகமாக உள்ள பொருள் மாறி விட்டது.

15. இராமாயணத்தைத் தமிழில் பாடிய கவிச்சக்கரவர்த்தி இவர்.

16. ‘லவ குசா' படத்தைப் பார்த்தவர்கள் இப்படிப் பலமுறை கூறிப் புகழ்ந்தார்கள். நீதிக்குப் பின் பாசத்தைப் பார்த்ததும் இப்படியே தான் கூறுவார்கள்.

### மேலிருந்து கீழ்

1. இராமனை இப்படியும் அழைப்பார்கள்.

2. லவகுசா வரலாறு இராமருடைய — வைபவத்துடன் தான் ஆரம்பமாகிறது.

3. ‘நீதிக்குப் பின் பாச'த்தில் தோன்றும் நடிகை.

4, இராமன்—வம்சத்தைச்சேர்ந்தவன்.

5. இராமனின் தம்பி தலை கீழாக நிற்கிறார்.

10. இராமாயணத்தை முதலில் எழுதியவரும் லவகுசரை வளர்த்தவருமான இந்த குரு சிரேஷ்டர் தலைகீழாக நின்று தவம் புரிவதற்கான காரணம் புரியவில்லை.

12. ‘நீதிக்குப் பின் பாசம்' படத்தின் இயக்குநர் இவர்.

13. சுப்பிரமணிய பாரதியாரை இத்தகையவர் என்று கூறுவார்கள்.

14. சீதையின் பரிதாபமான நிலையை எண்ணி, அவளைப். பலர் தலைகீழாகவுள்ள இந்தச்சொல்லால் வர்ணிப்பார்கள்

# எதிர்க்கட்சியினரின் பூச்சாண்டிக்கு மிரளாதீர்!

## இலங்கை அரசிற்கு 'தினமணி' எச்சரிக்கை

சாத்திரி-சிறிமாவோ உடன்படிக்கையை அமுல் நடாத்தும் பொழுது சிறிதேனும் பலாத்காரத்திற்கு இடமளிக்கக் கூடாது என்று சென்னையிலிருந்து வெளியாகும் 'தினமணி' என்ற தின ஏடு இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் எச்சரிக்கை செய்துள்ளது. மனிதப் பண்புகளைப் புறக்கணிக்காத முறையில் உடன்படிக்கை அமுல் நடாத்தப்பட வேண்டுமென்றும், நிர்ப்பந்தம் என்ற பேச்சுக்கு சிறிதேனும் இடம் கொடுக்கக் கூடாது என்றும் அத்தலையங்கத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் எதிர்க் கட்சிகளின் பூச்சாண்டிகளைக் கண்டு மிரளாது, நீதியின்படி கடந்து இப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

'இலங்கையில் தொல்லை' என்ற தலைப்பில் இத்திங்கள் 23ம் நாளைய ஏட்டில் வெளியான இத் தலையங்கத்தின் விபரம் வருமாறு:

அடிக்கு ஒரு தரம் இந்திய வம்சாவழியினர்ப் பிரச்சினையை முன்னுக்குத் தள்ளி, சேனநாயக்க மந்திரி சபையைச் சங்கடத்தில், ஆழ்த்தப்பார்க்கின்றனர் திருமதி பண்டா ஆதரவாளர். பண்டா-சாத்திரி உடன்பாட்டை அமுலாக்குவதுதான் தமது உத்தேசம். பல நடைமுறைச் சிரமங்கள் தென்பட்டதன் காரணமாக, இந்திய சர்க்காருடன் மீண்டும் பேசி ஒழுங்குமுறை செய்ய வேண்டியிருக்கிறது என்று சர்க்கார் விளக்கம் கூறியும் அவர்கள் திருப்தியடையவில்லை. வதந்திகளையும் ஹேஷ்யங்களையும் கிளப்பி விட்டோ, அல்லது கற்பித்துக்கொண்டோ, இவ் விடயத்தில் அரசாங்கம் ஏதோ மோசம் செய்கிறது என்று கெடுபிடி செய்வது எதிர்க்கட்சிகளுக்கு வழக்கமாகிவிட்டது.

உரிமையில்லாத பல லட்சம் இந்தியர்களின் பெயர்கள் வாக்காளர் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டுவிட்டதாக ஒரு புரளியை சென்றவாரம் அவர்கள் கிளப்பி விட்டனர். இது வெறும் கட்டுக் கதை, அம்மாதிரி எதுவும் நடைபெறவில்லை என்ற மறுப்பை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. அது மட்டுமல்ல. நியாயமாகப் பிரசாவுரிமை பெற்ருக வேண்டிய ஏராளமான பேர்-அங்கேயே பல தலைமுறைகளாக வசித்து வருபவர்களின் வழித்தோன்றல்கள்-தமதுவம்சாவழியை மெய்ப்பிப்பதற்கு தஸ்தாவேஜிகள் மூலம் ருசுக்கள் தர இயலாததால், உரிமையில்லாமல், 'நாடற்றவர்கள்' என்று அக்கிரமமாகக் கருதப்படுகின்றனர். இதுதான் உண்மை நிலை. முதற்படியாக இவர்களுக்குப் பிரசாவுரிமை கிடைக்க வழி செய்வதுதான் நியாயம்.

இலங்கையிலுள்ள பௌத்த பீட்சுக்களின் தலைவராகிய மாநாயக்க தேரோ, நடுவில் புகுந்து ஒரு யோசனையைக் கூறியிருக்கிருர்கள். இலங்கை வாழ் இந்தியர் வாபசாவதற்குள்ள தடையை இந்தியா சர்க்கார் ரத்துச் செய்ய வேண்டும் என்பது அவரது கோரிக்கை. இலங்கை சர்க்கார் அவர்கள் வாபசாவதற்குத் தாராளமான ஊக்கங்களை அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்கிருர். இப்படிச் சில காலம் செய்து பார்த்த பிறகு நிலைமையை மதிப்பிட்டு ஆவன செய்ய முற்படுவது பயனுள்ள நடைமுறையாக இருக்கும் என்பது அவரது எண்ணம், பூஜ்யர் தேரோவின் யோசனை தவருன தகவலை அடிப்படையாகக் கொண்டது. இந்திய வம்சாவழியினர் இந்தியாவுக்குத் திரும்புவதற்குத் தடையெதுவும் எப்பொழுதும் விதிக்கப்பட்டதில்லை. இலங்கைப் பிரசைகளாவதற்கு உரிமையுள்ளவர்களை அவர்களது விருப்பத்துக்கு மாருக, சகட்டு மேனிக்கு இந்தியப் பிரசைகள் என்று ஏற்றுக் கொண்டு, அவர்களுக்குப் பிரயாணச் சீட்டைத் தர இயலாது என்பது தான் முன்னர் இந்திய அரசாங்கம் தெளிவுபடுத்திய நிலை. எனவே ரத்துச் செய்வதற்கான தடையெதுவும் இருக்கவில்லை.

பண்டா-சாத்திரி உடன்பாட்டின் அமுலைப் பற்றிய பேச்சின்போது, நடைமுறைகளைப் பற்றிய எல்லா அம்சங்களும் நுணுக்கமாகக் கவனிக்கப்பெறும். ஆனால் மனிதப் பண்புகளையும் மனிதவுரிமைகளையும் பற்றிய அடிப்படைகளைக்கௌரவிக்காத எந்த நடைமுறையையும், ஒரு நாடு பிரேரிக்கவோ மற்ருென்று ஏற்கவோ இடமிருக்கவே கூடாது. தாமே முழு மனதுடன் இஷ்டப்பட்டு இந்தியா திரும்புதற்கு விரும்புகிறவர்களை மட்டுமே நமது அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம். யாரையும் எவ்வகையிலும் நிர்ப்பந்தப் படுத்தவே கூடாது. வேலை நிலைமை, வாழ்க்கை வசதி முதலியவைகளில் பாகுபாடுகளைச் செய்து, அச்சுறுத்தி, வெளிக்கிளப்புகின்ற நடைமுறை வராமல் உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட எல்லோருக்குமே உண்டு. எதிர்க் கட்சியின் பூச்சாண்டிகளைக் கண்டு இலங்கை அரசாங்கம் மிரளலாகாது: இந்திய வம்சாவழியினரும் தமது கட்டுப்பாட்டை உறுதியாக்கிக் கொண்டு, ஸ்தாபன பலத்தை வளர்த்து, நியாயம் வெல்லும்படி செய்வதற்கான சக்தியுடன் விளங்க வேண்டும். அதுதான் உண்மையில் நற்பயனை விளைவிக்கக் கூடியதாயிருக்கும்.

## பறவைகளின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தீங்கடைந்தது போன்ற பாசாங்கு அல்லது ஏமாற்று நடத்தை எனப்படும். பெண் சிட்டுக் குருவியின் ஓரினம் ஒரு சிறகைத் தொங்கப் போட்டுக் கொண்டே வாயை ஆண் பறவைக்குத் திறந்து காட்டும்: இவ்வாருன நடத்தையினுல், கூட்டை நெருங்கி வரும் எதிரிகளையும் இவை ஏமாற்றி விடும்.

எப்பொழுதும் ஆணும் பெண்ணும் ஒரு தடையுமின்றிச் சேர்ந்துகொள்ளும் என்று நினைப்பது தவறு. பெண்ணைச் சேர்வதற்காக ஆண் பறவையானது, பிற ஆண் பறவைகளுடன் சண்டையிட வேண்டி இருக்கும். கருங்கோழி (Black Cock)றவ் (Ruff) போன்ற பறவைகளிடையே சண்டையிடுவது ஒரு பொதுவான நிகழ்ச்சியாயிருக்கும். றவ் பறவைகளின் ஆண்கள் எல்லாம் ஒரு பொது மைதானத்தில் கூடி அதிக நேரத்திற்குச் சண்டை இடும். பெண் பறவைகள் இச் சண்டையில் பங்கெடுத்துக் கொள்ள மாட்டா. ஆனல் இடைவேளையின் போது, பெண் பறவையில் ஒன்று, ஆண்களுள் ஒன்றை தன் அலகால் நீவிக் கொடுத்து, புணர்ச்சிக்காகத் 'தெரிவு செய்து' கொள்ளும். இந் நிகழ்ச்சியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த செலோஸ் எனும் ஆராய்ச்சியாளர் பல பெரிய கொண்டைப் பூவையுடைய ஆண் பறவையையே, பல பெண்கள் தெரிவு செய்தன என்ருர். ஆண்களை, பெண் பறவைகள் தெரிவு செய்த இந் நிகழ்ச்சியே, இலிங்கத் தேர்வு எனும் டார்வினின் கொள்கையின் அடிப்படையாகும். ஏனெனில் இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆண்கள் வீரமும், வீறும் உடையன வாதலின் சிறந்த வீரியமும், இனவிருத்தி ஆற்றலும் உடையனவாய் இருக்கும் என்ற ஊகமேயாகும். ஓரிடத்தில் 3½ மணித்தியாலங்கள் 12 புணர்ச்சிகள் நடைபெற்றன என்றும், செலோஸ் பதிவு செய்துள்ளார். இவ்வாறு ஆனந்தமாக காதல் உலகில் பாடித் திரியும் பறவை இனங்களைப் பார்க்கும் போது, எமக்கு பொருமையாகத்தான் இருக்கிறது.

அறிவொளி
இதழ்—5.

### உடல் நிலை......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தில்லை. இதனுல் இருபாலாரிடத்திலும் விசித்திரமான மாறுபாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன. உடலில் ஏற்பட்டுள்ள ஒரு சிறு மாறுபாட்டினுல் பழைய கள்ளமற்ற உறவு களங்கமடைவதேன் என்ற சிந்தனை இரு பாலாரிடத்திலும் எழத் தொடங்கியதும் விகார உணர்ச்சி தான் விரிவடைய ஆரம்பிக்கும்.

குழந்தைகள் களங்கமற்ற குழந்தை உள்ளமுடையவர்களாகவளர்க்கப்படவேண்டுமானுல் இருபாலாரையும் எந்தவிதமான சந்தேகமும் இன்றிப் பழகவிடவேண்டும். இதனை கூட்டுக்கல்வி முறையினுலன்றி வேருேர் முறையினுலும் வேரிடவைக்கமுடியாது. சகோதரத்துவம் வளர்ந்து ஆண்—பெண் சரிசமம் என்ற தத்துவம் வளர கூட்டுக்கல்வியே சிறந்த கருவி.

## உலகம் புகழும்

(7-ம பக்கத் தொடர்ச்சி)

இடம் பெறுகிருர். உலக நிலையாமை, வாழ்க்கை வெறுப்புப் பற்றிய கருத்துக்கள் இந்தியச் சிந்தனை வரலாற்றில் நிறையக் காணப்படுகின்றன. உபநிசத்துகளில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய இத்தகைய கருத்துக்கள் இந்த நூற்ருண்டு வரை இந்தியச் சிந்தலையின் அடிப்படையாயமைந்தன எனலாம். புத்தர் பிரானும், காந்தி மகாத்மாவும் கூட, இத்தகைய கருத்துக்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டவர்களெனக் கூற முடியாது. அகிம்சை, அன்பு, அறம் என்பன பற்றி இவர்கள் பேசும் பொழுது உலக வாழ்க்கையில் ஒரு வகை நம்பிக்கையும், ஈடுபாடும் இவர்களுக்கு இருப்பது புலனுகிறது. ஆயினும் இவாகள சிந்தனையில் உலக நிலையாமை, வாழ்க்கை வெறுப்புப் பற்றிய கருத்துக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

.........தாகூர்

பழைய இந்திய இலக்கியங்களில் திருக்குறள் தனித்தன்மை வாய்ந்தது. உலக நிலையாமை, வாழ்க்கை வெறுப்புப் பற்றிய கருத்துக்கள் திருக்குறளில் மிகச் சிறிய அளவிலேயே காணப்படுகின்றன. இல்லறவியல், பொருட்பால், காமத்துப்பால் என்னும் திருக்குறட் பகுதிகள், உலகியற் சிறப்பையே எடுத்துக் கூறுகின்றன. ஒழுங்காக வாழ்ந்து உலகியலின்பங்கள் யாவற்றையும் துய்க்க வேண்டுமென்பதே வள்ளுவன் காட்டும் வாழ்க்கைத் தத்துவம் எனலாம். வள்ளுவர் வழியில் இந்தியச் சிந்தலையின் போக்கையே திசை திருப்பியவர் எனலாம். தாகூர் சிந்தனையிலே, உலக நிலையாமை, வாழ்க்கை வெறுப்புப்பற்றிய கருத்துக்களுக்கு இடமில்லை. உள்ளம் சோர்வடைகிற பொழுது, பிறப்பனவே இத்தகைய கருததுக்கள் என்று தாகூர் கருதுகிருர்.

### சாந்தி நிகேதனம்

தாகூரின் கல்வி பற்றிய கருத்து, அது எளிய வாழ்வும் உயர்ந்த சிந்தனையுமுடையதாக அமைய வேண்டுமென்பதே, இயற்கைச் சூழலின் மத்தியிலே அவர் அமைத்த சாந்திநிகேதனம் இன, மத வேறுபாடின்றி யாவரும் கலை பயிலத் தக்க இடமாக விளங்கியது. தாகூரின் பிற்கால வாழ்வு,இந்த தாபனத்துடன் நெருங்கிய தொடர்புடையதாயிருந்தது.

### அவர் வழியில்......

தாகூரின் வாழ்வு பூரணத்துவம் பெற்ற வாழ்வு, எண்பது ஆண்டுகளுககு மேல் அவர் வாழ்ந்திருக்கிருர். புகழ் நிறைந்த வாழ்வு அவருக்குக்கிடைத்தது. இந்தியாவின் சிந்தனைப் போக்கைத் திசை திருப்பியது அவர் செய்த மகத்தான புரட்சி. அரவிந்தரும், இராதாகிருஷ்ணனும் அவர் காட்டிய பாதையில் செல்கின்றனர்.

## அழகு சுடும்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

உன் தாமரகுமாரியிடத்தில் குடிகொண்டுள்ள அந்த அசாத்திய அழகும்; அவள் சிரிப்பில் பரவிய மணமும், அவனை 'யார்?' எனக் கண்டு கொள்வதற்கு எனக்குத்தடையங்களாய் வாய்த்தன!'

பசுமை சூழ் அந்த நதிச் சுழலில் தம்மை மறந்து அந்த இரு நண்பர்களும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டார்கள். உலகத்தையே பிடித்துவிடுவதற்குத் திட்டம் வகுப்பவர்கள்போல், கணேசனும் கணேசனுடன் வந்திருந்த அந்தப் புதிய இளைஞனும் கங்கைக்கரையோரம் நின்று பேசிக்கொண்டிருந்ததைத் தன் கண் தாமரையால் கவனித்துக்கொண்டேயிருந்த தாமரகுமாரிக்கு அதற்கு மேலும் பொறுக்கவில்லை. ஆலயமணியின் புனிதநாதம் போல் தூய்மையுடன் சிரித்துக்கொண்டு, கணேசனை அழைத்து, 'குளிக்கிறதாக எண்ணமில்லையோ?' எனக் கேட்டாள்.

தன் நண்பன் ஒருவன் முன் அவள் உரிமையோடு தன்னை 'மாத்தயா' என அழைத்துச் சலுகையுடன் குளிப்பது பற்றி ஞாபகப்படுத்தியது கணேசனுடைய உடல் பூராவும் இன்ப உணர்வைப் பரவச்செய்தது. அவளுக்கு அவன் ஏதோ சிங்களத்தில் தத்தித் தத்திப் பதில்கூற, அதைக்கேட்டு,தாமரகுமாரி உட்பட அங்கு குளித்துக் கொண்டு நின்றவர்கள் எல்லாரும் 'கொல்' லென்று சிரிக்க, அந்தச் சிரிப்பையே தனக்குக் கிடைத்த ஒரு பெருமிதமாக எண்ணி, ஒரு 'செல்ல மிடுக்கோடு' நண்பன் குமரனுடைய கையைப் பிடித்துக்கொண்டு 'தொபுக் கடீ' ரென்று கங்கையில் பாய்ந்தான் கணேசன்.

கிட்டத்தட்ட அவன் கங்கையில் பாய்ந்த அதேவேளையில் இன்னுமொரு மனிதன் கங்கையில் பாய்ந்து, தாமரகுமாரி குளித்துக்கொண்டு நின்ற இடத்தை இலக்கு வைத்துக்கொண்டு நீந்தி வந்தான்.

கணேசன் அந்த மனிதனை உற்றுப்பார்த்தான் கண்களில் வழிந்த நீரை வழித்து விட்டுக்கொண்டு!

அந்த மனிதன் வேறுயாருமல்ல; புத்த விஹாரத்துமுருகன் சன்னதியில் தாமரகுமாரியுடன் பேசிக்கொண்டு நின்ற அந்த 'விநிவிலக்கான' தோற்றமுடைய இளைஞன் தான் அவன்!

## வரலாற்று குடியியற் கழகம்

பட்டிருப்பு மாவித்தியாலய வரலாற்றுக் குடியியற் கழகத்தின் ஆண்டு விழா இத் திங்கள் 7-ம் நாள் கலாசாலை மண்டபத்தில் சிறப்பாக நடை பெற்றது. பிரதம விருந்தினராக வித்தியாதரிசி திரு. முருகப்பன் கலந்துகொண்டு வரலாற்றுக் கல்வியின் அவசியத்தையும், சிறப்பையும் விளக்கிப் பேசினுர். கழக உறுப்பினர்கள் 'பல்லவன் பரிசு' என்னும் வரலாற்று நாடகத்தை திறம்பட நடாத்தினுர்கள்.






# வலிமை மிகுந்த பேச்சுக்கலை-1

வலிமையும் தீவிரமும் கொண்ட பேச்சும் உரையாடலும் தான் நம்முடைய வேலையின் முன்னேற்றத்திற்கும் பொது வாழ்வின் முன்னேற்றத்திற்கும் திறவுகோல். நம்மையும் நம்முடைய ஆற்றலையும் பிறருக்கு அறிமுகப்படுத்திக் கொள்ள நமக்கு இருக்கும் முக்கியமான சாதனம் பேச்சுக் கலைதான்! நம்முடைய குடும்பத்தாரையும், சில முக்கியமான நெருங்கிய நண்பர்களையும் தவிர்த்து, ஊரும் உலகமும் நம்மைப் பற்றி அறிந்துகொள்வதெல்லாம் என்ன சொல்கிறோம்; அதையும் எப்படி சொல்கிறோம் என்பதைக் கொண்டு தான்.

முன்னேற்றத்திற்கு எப்பொழுதுமே வழியுண்டு. ஆனால் நாம் அதனை காலம் அறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வலிமை மிக்க பேச்சுக் கலையை அடைவதற்கு அதனுடைய முக்கிய மூன்று குணங்களை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

1. முதலாவதாக பேசுவதற்கு நிரம்ப பொருளிருக்க வேண்டும். பொருளின்றிப் பேச இயலாது. எனவே அறிவை தேக்கி வைத்துக் கொள்ள மூளை மிகவும் அவசியம். இதற்கு அளவுக்கு மிகுந்த அறிவோ பெரிய பட்ட படிப்போ தேவையில்லை.

மிகச் சாமான்யர்கள் கூட நாம் விரும்பும் வகையில் பேசுகிறார்கள். அதற்குக் காரணம் வாழ்க்கையில் அன்றாட புதுப்புது நிகழ்ச்சிகளை அவர்கள் அறிந்தது தான். அந்த சாமான்யர்கள் புதிய நிகழ்ச்சிகளையும், புதுமை கலந்த நிகழ்ச்சிகளையும் மறப்பதே இல்லை. செய்தித் தாள்களில் வருகின்ற சில முக்கிய தலைப்புகளை விமர்சிக்கும் திறமைசாலியாகக் கூட இருக்க வேண்டுமென்பதில்லை, ஒரு பேச்சாளன்.

குழப்பம் நிறைந்த பொருள்களைப் பற்றி ஒரு பேச்சாளனுக்கு முடிவான கருத்துக்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை, எந்தப் பொருளைப் பற்றியும் திறந்த மனதுடன் பேசுதல் நல்லது. திறந்த மனதுடன் பேசும்போது மற்றவர்களின் எண்ணங்களையும் நம்மால் அறிய முடிகிறது. சின்ன சின்ன கேள்விகளை கேட்பதன் மூலமும் பிறருடைய கருத்தினை நாம் அறிந்துகொள்ள முடியும். எனவே ஒவ்வொரு நாளும் ஒரு நல்ல செய்தித்தாளை எடுத்து ஆர்வமுடனும் விமர்சிக்கும் நோக்கோடும் படிக்கவும்.

நம்முடைய பொழுது போக்கு, வேலை முதலியவற்றோடு தொடர்புடைய பொருள்கள் நமக்கு படிப்பதற்கு விருப்பமிக்கதாக இருக்கும். எனவே ஒருவன் அவனுக்கு கிடைக்கின்ற செய்திகளையெல்லாம் தீர அறிந்து வைத்து கொள்வது நல்லது. அப்படி செய்தால் குறைந்தது நாம் ஓரிரு பொருள்களில் சராசரிக்கு மேம்பட்டவர்களாக விளங்குவது உறுதி. இந்த அறிவு மற்ற தலைப்புகளில் விவாதிக்கும் போது மிகவும் பயன்படும். உரையாடலின் போதும் நல்ல பயனுள்ள கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் பயன்படும்.

எவ்வளவு பேருடன் கலந்து பேச முடியுமோ அவ்வளவு பேருடனும் கலந்துரையாடுங்கள். அப்படி உரையாடும்போது மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதிலே உங்கள் கவனத்தை செலுத்துங்கள். ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றில் திறமைமிக்கவர்களாக இருப்பார்கள். நான் ஒருமுறை தெருக் கூட்டும் தொளிலாளியிடம் பேச்சுக் கொடுத்தேன். அவன் பேச ஆரம்பித்ததும் அவனுடைய பேச்சிலே கவனம் செலுத்தினேன். தெருவினைப் பற்றிய குறிப்பு கொடுப்பதில் அவன் திறமை மிக்கவனாக இருக்கக் கண்டு வியந்தேன். பல வகைப்பட்ட சாலைகளைப் பற்றி அவனறிவான், ஏன் சில தெருக்களை தூய்மையாக வைத்துக் கொள்ள முடிகிறது; வேறு சிலவற்றை அவ்வாறு வைத்துக்கொள்ள முடிவதில்லை? என்பதற்கான காரணங்களையும்; கழிவுக் குழாய்களின் தன்மையும்; விளக்குக் கம்பங்களின் தொலைவுகளையும் அவன் மிகவும் நன்றாக அறிந்திருந்தான். நான் அறியாத சில குடும்ப நிகழ்ச்சிகளை அவன் நான் அறிந்துகொள்ள செய்தான்.

நீங்கள் சந்திக்கின்ற ஒவ்வொரு மனிதனும்; அவன் படித்த புத்தக வாயிலாகவோ அன்றி அவன் விரும்பும் பொழுது போக்கு வாயிலாகவோ அல்லது அவன பழகிய நண்பர்களின் வாயிலாகவோ, அறிந்த பல பயனுள்ள கருத்துக்களை உங்களுக்கு சொல்லக் கூடும். அதனை உற்றுக் கவனித்துக் கேட்டால் அது உங்களுடைய நினைவினின்றும் அகலாததாகவும் இருக்கும்.

கேட்பவர்களின் ஆவலைத் தூண்டும் வகையில் உங்களுடைய அறிவை வெளிகாட்ட வேண்டும்.

மற்றவர்களைப் பற்றி அதிகமாக எண்ணுங்கள் அவனுடைய பிரச்சனைகளில் தீர்வு காணுவதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதைத் தெளிவாக சொல்லுங்கள். இதிலே தோல்வி கண்டால் நீங்கள் மற்றவர்களுக்கு சுமையாகி விடுவீர்கள்.

(தொடரும்)

# 'ஆறுகால் மடம்' பரிசுப் போட்டி

## போட்டி 1

விமர்சனப் போட்டி: 'ஆறுகால்மடம்' தொடர் கதையின் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி மதிப்பிடுதல். இதில் கதை, எழுத்து, நடை, கதா பாத்திரங்கள், சம்பவங்கள், வருணனைகள் முதலியவற்றின் தன்மைகளை விபரிக்கலாம்.

## போட்டி 2

'ஆறுகால் மடம்' தொடர் கதையில் உமக்குப் பிடித்த கதாப்பாத்திரம் எது? ஏன் அக்கதாப் பாத்திரம் மட்டும் உமக்குப் பிடித்தது?

**உங்கள் கவனத்திற்கு:**

★ வளர்மதி வாசகர்கள் அனைவரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

★ இரு போட்டிகளிலும் ஒருவர் ஒரே பெயருடன் கலந்து கொள்ளலாம். ஆனால், இரு 'புல்ஸ்காப்' தாளின் பக்கங்களுக்கு மேல் எழுதக் கூடாது; தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதல் வேண்டும்.

★ ஒவ்வொரு போட்டிக்கும் மும்மூன்று புத்தகப் பரிசில்கள் உண்டு.

★ இப்போட்டிகள் பற்றி எத்தகைய கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. மாமாவின் தீர்ப்பே முடிவானது.

★ போட்டியிற் பங்கு பற்றுபவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி ஆகிய தகவல்களை தனியே ஒரு தாளில் எழுதி கட்டுரைகளுடன் இணைக்க வேண்டும்.

★ 31-8-65ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கட்டுரைகள் பரிசீலனைக்கு எடுக்கப்பட மாட்டாது.

★ கீழேயுள்ள முகவரியைக் கத்தரித்து ஒட்டி அனுப்பும் கட்டுரைகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

'வளர்மதி மாமா'
மே/பா சுதந்திரன்
த. பெ. எண், 1183
கொழும்பு.

# முதற் பரிசன்றி வேறொன்றுமறியார்!



மானிப்பாயில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவாளர் தினப் பேச்சுப் போட்டியில் மேற்பிரிவிற்குரிய முதற் பரிசை செல்வி ஜெயகுமாரி சன்முகநாதன் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று வருகிறார். 1964-ம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச கூட்டுறவாளர் தினப் பேச்சுப் போட்டியிலும் இவர் முதற்பரிசை தனதாக்கிக் கொண்டவர். அத்துடன் இவ்வாண்டு வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் நடாத்திய பேச்சுப் போட்டியிலும், விவேகானந்த சபையினர் நடாத்திய பேச்சுப் போட்டியிலும் இவரே முதற்பரிசில்களைப் பெற்றுள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

மானிப்பாய் கிராமசபை ஆயுள்வேத மருத்துவர் திரு. சண்முகநாதனின் மூத்த மகளாவார் செல்வி ஜெயகுமாரி.

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(49)

-அன்ரனி பெர்னாண்டோ, கிரிலப்பனை-

## கண்ணைக் காக்கும் லேசர் கருவி

நமது உடலுறுப்புகளிலே மிக முக்கியமானதாக இருக்கின்றன கண்கள். அதனால் தான் கண்கள் எலும்புகளாலான குழிகளில் பாகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இமைகள் வேறு வேண்டும் போதெல்லாம் 'பட்' டென மூடிக்கொண்டு கண்களைப் பாதுகாக்கின்றன. மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டிய ஒன்றைக் கண்ணை இமை காப்பது போல் காக்கவேண்டுமென்று சொல்வார்கள். கண்ணின் அருமையை விளக்க இதுவே போதுமன்றோ?

இவ்வளவு பாதுகாப்பாக இருந்தும் கண்ணில் பல வகையான நோய்கள் வருகின்றன. அப்போது மருத்துவம் செய்து குணப்படுத்துவது மிகுந்த சிரமமான வேலையாக இருக்கிறது. கண்ணின் வெளிப் புறத்தில் உண்டாகும் வருத்தங்களை எப்படியும் சுகமாக்கி விடலாம். ஆனால் கண்ணின் உள்ளே உண்டாகும் நொய்களுக்கு மருத்துவம் செய்வது எப்படி? மற்ற உறுப்புகளைவெட்டி சிகிச்சை செய்வது போல் கண்ணை வெட்டிச் சிகிச்சை செய்ய முடியாது. நோய் கண்ட கண்பார்வையை இழந்தால் அதை வெட்டி எறிந்து விட்டு வேறு புதுக்கண்ணை அவ்விடத்தில் பொருத்தி விட மட்டுமே இதுவரை காலமும் மருத்துவர்களால் முடிந்தது.

கண்ணின் உட்புறத்தில் உண்டாகும் நோய்களைக் கூட நொடிப் பொழுதில் குணமாக்கும் ஆற்றல் மிக்க அற்புதக்கருவி யொன்றை இப்பொழுது அமெரிக்க அறிவர்கள் கண்டு பிடித்துப் பயன் படுத்தி வருகின்றனர். லேசர் கருவி எனப்படும் இந்தப் புதுமையான கருவி 'லேசர் ஒளி' என்னும் அதிக சக்தி வாய்ந்த ஓர் ஒளியை வெளியேற்றுகிறது. இந்த லேசர் ஒளியைக் கண்ணில் பாய்ச்சி ஒரு கணப்பொழுதில் நோயைக் குணமாக்க முடிகிறது. கண்ணிலுள்ள நுண்ணிய ஒளித்திரை கிழிந்து விட்டால் அதைக்கூட இந்த லேசர் ஒளி கண்ணிமைக்கும் வேளையில் ஒட்டிவிடுகிறது. மிகுந்த சக்திவாய்ந்த ஒளியாக இருந்த போதிலும் கண்ணை எவ்விதத்திலும் பாதிக்காமல் இதைக் செய்கிறது லேசர் ஒளி.

வெவ்வேறு திசைகளில் பரவிச் செல்லும் தன்மையும், வெவ்வேறு அலை நீளங்களும், வெவ்வேறு அதிர்வெண்களையும் கொண்ட ஒளி அலைகளால் ஆனதே சாதாரண ஒளி. சாதாரண ஒலியிலிருந்து ஒரே திசையில் செல்லும் தன்மையும், ஒரே அலை நீளமும் ஒரே அதிர் வெண்ணும்உள்ள ஒளி அலைகளைப் பிரித்தெடுத்துத் திரட்டி மிகுந்த பிரகாசமும் சக்தியும் வாய்ந்த ஒரு தனி ஒளிக்கதிராக மாற்றுகிறது லேசர் கருவி. இந்தத் தனி ஒளிக்கதிர்தான் லேசர் ஒளி எனப்படுகிறது. இதன் மூலம் மருத்துவம் செய்யும் போது கண்ணில் எந்தவிதமான வலியும் ஏற்படுவதில்லை. எனவே, நோயாளிக்குத் துன்பம் விளைவிக்காமலும் மிக எளிதாகவும் மருத்துவம் செய்து கண்ணைக் காக்கப் பெருந்துணை புரிகிறது லேசர் கருவி.

குறிப்பு.

புதுமைகள் பாரீர் பாரினிலே என்ற தொடர் அடுத்தவாரம் இடம் பெறும் 'நோயாளிகளைப் பற்றித் தகவல் தர ஒரு தனி நிலையம்' என்ற கட்டுரையுடன் முடிவடைகிறது.

## காதல்-கடமை, பாசம்-நீதி இவற்றுக்குள் எழுந்த மோதலின் முடிவு........?

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கும்பனித்தெரு)

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்] **விஜயா** [மட்டக்களப்பு] **மொடேர்ன்** (பதுளை)

**விஜிதா** (அட்டன்) **தீவொளி** [நுவரெலியா] **கல்யாணி** [நாவலப்பிட்டி[

**இலட்சுமி** [இரத்தினபுரி] **அயன்** [மன்னர்]

எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, அசோகன், நம்பியார், ரங்கராவ், கண்ணும்பா, சாண்டோ சின்னப்பாதேவர் தோன்றும்

தேவர் பிலிம்ஸ் அளிக்கும்

# நீதிக்குப் பின் பாசம்



## 10-வது இன்பம் தரும் இனிய வாரம்!

**சென்ட்ரல்** (மருதானை) **ஈஸ்டேர்ன்** (சம்மாந்துறை) **நியூவிஜேந்திரா** (அனுராதபுரம்) **சிகிரி** (பண்டாரவளை) **ஈஸ்வரன்** (கிளிநொச்சி)

ஆகிய திரைகளில்!

★ ஜெய்சங்கர் ★ வசந்தா ★ அசோகன் ★ பண்டரிபாய் ★ நாகேஷ் ★ ராமதாஸ்

# இரவும் பகலும்







## விரைவில் எதிர்பாருங்கள்!

கண்ணை இழந்து - கண்ணுன கணவனை இழந்து - கண்ணைப் பெற்றும், வாழ்வையே இழந்து விடும் குருட்டுப் பெண்ணின் உள்ளம் உருக்கும் உயிரோவியம்!

**ஏ. எல். எஸ். புரொடக்ஷன்சாரின் புரட்சித் தயாரிப்பு!**

# சாந்தி



## 4-வது வெற்றி முரசு கொட்டும் வாரம்!

# செல்லமஹால் மற்றும் 6 திரைகளில்!

**பல்லாயிரக் கணக்கான மக்களைப் பரவசத்திலாழ்த்துகிறது!**

ஒரே கதையில்—ஒன்றிய இரு காதல் சோடிகள்-எந்தத் தமிழ் படத்திலுமில்லாத கவர்ச்சியான காதல் கட்டங்கள்!

நாகேஷின் புதுமையான நடிப்பு அத்தனைக்கும் இருப்பிடம்—

**ஜெமினி கணேசன்—சாவித்திரி—முத்துராமன்—மணிமாலா நாகேஷ்—மனோரமா—பண்டரிபாய்—சகஸ்ரநாமம்**

நடித்த

# பூஜைக்கு வந்த மலர்



## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

**டி. கே. ராமச்சந்திரன்—நாகேஷ்—சௌகார் ஜானகி—மனோரமா**

மற்றும் பலர் நடித்த

# நினைப்பதற்கு நேரமில்லை



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.